தர்மசக்கரம்



நள ஒு மாசி மீ சக்கரம் 26 ஆரம் 2

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை – 639 115 · திருச்சி ஜில்லா

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்திவிழா

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, எலமனூர் ரயில்வே ஸ்டேஷன், திருச்சிராப்பள்ளி Dt.

அன்புடையீர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்திவிழா 1977 பிப்ரவரி மீ 27ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5–30 மணிமுதல் 8–30 மணிவரை இங்குக் கொண்டாடப் பெறும். நீங்கள் அனைவரும் அதில் கலந்துகொண்டு திருவருளுக்குப் பாத்திரமாவீர்களாக.

இங்ஙனம்,

சித்பவானந்த

நிகழ்ச்சி முறை

27—2—77 ஞாயிறு மாலை

5-30 மணிமுதல் 7 மணிவரை
குருகுல மாணுக்கர் ஆடல், பாடல், பேச்சு முதலியன
திருவேடகம் விவேகானந்த கல்லூரி மாணவர் ஒயிலாட்டம்

7-00 மணிமுதல் 8-30 மணிவரை குருகுல மாணுக்கர்களால்
வாலிமோக்ஷம் என்னும் நாடகம்

தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. சிற்றுண்டிச்சாலை உண்டு.

ஸ்பெஷல் ரயில்வண்டி வசதி

ஸ்பெஷல் ரயில்வண்டி திருச்சி ஜங்ஷனில் சுமார் மாலை 3-30 மணிக்கு புறப்பட்டு 4-30 மணிக்கு விழா ஆரம்பிக்குமுன் எலமனூர் வந்து சேரவும், இதே ஸ்பெஷல் ரயில்வண்டி, விழா முடிந்தபின் இரவு 9-05மணிக்கு எலமனூரில் புறப்பட்டுத் திருச்சி ஜங்ஷனை 10-15 மணிக்கு அடையவும் ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளது.

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தில் அந்தர்யோகம்

1977ஆ மார்ச் மாதம் 1, 2, 3 தேதிகளாகிய மூன்று தினங்களில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் பிப்ரவரி 28ஆம் தேதி இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ. 4-00 வீதம் செலுத்திப் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும். தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக் குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்	4-30	
எல்லாரும் ஒன்றுகூடி நாம ஜபம்	5-00	5-30
காவேரி ஸ்நானம் முதலியன	5-30	6-30
காலை தியானம்	6-30	7-00
சிற்றுண்டி	7-00	
காலை உபந்யாசம்	8-30	9-30
மௌனம்	9-30	10-30
பஜனை	10-30	11-30
பூஜை, அர்ச்சனை	11-30	12-00

மாலை

	மணிமுதல்	மணிவரை
போஜனம், ஓய்வு	12-00	2-30
மாலை உபந்யாசம்	2-30	3-30
தனியாக வாசித்தல்	3-30	4-30
பானம், யோகாசனம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-00
நாம ஜபம், ஆரத்ரிகம்	6-00	6-15
தியானம்	6-15	7-00
இரவு போஜனம்	7-00	
சத் சம்பாஷணை	8-30	9-30
நித்திரை	10-00	

உபந்யாசங்கள் :— யோகம், பக்தி. ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். சத் சம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம்.

12.2.77.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 26	நள ஹூ மாசி மீ	ஆரம் 2

பொருளடக்கம்

சந்தா விவரம்

1. ஆண்டு சந்தா ரூ. 10

ரூ. 10 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

2. சகாய சந்தா ரூ. 5

தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பத்து செலுத்த இயலாதவர்கள் ரூபாய் ஐந்து மட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடு செய்துகொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பத்து செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

3. டிபாஸிட் சந்தா ரூ. 100

ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கர பத்திரிகை தங்களுக்கு வந்துகொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்தி புதுப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும் பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

உள்நாடு தனி இதழ். ரூ 1-00 வெளி நாடு வருட சந்தா ரூ. 20-00

வேண்டுகோள்

மூன்று புதிய சந்தாக்களைச் சேர்த்து அனுப்பும்படியாக கார்த்திகை இதழில் சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் தந்திருந்தோம். புதிய சந்தாக்கள் சேர்த்ததை எங்களுக்கு அறிவிக்க வெள்ளைக் கார்டு ஒன்றையும் அதில் இணைத்தோம். இது வரை புதிய சந்தாக்களைச் சேர்த்து அனுப்பாதவர்களை உடன் முயற்சி எடுத்து சந்தாக்களைச் சேர்த்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். இது ஒரு நல்ல தொண்டு ஆகும்.

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—உசிலம்பட்டியில் 27—2—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: நாடார் சரஸ்வதி உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

மதுரை ஜில்லா—கம்பத்தில் 13—3—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ வாசவி கன்னிகா பரமேஸ்வரி கல்யாண மஹால்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

கோவை—சித்திரச்சாவடியில் 13—3—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவிற்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்

சென்னையில் 13—3—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: புரசவாக்கம் ஸர். M. CT. முத்தையா செட்டியார் மாணவர் உயர்நிலைப் பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும் தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 26 || நள ஞு மாசி மீ || ஆரம் 2

பிரார்த்தனை

कार्पण्यदोषोपहतस्वभावः पृच्छामि त्वां धर्मसम्मूढचेताः ।
यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम् ॥

— श्रीमद्भगवद्गीता

கார்பண்யதோஷோபஹதஸ்வபாவ: ப்ருச்சாமி
த்வாம் தர்ம ஸம்மூடசேதா: ।
யச்ச்ரேய: ஸ்யாந்நிஸ்சிதம் ப்ரூஹி தன்மே சிஷ்யஸ்
தேऽஹம்சாதிமாம் த்வாம் ப்ரபன்னம் ॥

— ஸ்ரீமத் பகவத்கீதை

சிறுமை என்ற கேட்டினல் நல்லியல்பை இழந்த நான் அறநெறியை அறியப்பெருது மயங்கி உம்மை வினவுகிறேன். எனக்குச் சிறப்பீனுவதை உறுதியாக இயம்பும்; நான் உமது சிஷ்யன், தஞ்சமடைகிறேன், உபதேசித்தருளும்.

நன்றறியேன் தீதறியேன் நானென்று நின்றவனுர்
என்றறியேன் நான்ஏழை என்னே பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

உன்னை நீ ஓர்ந்து பார்.

உண்மையில் நீதி நிலவுகிறது.

முக்தி யாண்டும் உனக்குரியது.

உண்மை அன்பை வளர்க்கிறது.

அடிமை மனப்பான்மையை அகற்று.

ஊக்கத்துடனும், உறுதியுடனும் வினையாற்று.

வாழ்வில் கொண்டுள்ள மோகத்தை மாய்த்திடு.

ஆத்மசக்தியில் எல்லாச் சக்திகளும் அடங்கிவிடுகின்றன.

உண்மையோடு எதையும் சேர்க்கவும் முடியாது; கழிக்கவும் முடியாது.

கண்டிப்பதும், குறைகாண்பதும் வெறும் வாய்ப்பேச்சாளர் பாங்காகும்.

பண்பட்ட உள்ளத்தில் தெய்வீக எண்ணங்கள் குதித்தெழுந்து வருகின்றன.

உடலினும் உள்ளம் சக்திவாய்ந்தது; உள்ளத்தினும் ஆத்மா சக்தி வாய்ந்தது.

துன்பத்தையும், துயரத்தையும் அமைதியான மனப்பான்மையுடன் சகித்துக் கொள்.

வெள்ளரிப்பழம் காம்பினின்று தானாக விலகிக்கொள்வதுபோன்று பண்பட்ட உள்ளம் உலகப்பற்றுதலினின்றும் விலகிக்கொள்கிறது.

ஜீவபோதம் உடையவன் வாயால் எல்லாம் ஈசன்செயல் என்று சொல்லுகிறான்; ஆனால் உள்ளத்தில் ஈசன்செயல் என்று உணர்வதில்லை.

செல்வந்தன் என்னும் அகங்காரத்தைவிடக் கற்றவன் என்னும் அகங்காரம் சூட்சுமமானது. ஆத்மஞானி என்னும் அகங்காரம் கல்விமான் என்னும் அகங்காரத்தைவிட சூட்சுமமானது.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சருக்கும், ஆசிரியருக்கும் இடையில் சம்பாஷணை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

பரமஹம்சதேவர்: "உயிர்களை உருவாக்கிய இறைவன் அவைகளை ஓம்பியும் வருகிறார். அப்படி இறைவன் ஓம்பி வருவதில் என்ன சிறப்பு உள்ளது? உனக்கு ஒரு புத்திரன் பிறப்பதாக வைத்துக்கொள்வோம். அப்புத்திரனை வளர்ப்பதற்கு இன்னொரு மனிதன் வேண்டுமென்று நீ எதிர்பார்க்கிறாயா?"

ஆசிரியர்: "வணக்கத்துக்குரிய ஐயனே, ஒரு மனிதன் ஆத்மீக வாழ்வில் மிக விரைவில் முன்னேற்றமடைகின்றான்; மற்றொரு மனிதன் எவ்வித முற்னேற்றமும் அடைவதில்லை. இதற்கு நீங்கள் என்ன விளக்கம் தருகிறீர்கள்?"

பரமஹம்சதேவர்: "முற்பிறவிகளில் செய்த சாதனைகளின் விளைவு உள்ளத்தில் வாசனை ரூபமாக இருக்கிறது. ஆகையால் முற்பிறவிகளில் சாதனை செய்துள்ள மனிதனுடைய வாசனை இப்பிறப்பில் அவன் விரைவில் முன்னேறுவதற்குத் துணைபுரிகிறது. இதுதான் உண்மை. ஆனால் அவன் திடீரென்று முன்னேற்றமடைந்துவிட்டதாக மக்கள் எண்ணுகிறார்கள். ஒரு மனிதன் காலையில் ஒரு டம்ளர் சாராயம் அருந்தினான். அது அவனைக் குடிவெறியுடையவனாக ஆக்கிவிட்டது. அவன் தாறுமாறாக நடக்க ஆரம்பித்துவிட்டான். ஒரு டம்ளர் சாராயம் அவனை அத்தகைய மதிமயக்கம் உடையவனாக ஆக்கியது குறித்து மக்கள் வியப்படைந்தார்கள். ஆனால் அங்கிருந்தவர்களுள் ஒருவன் பகர்ந்ததாவது: 'அந்த மனிதன் இரவு முழுவதும் சாராயம் அருந்திக்கொண்டு இருந்தான். ஏன் அவன் மயக்கத்துக்கு உள்ளாகமாட்டான்?'

"ஹனுமான் லங்கையை அக்னிக்கு இரையாக்கினான். அதைப் பார்த்த மக்கள் ஒரு குரங்கு நகர்முழுவதையும் எப்படி எரிக்க முடிந்தது என்று ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் அவர்களே பகர்ந்ததாவது: 'சீதையினுடைய துயரமும், ராமனுடைய கோபமும் இந்த லங்கையை எரித்தன. அதுதான் உண்மை.'

"லால்பாபு என்னும் பெரியாருடைய வாழ்வைக் கவனியுங்கள். அவர் மிகுந்த செல்வந்தர். இளமையிலேயே அவருடைய செல்வத்தைத் துறந்துவிட்டு மதுராவில் வைஷ்ணவ சந்நியாசியாக வாழ்ந்து வருகிறார். முற்பிறவியினுடைய நல்ல சம்ஸ்காரங்கள் இல்லாமல் அவரால் அவ்வளவு செல்வத்தையும் திடீரென்று துறக்க முடியுமா? ராணிபவானியைப் பாருங்கள். அந்த அம்மையாரிடத்தில் உள்ள ஞானமும் பக்தியும்தான் என்னே!

"முற்பிறவியில் சத்துவகுணம் நிறையப்பெற்றுள்ள மனிதனுடைய மனம் இப்பிறவியில் நேரே கடவுளிடத்தில் செல்லுகிறது. கடவுளைக் காணவேண்டுமென்ற அவா அவனுக்கு ஏற்படுகிறது. உலகப் பொருள்களிடமிருந்து அவன் மனதைப் பிரித்து எடுத்துவிடுகிறான்.

"கிருஷ்ணதாஸ்பால் இங்கு வந்திருக்கிறார். அவரிடம் ரஜோகுணம் நிறைய இருப்பதைப் பார்த்தேன். ஆனால் ஹிந்து பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து வருகிறார் என்பதை அவருடைய செயல் விளக்கியது. அவர் அறைக்குள் நுழைவதற்கு முன்பு காலணிகளைக் கழற்றி வெளியே வைத்துவிட்டு வந்தார். அவரிடம் நான் சிறிது ஸம்பாஷித்ததும் அவரிடத்தில் விஷயம் ஒன்றுமில்லை என்பதை அறிந்தேன். மனிதனுக்கு அமைந்துள்ள கடமை என்ன என்பதைப்பற்றி அவரிடம் நான் கேட்டேன். அவர் பகர்ந்ததாவது: 'உலகுக்கு நன்மை செய்யவேண்டும். அதுதான் மனிதன் கடமை'. நான் பகர்ந்ததாவது: 'உலகுக்கு நலன் செய்வதற்கு நீங்கள் யார்? நீங்கள் உலகுக்கு என்ன நலன் செய்துவிட முடியும்? உங்களுடைய உதவியைப் பெறுமளவுக்கு உலகம் அவ்வளவு சிறியதாகவிருக்கிறது என்று நீங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறீர்களா?"

நாராயணன் வந்து சேர்ந்தான். அவனைக் காண்பதில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெருமகிழ்ச்சி அடைந்தார். தமக்கு அருகிலிருந்த கட்டிலின் மீது அவனை அமரச் செய்தார். அவனுடைய

உடம்பைத் தட்டிக்கொடுத்தும் அவனுக்கு இனிப்புகள் வழங்கியும் அவன்மீது தமக்கிருந்த அன்பை ஸ்ரீ ராமகிருஷ்ணர் வெளிப்படுத்தினர். பிறகு 'உனக்கு ஜலம் வேண்டுமா' என்று அன்போடு கேட்டார். நாராயணன் மஹேந்திரருடைய பள்ளியில் மாணுக்கனுக இருந்தவன். அவன் ராமகிருஷ்ணரைப் பார்க்கப்போவதை அவன் வீட்டார் விரும்பவில்லை. எனவே அவன் வீட்டார் அவனை அடிக்கவும் செய்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் புன்முறுவல் பூத்தவராக நாராயணனிடம் பகர்ந்ததாவது: "நீ தோல் சொக்காயை அணிந்துகொள்வது நல்லது. அப்பொழுது உன்னுடைய வீட்டார் உன்னை அடிப்பது உனக்கு வலிக்காது." ஸ்ரீ ராமகிருஷ்ணர் மேலும் பகர்ந்ததாவது: "ஹரிபாதனை மகனுகவும், தன்னை அவனுடைய தாயாகவும் எண்ணி ஹரிபாதனேடு இணக்கம் வைத்திருந்த மாது ஒருத்தி அன்ருெரு நாள் இங்கு வந்திருந்தாள். வைஷ்ணவ சம்பிரதாயத்தில் சிற்றின்ப மார்க்கத்தைச் சமயத்துறையில் கையாளுகின்ற கோஷ்பாரா என்னும் பிரிவுள்ளது. அம்மாது அப்பிரிவைச் சேர்ந்தவளாக இருந்தாள். ஆகையால் ஹரிபாதனுக்கு அம்மாதோடு இணக்கம் வைப்பதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று அடிக்கடி கூறி இருக்கின்றேன்."

ஸ்ரீராமகிருஷ்ணர்: (மஹேந்திரரைப்பார்த்து) "அன்ருெருநாள் நீலகண்டன் இங்கு வந்திருந்தான். அவனிடம் இருந்த அருள்தாகம் தான் என்னே! அவன் மீண்டும் ஒருநாள் இங்கு வருவதாகவும், பாடுவதாகவும் கூறினன். அவனேடு சேர்ந்த கூட்டம் ஆடவும் செய்வார்கள். அவர்களைப் பார்ப்பதற்காக நீ ஏன் போகக்கூடாது? (ராம்லாலைப்பார்த்து) அதோ, அந்த அறையில் இருக்கும் விளக்கில் எண்ணெய் இல்லை. விளக்கில் எண்ணெய் ஊற்றுவதற்கு வேலைக்காரன் தவறிவிட்டான். அதற்கு வேண்டிய எண்ணெயை ஊற்று."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அறையில் தெற்குப் புற வராண்டாவில் இங்கும் அங்கும் உலாவிக் கொண்டு இருந்தார். தம்முடைய அறையின் மேற்குப்புறத்தில் அரைவட்டமாக இருந்த மண்டபத்தில் நின்று இடையிடையே கங்கையைப் பார்த்தார். சிறிதுநேரத்திற்குப் பின் தம்முடைய அறைக்குத் திரும்பிச் சென்று ஆங்கிருந்த சிறிய கட்டிலின்மீது அமர்ந்தார். அப்பொழுது மாலை மூன்றுமணி. பக்தர்கள் தரையின் மீது அமர்ந்தார்கள். பக்தர்களுக்கு முன் பரமஹம்சர் மௌனமாக அமர்ந்திருந்தார். அடிக்கடி அவ்வறையின் சுவரில் மாட்டப் பட்டிருந்த படங்களை உற்றுக் கவனித்து வந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அமர்ந்திருந்ததற்கு இடது புறமாக ஸரஸ்வதி தேவியினுடைய படம் இருந்தது. அதற்கப்பால் கௌராங்கரும், நித்தியானந்தரும் தங்களுடைய பக்தர்களோடு கீர்த்தனை பாடிக்கொண்டிருக்கும் படமும் இருந்தது. பரமஹம்சருக்கு முன்பு துருவன், பிரஹ்லாதன், காளி ஆகிய தெய்வங்களின் திரு உருவப்படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அவருக்கு வலதுபுறமாக ராஜராஜேச்வரியின் படம் சுவரில் மாட்டப்பட்டிருந்தது. அவருக்குப் பின்னல் கிறிஸ்துநாதருடைய படம் இருந்தது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மஹேந்திரர் பக்கம் திரும்பிப் பகர்ந்ததாவது: "ஒருவனுடைய அறையில் சான்ருேர்களுடைய படம் வைத்திருப்பது நல்லது என்பதை அறிந்துகொள். காலையில் எழுந்ததும் மற்றவர்களுடைய முகங்களைப் பார்ப்பதைவிடச் சான்ருேர்களுடைய முகங்களைப் பார்ப்பது நல்லதல்லவா! சத்துவ குணம் படைத்தவர்கள் சான்ருேர்களுடைய படங்களையும், தெய்வங்களின் படங்களையும் தங்களுடைய அறையில் மாட்டிவைத்திருப்பார்கள். ரஜோகுணம் படைத்த மக்கள் தெய்வீகப் படங்களுக்குப் பதிலாகச் செல்வந்தர்கள், அரசர்கள், அரசிகள், வேல்ஸ் இளவரசன், ஆங்கிலேய ஆண்களும் பெண்களும் சேர்ந்து நடனமாடுவது போன்ற படங்கள்— இவை போன்ற படங்களை மாட்டி வைத்திருப்பார்கள். அத்தகைய படங்கள் மாட்டியிருப்பது அவர்களுடைய ரஜோகுணத்தைக் காட்டுகிறது.

"சேரிடம் அறிந்துசேர் என்பது பழமொழி. யாரிடம் பழகுகின்ருேமோ அவர்களுடைய இயல்பு நமக்கும் வருகின்றது. மோசமான படங்களைப் பார்ப்பதுகூட நமக்குத் தீமையை விளைவிக்கும். நாம் நமக்கு ஒத்த இயல்புடையவர்களுடைய சேர்க்கையைப் பெற விரும்பு

வோம். பரமஹம்சருடைய சுபாவம் குழந்தைகளுடைய சுபாவத்தை ஒத்திருக்கும். ஆகையால் அவர்கள் தங்களுக்குப் பக்கத்தில் ஐந்து அல்லது ஆறு வயதுடைய சிறுர்களை வைத்துக் கொள்ள விரும்புவார்கள். சிறுவர்கள் தங்களோடு இருப்பதற்குப் பரமஹம்சர்கள் அனுமதிக்கின்றுர்கள். பரமஹம்ச நிலையை அடைந்தவர் சிறுவர்களுடைய கூட்டத்தை விரும்புகிறுர்கள். பரமஹம்சர்கள் சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களை வென்றவர்களாக இருக்கிறுர்கள். சிறுவர்களிடம் இன்னும் அக்குணங்கள் தலையெடுக்காமல் இருக்கின்றன. வயது வரவர சிறுவர்களிடம் அக்குணங்கள் தோற்றத்திற்கு வர ஆரம்பிக்கின்றன. மரங்களைப் பார்த்ததும் மனிதனது உள்ளத்தில் பண்டைக்கால ரிஷிகளுடைய குடில்களின் தோற்றம் உண்டாகிறது. அக்குடில்களில் ரிஷிகள் தவம் புரிகின்ற காட்சியும் மனக்கண்ணில் தோன்றுகிறது.''

சிந்திப்பகுதியிலிருந்து பிராமணர் ஒருவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அறைக்குள் சென்று அவரை நமஸ்கரித்தார். காசி சர்வ கலாசாலையில் அவர் வேதாந்தம் கற்றிருந்தார். திடகாத்திரமான சரீரமும், புன்முறுவல் பூத்த முகமும் உடையவராக இருந்தார்.

பரமஹம்சதேவர்: '' ஓ பண்டிதரே, சௌக்கியமாக இருக்கிறீர்களா? நீங்கள் நீண்ட நாட்களாக இங்கு வரவில்லை.''

பண்டிதர்: (புன்சிரிப்புடன்) ''ஐயனே! உலகக் காரியங்கள் எனக்கு அதிகம் உள்ளன. எனக்கு ஓய்வு கிடைப்பது மிகவும் குறைவு என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.''

பண்டிதர் ராமகிருஷ்ணருடைய அறையில் அமர்ந்தார். பரமஹம்சர் அவருடன் பேசத் துவங்கினர்.

பரமஹம்சதேவர்: ''நீங்கள் காசியில் நீண்ட காலம் இருந்திருக்கிறீர்கள். காசியில் நீங்கள் என்ன பார்த்தீர்கள் என்பதை எங்களுக்குச் சொல்லுங்கள். தயானந்தரைப்பற்றியும் எங்களுக்குச் சிறிது சொல்லுங்கள்.''

பண்டிதர்: ''ஆம் ஐயனே. நான் தயானந்தரைக் காசியில் சந்தித்தேன். நீங்களும் அவரைச் சந்தித்திருக்கின்றீர்கள் அல்லவா!''

பரமஹம்சதேவர்: ''நானும் தயானந்தரைப் போய்ப் பார்த்திருக்கின்றேன். நான் போயிருந்த சமயம் அவர் கங்கையின் மறுகரையில் உள்ள தோட்டத்தில் கட்டப்பட்டிருந்த வீட்டில் வசித்து வந்தார். நான் போயிருந்த அன்று கேசவசந்திரசேனரும் அங்கு வருவதாக இருந்தார். சாதகப் பறவை மழை நீரை எவ்வளவு ஆவலோடு எதிர்பார்க்குமோ அவ்வளவு ஆவலோடு தயானந்தர் கேசவசந்திர சேனருடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். தயானந்தர் நன்றுகக் கற்றறிந்தவர். வங்காள மொழியில் வேடிக்கையாகப் பேசுவார். அவர் உருவக்கடவுள் உண்டு என்பதை நம்பினர். ஆனல் கேசவசந்திரசேனருக்குக் கடவுளின் வடிவங்களில் நம்பிக்கையில்லை. தயானந்தர் இங்ஙனம் பகர்வதுண்டு: 'கடவுள் இவ்வண்டத்திலுள்ள பொருள்களையெல்லாம் படைத்திருக்கின்றுர். இவ்வளவையும் படைத்த கடவுளுக்குத் தெய்வ வடிவங்களைப் படைக்க முடியாமல் போய்விடுமா?' வடிவங்களை எல்லாம் கடந்திருப்பதுதான் பரபிரம்மம் என்பது தயானந்தருடைய நம்பிக்கை. கேப்டனும் அங்கிருந்தான். அவன் ராம நாமத்தை ஜபித்துக்கொண்டிருந்தான். தயானந்தர் அவனைப் பார்த்துப் பரிகாசம் செய்தார்.''

பண்டிதர்: ''காசியில் பண்டிதர்கள் நீண்ட விவாதம் செய்வார்கள். பண்டிதர்கள் எல்லாரும் அவருக்கு எதிராக ஒன்று சேர்ந்துகொள்வார்கள். தயானந்தர் மட்டும் தனியாக ஒரு பக்கம் இருப்பார். விவாதம் முதிர்ந்து மிகக் காரசாரமாகப் போய்விடும். அவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காக அந்த இடத்தைவிட்டு ஓடிப்போய்விடலாமா என்று தயானந்தர் நினைப்பார். எல்லாப்பண்டிதர்களும் சேர்ந்து ஒரே குரலில் தயானந்தர் என்ன சொன்னலும் அதை எதிர்க்கவேண்டுமென்று சப்தம் போடுவார்கள்.

''பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மகாத்மாக்கள் ஆவி உலகில் இருந்துவருகிறுர்கள் என்று நம்புகிறுர்கள். சந்திரலோகம், சூரியலோகம், நக்ஷத்திரலோகம்ஆகிய லோகங்களைப்பற்றி அவர்கள் பேசுகிறுர்கள். அந்த லோகங்களுக்கெல்லாம் பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்தவன் தன்னுடைய நுண்ணிய சரீரத்தோடு போகமுடியும் என்கின்றுன்.''

பராபரக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

304. ஒருரையால் வாய்க்குமுண்மைக்
நூல் கோடிப் [கோரனந்த
பேருரையாற் பேசில் என்ன
பேறும் பராபரமே.

ஓர் உரை-ஒரு வேதவாக்கு. பேருரை-பல வேதவாக்குகள். பேறு-பயன்.

சத்தியம், பிரக்ஞானம், ஆனந்தம் என்னும் சொற்களுள் எந்தச் சொல்லைச் சொன்னாலும் அது உண்மைப்பொருளை விளக்குகிறது. 'பிரக்ஞானம் பிரம்மம்' என்பது மஹாவாக்கியம். 'ஆனந்தம் பிரம்மம்' என்பதும் மெய்ப்பொருள் விளக்கம். மெய்ப்பொருளை இங்ஙனம் ஒரு சொல்லால் விளக்கி இருக்கின்றனர். ஆனால் இவற்றின் மூலமாக உண்மையை உணர்பவர்கள் எத்தனைபேர்? மனபரிபாகம் அடைகின்ற பொழுதுதான் ஓர் உரையால் விளக்கும் உண்மைப் பொருள் விளங்குகிறது. 'செத்துத் தொலை' என்று சொன்னது ரமண மஹரிஷிக்கு ஞானவிழிப்பை உண்டாக்கியது. அதை ஓர்ந்து ஓர்ந்து உண்மைப் பொருளை உணர்ந்தார். 'காதற்ற ஊசியும் வாராது' என்பது பட்டினத்தடிகளைப் பெருவாழ்வுக்கு எடுத்துச் சென்றது. அதை ஓர்ந்து ஓர்ந்து பிரபஞ்சத்தைத் தியாகம் செய்துவிட்டு அவர் பரத்தை நாடிச் சென்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நேர் சிஷ்யர் துரியானந்த சுவாமிகள் வேதாந்தத்தை அனுபூதி வாயிலாக உணர்ந்திருந்தார். அவர் பேசினது மிகவும் குறைவு. அனுஷ்டானத்தில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தார். அவரை மெய்ப்பொருளைப் பற்றிப் பேருரை நிகழ்த்த வேண்டுமென்று மடத்திலிருந்த துறவிகள் கேட்டுக்கொண்ட பொழுது அவர் யோகம் என்பது சித்தத்தி லுள்ள விருத்திகளை அழிப்பதாகும் என்று கூறிச் சித்தத்திலுள்ள விருத்திகளை அழித்து விட்டு வாருங்கள். அதன் பிறகு மேற்கொண்டு பேசலாம் என்று உண்மையை அடைவதற்குரிய உபாயத்தைக் காட்டித்தந்தார். உண்மையை அடைவதற்கு இத்தகைய சிறிய வாசகங்கள் போதுமானவையாகவிருக்க ஏராளமான நூல்களைக் காலமெல்லாம் வெறுமனே படித்துக்கொண்டிருப்பதால் யாது பயன்? என்று தாயுமானவர் கேட்கின்றார். மனபரிபாகம் அடையாதவர்கள் ஏராளமாகப் பேசியும், படித்தும் காலத்தை வீணாக்குகிறார்கள். உண்மைப் பொருளை உணர வேண்டும் என்ற அருள் தாகம் கொண்டவர்கள் மஹாவாக்கியம்போன்ற உண்மையை உணர்த்தும் ஒரு வாசகத்தை கொண்டு ஆத்மானுபூதி பெற்றுவிடுகிறார்கள். ஆத்மஞானம் பெறவேண்டுமென்ற அருள்தாகம் இல்லாதவர்கள் சாஸ்திரங்கள் பலவற்றைக் கற்று அறிவு செருக்குடையவர்களாக வாதங்களில் இறங்குகின்றனர். கல்விச் செருக்கு பல நூல்களைப் படிப்பதால் வந்துவிடுவதுண்டு. கல்விச் செருக்கால் பயன் ஒன்றுமில்லை. கற்றதை ஆழ்ந்து சிந்தித்து அருள்நாட்டம் உடையவனாகி ஆத்ம ஞானம் பெறுவதில் நான் தீவிரம் உடையவனாவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

305. சொல்லுஞ் சமயநெறிச்
சுற்றுக்கு ளேசுழலும்
அல்லல் ஒழிவதென் றைக்
கையா பராபரமே.

சுற்றுக்குள் - வட்டத்துக்குள். சுழல்தல்-அகப்பட்டுக்கொள்ளுதல். அல்லல்-துன்பம்.

மாணக்கன் கல்வி கற்பதற்காகப் பள்ளிக்கூடத்துக்கு வருகின்றான். கல்வி கற்கும் வரையில் அவன் பள்ளிக்கூடத்தில் இருப்பது அவசியம். கல்வி கற்றான பிறகு அவன் பள்ளியை விட்டு வெளியேறவேண்டும். காலமெல்லாம் அவன் பள்ளிக்கூடத்திலேயே இருப்பது முன்னேற்றத்துக்கு அறிகுறியன்று. சன்மார்க்க நெறியை அறிந்து கொள்வதற்கு ஏதோ ஒரு சமய நெறியைப் பின்பற்றுவது அவசியம். சன்மார்க்க நெறி எது என்று அறிந்தான பிறகு நாம் பின்பற்றிய சமயநெறிக்குள்ளேயே அகப்பட்டுக்கொண்டு சமயவெறி என்ற துன்பத்துக்கு ஆளாகி விடக்கூடாது. ஆரம்பத்தில் ஒரு சமய நெறியைப் பின்பற்றி அதில் ஆழ்ந்து போக வேண்டும். ஆழ்ந்து போவதற்கிடையில் எல்லாச் சமய நெறிகளும் உண்மையை அறிவதற்கு உபாயங்களாக இருக்கின்றன என்பதை அறிந்து மனதை விரிவடைந்து

போகவும் செய்யவேண்டும். சமய நெறியில் ஆழ்ந்தும் அகன்றும் போவது நல்லது. சமய நெறி ஒன்றில் ஆழ்ந்துபோய் மனம் அகன்று போகாவிட்டால் அது வெறியாக மாறிவிடும். ஏதாவது ஒரு நெறியில் ஆழ்ந்து போகாவிட்டால் மனதுக்கு ஒரு பிடிப்பும் உண்டாகாது. ஆனால் மக்களுள் பெரும்பாலோர் சமயப்பற்று அற்றவர்களாகவோ, சமய வெறி உடையவர்களாகவோ இருக்கிறார்கள். அப்படியிருப்பது சன்மார்க்கமாகாது. சமயப்பற்று வேண்டும்; ஆனால் சமய வெறி கூடாது. சமய வெறியுடையவர்கள் சமயத்தின் பெயரால் உயிர்களுக்குப் பெருந்தீங்கு விளைவித்திருக்கிறார்கள். சமயவெறியுடையவர்கள் தங்களை ஒரு குறுகிய வட்டத்துக்குள் அகப்பட்டவர்களாக வைத்துக்கொள்வதோடு தங்களுடைய தெய்வத்தையும் சிறு தெய்வமாக்கி விடுகிறார்கள். சில உயிர்களை நேசித்து, சில உயிர்களை வெறுக்கும் தெய்வத்தைச் சிறு தெய்வம் என்று தானே பகரவேண்டும். தெய்வத்தின் பெயரால் பிற உயிர்களைத் துன்புறுத்துபவர்கள் தங்கள் தெய்வம் தங்களைத்தான் நேசிக்கிறார், மற்றவர்களை வெறுக்கிறார் என்பதைத் தானே தங்கள் செயலால் காட்டித்தருகிறார்கள். இத்தகையவர்கள் தங்களுக்குச் சிறுமையைத் தேடிக்கொள்வதோடு தங்கள் தெய்வத்துக்கும் இழுக்கைத் தேடியவர்களாகிறார்கள்.

உடலுக்குப்பலவகை உணவுகள் அவசியமாயிருப்பது போன்று உள்ளத்துக்குச் சமயநெறிகள் பல இருப்பது அவசியமாகின்றன. அவரவர்கள் மன இயல்புக்கேற்ற சமயநெறியைப் பின்பற்றலாம். ஆனால் தாங்கள் பின்பற்றுகின்ற சமயநெறி வட்டத்துக்குள் அகப்பட்டுக்கொண்டு திண்டாடக்கூடாது. சமய நெறியைப் பின்பற்றுவதன் மூலம் மனதைத் தூய்மைப்படுத்தி சன்மார்க்கம் எது என்பதை அறிந்து ஞானம்பெற முயலவேண்டும். இறைவா, நான் எந்தச் சமயத்துக்குள்ளும் அகப்பட்டுக் கொள்ளாது சமயச்சழக்கு என்னும் துன்பத்திலிருந்து விடுபட்டு ஞானம் அடைவதற்குரிய ஞானவான் ஆவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

306. பிடித்ததையே தாபிக்கும்
பேரா ணவத்தை
அடித்துத் துரத்தவல்லார்
ஆர்காண் பராபரமே.

மும்மலங்களுள் ஆணவம் ஒரு மலமாகும். அணு என்னும் அடிச்சொல்லிலிருந்து ஆணவம் என்னும் சொல் வந்துள்ளது. அணு என்றால் மிக நுண்ணிய பொருள் என்று பொருள். ஜீவன் தன்னை ஒரு நுண்ணிய உயிராக எண்ணிக் கொள்வது ஆணவம் எனப்படுகிறது. ஆணவம் உடைய மனிதன் தனக்கு ஒரு வியக்தியை உண்டுபண்ணிக் கொள்ளுகிறான். தன்னை ஒரு மனிதனாகக் கருதுவது ஆணவ மலமாகும். உண்மையில் மனிதன் தெய்வ சொரூபமாக இருக்கத் தன்னை மனிதனாக எண்ணிக் கொள்வது ஆணவத்தின் விளைவாகும். விவேகத்தைப் பயன்படுத்தி விசாரம் செய்து இந்த ஆணவத்தை அடித்துத் துரத்த முயலவேண்டும்.

"நாம் மனிதர்கள் அல்லர். நாம் சச்சிதானந்த சொரூபம்" என்று எவ்வளவுதான் எடுத்துப்போதித்தாலும் அவ்வுண்மை ஓரளவு நம் அறிவுக்கு விளங்குகிறதேயன்றி அனுபவத்துக்கு எட்டுவதில்லை. அஹம் பிரம்மாஸ்மி என்பது மஹாவாக்கியம். நான் பிரம்மமாக இருக்கிறேன் என்பது அதன்பொருள். அஹம் பிரம்மாஸ்மி என்று சொல்லுவதற்கிடையில் சரீர உணர்வு நம்மை விட்டு அகல்வதில்லை. சரீர உணர்வு எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் படைத்திருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு ஆணவம் நம்மிடத்துத் தடித்ததாக அமைகின்றது. சரீர உணர்வை வென்றவர்களே ஆணவத்தை அடித்துத் துரத்த வல்லவர்கள் ஆகின்றார்கள். அண்டத்தின் பேரமைப்பில் தன் உணர்வை விரித்துச் செல்பவன் ஆணவத்தை அடித்துத் துரத்த வல்லவன் ஆகின்றான். இறைவா, நீயே இந்தச் சரீரமாக இருக்கின்றாய். நீயே இந்த அண்டமாக இருக்கின்றாய். நீயே இவ்வனைத்துக்கும் அப்பாலாய் இருக்கின்றாய். ஆனால் நான் உன்னை மறந்து இந்தச் சரீரத்தில் கட்டுண்டு கிடக்கின்றேன். இந்தச் சரீர உணர்வைக் கடந்து உன்னுடைய அகண்டாகாரத்தில் என்னை லயமாக்கி என்னிடமுள்ள ஆணவத்தை அடித்துத் துரத்தும் வல்லவனாக என்னை ஆக்குவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

பரபோதம்

(ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருட்செல்வரான சுவாமி பிரமானந்தரின் போதனை)

தியானம் செய்வது மனம் அடங்காதவர்களுக்குக் கஷ்டமான செயல். தியானத்தில் அமர்ந்ததும் மனம் எதை எதையோ எண்ணிக் கொண்டு அலைந்து திரியும். அங்ஙனம் அலைகின்ற மனதை அடக்கும் உபாயம்தான் யாது? ஆரம்பத்தில் மனம் அலைவது நிகழும். அதை விழிப்புடன் கவனித்து அலைகின்ற மனதை அடக்க முயலவேண்டும். வெளியுலக விஷயங்களில் உன் மனமானது பைத்தியங்கொண்டு அலையும். அப்படி அலையும் மனதை நீ கவனித்து அங்ஙனம் போகவொட்டாது அடக்க முயல வேண்டும். தியானத்தில் அமர்ந்தவுடன் தியானம் செய்யத் தொடங்கிவிடாதே. முதலில் பிரத்தியாகாரம் செய்து பழகு. விவேகத்தைப் பயன்படுத்தி வெளியே சென்றுகொண்டிருக்கிற மனதை உள்ளே இழுத்துப் பழகு. ஆமை ஆபத்து வருங்காலத்தில் தன் உறுப்புக்களை ஓட்டிற்குள் இழுத்துக்கொள்வதைப் போன்று ஐம்பொறிகள் வழியாக வெளியே சென்றுகொண்டிருக்கும் மனதை உள்ளே இழுத்துப் பழகவேண்டும். உள்ளே இழுத்த மனதை உன் இஷ்ட தெய்வத்தின் புனித திருவடிகளில் வைத்துப் பொறிகளை அடக்கிவிடு. அதன் பிறகு ஜபமும் தியானமும் செய்யலாம். இம்முறையை நீ சில காலத்திற்குப் பின்பற்றி வருவாயானால் மனம் தானாகவே அலைவதை நிறுத்திவிடும்.

இறைவனுடைய நாமத்தை ஜபிப்பது சுலபமான சாதனையாகும். இடைவிடாது ஜபம் செய்து வந்தால் மனம் அமைதியடைந்து ஒரு ஸ்திர நிலையை அடைகிறது. முடிவில் அது தெய்வத்தினிடத்தில் ஒன்றாகிவிடுகிறது. ஆகையால் ஒழுங்காக ஜபம் செய்துவா. ஜபம் செய்துகொண்டிருக்கும்போதே இஷ்ட தேவதையைக் குறித்து தியானம் செய்து பழகு. ஜபத்தையும் தியானத்தையும் சேர்ந்தேபழகு. நீ விரைவில் சாதனையில் முன்னேறுவதற்கு ஜபமும் தியானமும் உதவியாக இருக்கும்.

ஆத்மசாதனை செய்வது இடைவிடாது நிகழ்ந்து வரவேண்டும். சாதனை இல்லாது ஒருநாள்கூடக் கழியக்கூடாது. சாதனையில் மாறாத உறுதிப்பாடு வந்துவிடுமாயின் நீ முன்னேற்றமடைவாய். தியானத்திற்கென்று ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கு. உனக்கு விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்த நேரத்தில் தியானம் செய்து பழகு. மூன்று ஆண்டுகளுக்குத் தவறாது ஒழுங்குப்பாடான சாதனை செய்து வருவாயானால் உன் உள்ளத்தில் கடவுள் பக்தி உண்டாகும். பக்தி ஏற்படும்போது நீ கடவுளுக்கருகில் இருப்பதை உணர்வாய். கடவுளை நாடிப்போகும்படி உன் உள்ளமே அப்போது உன்னைத் தூண்டிக் கொண்டிருக்கும். கடவுளைத்தவிர வேறு விஷயத்தில் உன் மனதை நீ அப்போது திருப்பமுடியாது. இந்த நிலை உண்டாகும்போது ஆத்மீக வாழ்வு வாழ்வதில் உன் மனதிற்கு மகிழ்ச்சி உண்டாகும்.

கடவுளிடத்து ஆழ்ந்த பக்தி உண்டாக வேண்டும். ஆழ்ந்த பக்தி இல்லாதவர்களுக்குச் சாதனை செய்வது கஷ்டமாக இருக்கும். மேலும் அவர்களுடைய சாதனை மார்க்கமும் நேர்வழியில் அமையாது. ஏகாந்தமும் அவர்களுக்கு நன்மையளிக்காது. மனம் பண்படாதபோது தனிமையில் இருப்பது பயங்கரவிளைவை உண்டு பண்ணும். ஆகையால் ஒத்த இயல்புடைய இருவர்கள் சேர்ந்து வாழலாம். சாதனையில் ஒத்த இயல்புடைய இருவர் சேர்ந்திருக்கும்போது ஒருவர் மற்றவருக்குத் துணைபுரியலாம். ஒருவர் மற்றவருக்கு வழிகாட்டியாகவும் இருக்கலாம். ஆனால் இருவருக்குமேல் எண்ணிக்கை அதிகரிக்குமானால் குழப்பம் உண்டாகிவிடலாம். கூட்டம் அதிகரிக்கின்றபோது பேச்சு உலகைப்பற்றியதாகப்போய் விடும். உலகைப் பற்றிய வீண் பேச்சு மனதை உயர்ந்த நிலையிலிருந்து கீழே இறக்கிவிடும். உலகைப்பற்றிய சிந்தனையும் உலகைப்பற்றிய பேச்சும் மனதை தெய்வத்தை மறக்கும்படி செய்துவிடும். தெய்வச் சிந்தனையும் தெய்வத்தைப் பற்றிய பேச்சும் பக்தியை வளர்க்கும். தெய்வ சிந்தனையும் தெய்வத்தைப்பற்றிய பேச்சும்வளர்வதற்குச் சாதனை புரிந்துவரவேண்டும்.

சாதனையில் இருக்கும்போது மிதமான

ஆகாரம் உண்ண வேண்டும். மிதூண் சாதனைக்கு இடைஞ்சலாக அமையும். வயிறு நிறைய உண்டால் உணவை ஜீரணம் செய்வதிலேயே சக்திமுழுவதும் செலவாகிவிடும். ஜபம், தியானம் செய்வதில் மனேசக்தி வேலே செய்யாது. ஆகையால்தான் உண்பதிலும், ஓய்வெடுத்துக் கொள்வதிலும் நடுநிலே பழகிவர வேண்டும். 'எல்லாவற்றிலும் நடுநிலேயில் இருப்பவனே யோகி' என்று கீதை பகர்கின்றது. அதிகம் உண்பவனுக்கும், உண்ணுது இருப்பவனுக்கும் யோகம் இல்லே. அங்ஙனம் அதிகம் உறங்குபவனுக்கும் அல்லது உறங்காது விழித்திருப்பவனுக்கும் யோகம் இல்லே. ஒவ்வொன்றிலும் அளவுடன் இருப்பவனே யோகியாகின்ருன்.

சத்சங்கமும், ஆசிரமமும் சாதனே செய்பவர்களுக்கு அனுகூலமாக இருக்கின்றன. ஆசிரமங்களில் வாழ்பவர்களுக்குச் சாதனைக்கு வேண்டிய எல்லா வசதிகளும் அமைந்திருக்கின்றன. ஆசிரமவாசிகள் உணவைப் பற்றியோ, உடையைப் பற்றியோ, வேறு எதைப் பற்றியோ கவலேப்பட வேண்டியதில்லே. அவர்களுக்கு வேண்டிய யாவும் உடனுக்குடன் கிடைக்கின்றன. ஆசிரமத்தில் இருந்துகொண்டு உன் முழு மனதையும் சாதனையில் ஈடுபடுத்து. பிரார்த்தனையும் தியானமும் உன் வாழ்வில் முக்கிய இடம் பெறட்டும். நீ நாடோடியாக ஊர் ஊராகச் சுற்றியலேவாயானல் வாழ்வில் ஒரு நலனும் அடைந்துவிட முடியாது. சுற்றி அலேவதில் உன் சக்தியை வீணுக்காது ஒரு நல்ல ஆசிரமத்தில் இருந்து சாதனே புரிவதில் உன் சக்தியைச் செலவழித்து வா.

'மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்பது கோட்பாடு. ஒரு ஆசிரமத்தில் இருக்கும்போது "இங்கிருந்து என்ன பலன் கண்டோம். பல இடங்களேயும் சுற்றிப்பார்த்து அலேந்து திரிவதன் மூலம் மகாத்மா ஆகிவிடலாம். பல இடங்களேயும் சுற்றுவதன் மூலம் ரிஷியாகி விடலாம்" என்று உன் மனம் உனக்குச் சொல்லும். அப்போது உன் மனது உன்னேத் தவருன வழியில் இழுத்துச் செல்கிறது என்பதை அறிந்துகொள். இங்கும் அங்கும் அலேந்து திரிவதன் மூலம் நீ முனி ஆகிவிடமுடியாது. அலேந்து திரிவதன் மூலம் உன் உடலும் உள்ளமும் சோர்வடையும். அப்போது அவை சாதனைக்குத் தகுதியற்றனவாகப்போய்விடும். நல்ல ஆசிரமத்தில் இருந்து இடைவிடாது சாதனே செய்யாது நீ எத்தகைய ஆத்மீக அனுபவத்தையும் பெற்றுவிட முடியாது. ஆத்மீக அனுபவத்தைப் பெறுவதற்குக் குறுக்குவழி எதுவும் இல்லே. வஞ்சனையின் மூலமாகவும் சூழ்ச்சியின் மூலமாகவும் ஆத்மீக அனுபவத்தைப் பெற்றுவிட முடியாது. நல்வாழ்வு வாழ்ந்து மனதைத் தூய்மைப் படுத்தி புலனடக்கம் பழகி வந்தால் மனம் தியானத்திற்குத் தகுதியுடையதாகின்றது. கடவுள் காட்சி பெறவேண்டுமென்ற அருள்நாட்டம் மனதைத் தெய்வத்தின்பால் இழுத்துச் செல்கின்றது. தியானத்தில் மூழ்கித் தெய்வீக உணர்வில் மனதைக் கரைந்து போகும்படி செய். 'மனதற்ற பரிசுத்த நிலேயை அருள்வாய்' என்று தாயுமானவர் பகர்கின்ருர். மனதற்ற பரிசுத்த நிலேயில் தெய்வத்தோடு ஒன்றித்து விடுகின்ருய். அந்நிலே அகண்டாகார நிலேயாகின்றது. தேகத்தில் கட்டுப்பட்டுள்ள நீ, ஜீவன் ஆகின்ருய். சாதனையின் மூலம் சரீரக் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு உணர்வை அகண்டாகார நிலேக்கு எடுத்துச் செல்லும்போது நீ ஜீவன் முக்தனுகின்ருய். சரீரத்தில் கட்டுண்டு கிடப்பது அறியாமை. அகண்டாகார உணர்வைப் பெறுவது அறிவுடைமை. சரீர உணர்வுக்குக் கட்டுப்பட்ட வாழ்வு அடிமை வாழ்வு. சரீர உணர்வுக்குக் கட்டுப்பட்டவன் உலகத்தவர்களுக்கு அடிமையாகின்ருன். சரீர உணர்வை வென்று பழகுபவன் சுதந்திர வாழ்வு வாழ்பவனுகின்ருன். அவன் உலகத்தவருக்கு அடிமையாவதில்லே. உன் உணர்வு சரீரத்திற்குள் கட்டுப்பட்டுக் கிடக்கும்போது சரீர சுகத்தைத் தரக்கூடியவைகளே நீ வழிபடுகின்ருய். உன் உணர்வு அகண்டாகார நிலேக்கு விரிவடையும்போது வாலறிவாக இருக்கின்ற இறைவன் தாளே வணங்குகின்ருய்.

'கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்'

என்று வள்ளுவர் பகர்கின்ருர். பரிபூரண நிலேயில் பரம்பொருள் ஒன்றே உனக்கு உரியதாகின்றது.

வாழ்க்கைத் தத்துவங்கள்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1971ஆம் ஆண்டு திருவேடகம் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[*13*ஆம் பக்கத் தொடர்ச்சி]

பலம் அஸி பலமயிதேஹி என்பது இறைவா, நீ உறுதி படைத்தவனாக இருக்கின்றாய். உறுதியை எனக்குக் கொடுத்தருள்வாயாக! என்று பொருள்படுகிறது. நஅயம் ஆத்மா பலஹீனேன லப்ய: என்பது உபநிஷத் மந்திரம். பலஹீனனால் இந்த ஆத்மா அடையப்படுவதன்று. ஊசிப்புல் கூர்மை வாய்ந்ததாக இருக்கிறது. ஆனால் அது குத்தினால் வளைந்து போகும். சிலந்திப் பூச்சியின் நூல் மிக மெல்லியதாக இருக்கின்றது. அதற்குத் தக்க முறுக்கைக் கொடுத்தால் எஃகுத் தகடு ஒன்றைப் பொத்துக்கொண்டு போய்விடும். ஊசிப்புல் கூர்மையாக இருப்பதோடு உறுதி வாய்ந்ததாக இருக்குமானால் அது குத்துவதற்கு உதவும். உறுதியில்லாததால் அது குத்துவதற்குப் பயன்படுவது இல்லை. நூல் உறுதி வாய்ந்ததாக இருப்பதனால் அது தைப்பதற்குப் பயன்படுகிறது. மனிதன் பலம் படைத்தவனாக இருப்பானானால் வாழ்க்கைக்குத் தகுதியுடையவனாக இருக்கின்றான். பலஹீனனாக்கிக்கொள்ளக்கூடாது. தன்னைப் பலஹீனன் ஆக்குவது ஆத்மசாதனம் ஆகாது. உடல் பலம், உள்ள பலம் ஆகிய இரண்டு பகுதிகள் இருக்கின்றன. உடல் பலமும், உள்ள பலமும் பொருந்தியவராக சுவாமி விவேகானந்தர் இருந்தார். மகாத்மா காந்தி உடல் பலம் பொருந்தியவர் அல்லர். ஆனால் உள்ள பலம் பொருந்தியவராக இருந்தார். சுவாமி விவேகானந்தருடைய உள்ள பலத்துக்கு அவருடைய வாழ்க்கையில் ஒரு சம்பவத்தை எடுத்துக் கொள்வோம். அவருக்கு ஒரு தடவை ஆஸ்த்மா நோய் வந்துவிட்டது. ஆயுர்வேத வைத்தியர் அந்நோய்க்கு மருந்து கொடுத்து முப்பத்தாறு மணிநேரம் அன்னபானம் செய்யக் கூடாது என்று பத்தியம் வைத்தார். சுவாமி விவேகானந்தரும் அதற்கு இசைந்து 'நான் முப்பத்தாறு மணி நேரம் அன்னபானத்தை நினைக்க மாட்டேன்' என்று சங்கல்பித்தார். அவர் சங்கல்பித்தது அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த பிரமச்சரிக்கும் சேர்த்துப் பசி தாகம் இல்லாமல் செய்துவிட்டது. அவருடைய உள்ளம் எத்தகைய உறுதி வாய்ந்தது என்பதை இச்சம்பவம் விளக்குகின்றது.

இனி அவருடைய உடல்உறுதிக்குச் சான்று எடுத்துக்கொள்ளலாம். இரண்டாவது முறையாக அவர் அமெரிக்காவுக்குக் கப்பலில் போய்க்கொண்டிருந்தார். அவருடன் கிறிஸ்துவப் பாதிரி ஒருவர் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். கிறிஸ்துவப் பாதிரியார் இந்து பெண்களைப்பற்றி மற்றொரு பிரயாணியிடம் பரிகாசமாகப் பேசினார். இந்துக்கள் தாலி என்னும் அடிமைக் கயிற்றைக் கட்டி மனைவியரைத் தங்களுக்கு அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றார்கள் என்றார். விவேகானந்தர் அந்தப் பாதிரியாரிடம் "நீர் தத்துவம் தெரியாது பேசுகின்றீர். பொய்ப்பிரசாரம் செய்யாதீர். வாயை மூடிக்கொண்டு வாரும்" என்றார். ஆனால் அப் பாதிரியார் மேலும் பேச வாய் எடுத்தார். "நீர் சும்மா இருக்கப் போகிறீரா அல்லது பொய்ப்பிரச்சாரம் செய்யத்தான் போகிறீரா? இனி நீர் வாயை மூடாவிட்டால் உம்மைத் தூக்கிக் கடலில் வீசியெறியப் போகிறேன்" என்று அவரைத் தூக்கப்போனார். அவர் பயந்துபோய் நான் சும்மா இருந்துகொள்கிறேன் என்று பேச்சை நிறுத்திக்கொண்டார். வீரனாகவும் பலம் படைத்தவனாகவும் இருக்க வேண்டிய இடத்தில் விவேகானந்தர் அங்ஙனம் இருந்து காட்டுகிறார். மற்றொரு நிகழ்ச்சியும் இங்கு குறிப்பிடத் தக்கது. ஒரு சமயம் அவர் இங்கிலாந்தில் இருந்தபொழுது தம்பதியர்கள் இருவர்களோடு ஒரு பண்ணையைப் பார்க்கப் போனார். அப்பண்ணையிலிருந்த காளை ஒன்று கட்டை அவிழ்த்துக்கொண்டு அவர்களை நோக்கி வீராவேசத்தோடு வந்தது. அது வரும் கம்பீரத்தைப் பார்த்த பெண்பால் மூர்ச்சையடைந்துகீழேவிழுந்துவிட்டாள். கணவன் அங்கிருந்து ஓடிப்போய்விட்டார். விவேகானந்தரோ அசையாது அதைப்பார்த்த வண்

ணம் நின்றுகொண்டிருந்தார். அந்தக் காளை அவருக்குப் பக்கத்தில் வந்து சிறிது நேரம் அவரை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் திரும்பிப் போய்விட்டது. காளை திரும்பிப்போன பின்பு ஓடிப்போன கணவன் அங்கு வந்து மனைவியின் முகத்தில் தண்ணீர் தெளித்து மனைவிக்கு மயக்கத்தைத் தெளிவித்தான். தம்பதிகள் இருவரும் விவேகானந்தரைப் பார்த்து, ''நீங்கள் என்ன தீர்மானத்தோடு நின்ற இடத்திலிருந்து அசையாது நின்றீர்கள்'' என்று கேட்டார்கள். ''அந்தக் காளை என்னைத் தூக்கி எறிந்தால் எவ்வளவு உயரம் மேலே போய்க் கீழே விழுவேன் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்'' என்றார். உடல் பலம், உள்ள பலம் இரண்டும் பொருந்தியவர்களுக்குத்தான் இத்தகைய உறுதிப்பாடு இருக்க முடியும். சுவாமி விவேகானந்தர் போன்று உடலிலும், உள்ளத்திலும் பலம் படைத்தவர்களாக இருக்கவேண்டும்.

மகாத்மாகாந்தியின் உள்ள பலத்துக்கு அவருடைய வாழ்க்கையில் சம்பவம் ஒன்றை எடுத்துக்கொள்வோம். இருபத்தேழு நாட்கள் உண்ணாவிரதம் இருந்து அதன் பின் அவர் கொடுத்த வாக்கு மூலம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே ஆட்டம்காண வைத்துவிட்டது. அத்தகைய சங்கல்பம் உறுதி வாய்ந்த உள்ளத்திற்கே சாத்தியம் ஆகிறது. உடலும், உள்ளமும் பலம் பொருந்தியதாக அமையுமிடத்துப் பெரிய காரியம் நிகழ்வதாகிறது.

'' இந்துமதத்தை எங்களுக்கிடையே பரப்புவதற்காக நீங்கள் இங்குவந்திருக்கிறீர்களா?'' என்று விவேகானந்தரை அமெரிக்காவில் கேட்டார்கள். ''இந்து மதத்தையோ, முகம்மதிய மதத்தையோ, புத்த மதத்தையோ, வேறு எந்த மதத்தையோ பரப்புவதற்காக நான் இங்கு வரவில்லை. என்னுடைய சொந்தக் கொள்கையைப் பரப்புவதற்கே நான் இங்கு வந்திருக்கிறேன். மனிதனை மேலான மனிதனாக மாற்றியமைப்பதே என்னுடைய கொள்கை. உபநிஷதங்களின் சாரமாக இருக்கும் பகவத் கீதையைப் படித்துப் பாருங்கள். மனிதன் பலவான் ஆகவேண்டும். என்பதை அது ஆதியோடு அந்தமாகப் புகட்டுகின்றது. வலிவு படைத்தவனே வாழ்வுக்கு உரியவன். பலஹீனன் அழிந்து போகின்றான்'' என்று அமெரிக்கர்களுக்கு விடையளித்தார். கோழைத்தனத்தை ஒதுக்கித் தள்ளி விட்டுப் பலம் பொருந்தியவனாக எழுந்திருப்பாயாக என்று பகவத்கீதையில் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குப் போதிக்கின்றார். கல்லூரி மாணவன் ஒருவன் பகவத்கீதையை எடுத்துக்கொண்டு வந்து விவேகானந்தரிடம் சில ஐயங்களைக்கேட்டான். அவைகளைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம் என்று அவனுக்குவிடையளித்தார். அவன் விடாதுகேட்கவே ''நீ இப்பொழுது கீதையைப் படிக்க வேண்டாம். சத்துள்ள உணவை நீ இப்பொழுது உண்ணவேண்டும். விளையாடும் இடத்துக்குச் சென்று கால்பந்து விளையாட வேண்டும். உடலை உறுதி செய்து கொண்டு பிறகு கீதையைப் படி. அப்பொழுதுதான் நீ கீதையை அறிந்துகொள்ள முடியும்'' என்று அவனுக்கு அறிவுரை கூறினார். சிங்கத்தின் பலத்தை யானையும், யானையின் பலத்தை சிங்கமும் அறிந்துகொள்ளமுடியும். அவ்விரண்டையும் கொசு ஒன்று தாக்கப்போனால் அவற்றின் பலத்தை அது அறிந்துகொள்ளமுடியுமா? சர்வசக்தி மயமாக இருக்கும் ஆத்மாவைச்சக்திமான்தான் அறிந்துகொள்ள முடியும். மற்றவர்கள் அறிந்துகொள்ள முடியாது. கோழைக்கு இவ்வுலகமும் இல்லை; மறு உலகமும் இல்லை. வெறும் வாய்ப்பேச்சால் வேதாந்தத்தை அறிந்துகொள்ள முடியாது. பலம் படைத்தவன்தான் பிரபஞ்ச வாழ்க்கைக்கும், பாரமார்த்திக வாழ்க்கைக்கும் தகுதி உடையவனாகின்றான். எங்கு உறுதியைக் காண்கின்றோமோ அதைப் பாராட்டுமிடத்து அது நல்ல ஆராதனை ஆகிறது. உடல் பலம் இல்லாத இடத்தும், உள்ளம் தளராது இருப்பது பாராட்டத்தக்க நிலையே ஆகும். உடலும், உள்ளமும் பலம் பொருந்தி இருப்பதே சிறந்த நிலையாகும்.

ஓஜோஸி ஓஜோமயி தேஹி என்பது இறைவா, நீ ஓஜஸ் மயமாக இருக்கின்றாய். நீ என்னை ஓஜஸ் மயமாக்குவாயாக என்று பொருள்படுகிறது. மேனியில் புறத்தே அமைந்துள்ள பொலிவுக்கு தேஜஸ் என்பது பெயர். அந்தக்கரணத்தை உள்முகமாகத் திருப்பி தியானம் பண்ணும்போது உண்டாகும் உள்ளொளிக்கு ஓஜஸ் என்பது பெயர். உள்ளொ

ளியை எனக்குக் கொடு என்று பிரார்த்தனை செய்பவன் முயற்சியற்றவனாக இருப்பானாகில் அவன் செய்த பிரார்த்தனை பொருளற்ற பிரார்த்தனை ஆகிறது. சீலம் நிறைந்த வாழ்க்கை வாழ்வதோடு தியானமும் செய்து வருபவர்கள் உள்ளொளியைக் காணத் தகுதி யுடையவர்களாகிறார்கள். "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி" என்கிறார் மாணிக்க வாசகர். உடல் சம்பந்தமான எண்ணத்தை எல்லாம் விட்டு ஒழித்துப் பாரமார்த்திகப் பேருணர்வில் உடலையும், உள்ளத்தையும் உருக்குவதானது ஊனினை உருக்கி உள் ளொளி பெருக்குவது ஆகிறது. பரமாத்மாவை நாடுகிற நாட்டத்தில் உள்ளமானது கசிந்து உருகும் பொழுது உள்ளொளி தோன்ற ஆரம் பிக்கின்றது. இஷ்ட மூர்த்தியை உள்ளத்தின் கண் தியானம் பண்ணும் பொழுது அவர் சுயஞ் ஜோதி சொருபமாக உள்ளத்தில் இலங்குகின் றார். உள்ளம் பரிசுத்தம் ஆவதற்கு ஏற்ப, அது பரநாட்டம் கொண்டிருப்பதற்கேற்ப ஒளி யைத் தரிசிக்கின்ற பரிபாகம் உள்ளத்துக்கு வருகின்றது. கருங்கல் ஒன்றை எடுத்து நன்றாகத் தேய்த்து ஒப்பமாக்கி மினுக்கெடுத் தால் அதில் நம் முகம் தெரியும். மரத்தை இழைத்து ஒப்பமாக்கி அதற்கு வார்னிஷ் அடித்தால் அதில் நம் முகம் தெரியும். இரும் பைச் சுத்தப்படுத்தினால் அது தேனிரும்பா கிறது. அவ்விதமே தாமிரம், பித்தளை, வெள்ளி, தங்கம் ஆகியவை தூயது ஆக ஆக அவற்றிற்கு ஒளிரும் தன்மை உண்டாகின்றது. உள்ளத்தைப் பண்படுத்துகின்ற இடத்து அதன்கண் ஓஜஸ் உண்டாகின்றது. உள்ளத் தில் ஓஜஸை வளர்ப்பவன்தான் வாழ்வாங்கு வாழ்கின்றவன் ஆகின்றான்.

மன்யுரஸி மன்யுமயிதேஹிஎன்பதுஇறைவா, நீ கேட்டை வெறுக்கின்ற பாங்குடையவனாய் இருக்கின்றாய். கேட்டை வெறுக்கின்றபாங்கை எனக்கு நல்குவாயாக என்று பொருள்படு கிறது. கேட்டுக்கு ஆமோதிப்பு இல்லை என் பதைச் செயலில் காட்டுகின்ற பொழுதுதான் நாம் பண்பாடு அடைந்தவர்களாகின்றோம். இராமன் கேட்டுக்கு எதிராக மூன்றுதடவை நடவடிக்கை எடுக்கின்றான். மூன்று முறையும் இராமபாணம் வீண்போகாது வேலை செய் கிறது. இராமன் கேட்டை நிராகரிப்பதைச் செயல் மூலம் காட்டுகின்றான். இராமாய ணத்தை ஆராய்ச்சி செய்கின்ற நாம் இராமனு டைய ஜீவிதத்திலிருந்து அதை நாம் கற்றுக் கொள்ளவேண்டும். கேடு வளர்வதற்குத் தடை போடாதிருப்போமானால் நாம் தவறு செய்தவர்கள் ஆகின்றோம். வயலில் நெல் லோடு சேர்ந்து களையும் தோன்றி வருகிறது. களையைப் பிடுங்கி எறியாவிட்டால் நெற்பயிர் நன்றாக வளராது. களையை வளரவிடுபவன் நல்ல கிருஷிகன் அல்லன். களையைக் களைந்து எறிந்து நெற்பயிரை வளர்ப்பவன்தான் நல்ல கிருஷிகன் ஆகின்றான். மக்களிடையே கேடு வளர்வதுண்டு. கேட்டை அழித்துத் தள்ளு பவன் வாழ்வுக்குத் தகுதியுடையவனாகின்றான். இராமன் கேட்டைக் கண்டவிடத்து அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்தான்.

முதலில் தாடகை வதத்தின் மூலம் கேட் டைத் தகர்த்தெறிந்தான். குருவின் உத்தரவுப் படி தாடகையை வதம் செய்தான். இரண்டா வதாக இராமன் பரசுராமர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப் பொழுது இராமனுக்கு வயது பதினேழு. பரசு ராமர் க்ஷத்திரிய கூட்டத்தையே அழித்துத் தள்ளவேண்டும் என்னும் வெறிபிடித்தவராக இருந்தார். சீதையை மணம் செய்துகொண்டு மிதிலாபுரியிலிருந்து இராமன் பெருங்கூட் டத்துடன் அயோத்திக்குப் போய்க்கொண்டி ருந்தான். வழியில் பரசுராமர் கோபாவேசத் துடன் வந்து இராமனைச் சண்டைக்கு இழுத் தார். பரசுராமர் இராமனைத் தாக்க வந்த பொழுது தசரதர் மூர்ச்சை அடைந்துவிட்டார். இராமன் சாந்தமே வடிவெடுத்தவனாகப் பரசு ராமர் முன் நின்றான். "க்ஷத்திரியப் பதரே, மிதிலையில் துருப்பிடித்துக்கிடந்த சிவதனுஸை ஒடித்து வீரனாகிவிட்டாய். இதோ! என் கையில் இருக்கும் விஷ்ணுதனுஸை நாண் ஏற்றி உன் வீரத்தை வெளிப்படுத்து பார்க் கலாம். நீ நாண் ஏற்றாவிட்டால் நீ ஒன்றுக்கும் உதவாத கயவன் என்று உன்னை ஒழித்துக்கட் டப்போகின்றேன்" என்று பரசுராமர் அதட்டி னார். "சாந்தத்தையும் இனிமையையும் தங்களைப் போன்ற பெரியவர்களிடமிருந்து சிறியவர்களா கிய நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். வய

திலும், அனுபவத்திலும் முதிர்ந்துள்ள தாங்களே இத்தகைய பதைபதைப்பும், முன்கோபமும் உடையவராக இருந்தால் சாந்தத்தையும் இனிமையையும் நாங்கள் யாரிடமிருந்து கற்றுக் கொள்வது!''என்று இராமன் சாந்தமாகப் பதில் கூறினன். இராமனுடைய இப்பேச்சைக் கேட்டதும் பரசுராமருக்குப் பாதி வேகம் தணிந்துவிட்டது. மேலும் இராமன் பகர்ந்ததாவது: ''உங்கள் கையில் இருக்கும் விஷ்ணு தனுஸைத் தாருங்கள்.உங்களுடையஆணையை நிறைவேற்றுவதற்காக அதில் நாண் ஏற்ற முயலுகின்றேனேயன்றி என்னுடைய பராக்கிரமத்தை உங்கள் முன் நான் காட்டுவதற்காக அன்று'' என்று கூறி, அவருடைய கையிலிருந்த விஷ்ணுதனுஸை இராமன் வாங்கினன். வில்லில் நாண் ஏற்றிய பின் இராமன் பகர்ந்ததாவது: ''நான் தொடுத்த அம்பு ஒரு நாளும் வீண்போகாது. தேவரீராகிய நீங்கள் அதற்கு ஓர் இலக்கு பகர்ந்தருள்வீர்களாக!'' ''என்னுடைய ஆணவ அகங்காரத்தின் மீது இராமா, உன் பாணத்தைச் செலுத்து'' என்ருர் பரசுராமர். அங்ஙனமே இராமபாணம் செலுத்தப்பட்டது. பரசுராமருடைய ஆணவ அகங்காரம் அழிந்தது. ''இராமா, நீ யார் என்பதை இப்பொழுது நான் அறிந்துகொண்டேன். அடுத்து நான் செய்யவேண்டிய காரியத்தை நீயே எனக்குச் சொல்வாயாக!'' தேவரீர் இமயமலைக்குச் சென்று தவம் செய்து பாக்கியுள்ள மனக் குறைகளையும் நீக்கி யதாஸ்தானம் போய்ச் சேருங்கள்'' என்ருன் இராமன். தீமையை அழிப்பதில் இராமன் பரசுராமரிடம் இங்ஙனம் நடந்துகொண்டான்.

கிஷ்கிந்தையில் வாலியை மறைந்திருந்து இராமன் பாணத்தால் அடித்தான். அது முறையற்றது என்று இன்றைக்கும் வாதிட்டுக்கொண்டிருக்கின்ருர்கள். ஆனல், இராமன் மறைந்திருந்து அடித்ததற்குக் காரணத்தை வாலிக்கு எடுத்துவிளக்கியபொழுது இராமன் செய்தது சரி என்பதை வாலியே ஒத்துக்கொண்டான். வாலி கூறிய ஆட்சேபனைகளாவன: முதல் ஆட்சேபனை ''நாங்கள் வனத்தில் வாழும் விலங்குகள்'' என்பது. அதற்கு இராமன், ''விலங்கினத்தை வேட்டையாட உரிமையுண்டு. விலங்கைக் கொல்வதற்கு முன் எச்சரிக்கை தேவையில்லை'' என்ருன். அதை வாலி ஏற்றுக்கொண்டான். மறைந்திருந்து தாக்கியது நியாயமா என்று வாலி இரண்டாவது ஆட்சேபனையை எழுப்பினன். அதற்கு இராமன், ''நீ ஒரு வரம் பெற்றிருக்கின்ருய். அவ்வரத்தின் பிரகாரம் உன்னை எதிர்த்துப் போர் புரிபவருடைய பாதி பலம் உனக்கு வந்துவிடும். அந்த வரம் பெற்றிருந்ததின் செருக்கால் நீ வரம்புகடந்து போய்விட்டாய். நான் உன் முன் எதிரியாக நின்று என் பலத்தில் பாதியை உனக்குக் கொடுத்து உன்னிடம் தோல்வி அடைவது என்னுடைய வீரத்திற்கு அழகன்று. நீ பெற்ற வரத்தை மீட்டெடுக்க மறைந்து இருந்து உன் மீது அம்பு செலுத்தி, உன்னைத் திருத்தி அமைப்பதற்காக உன் முன் நான் இப்போது நிற்கின்றேன். நான் இப்போது உன் எதிரி அல்லன்'' என்று பதிலளித்தான். ''இராமா! நீ கேடுசெய்வது போன்று எனக்கு நீ மறக்கருணை காட்டியுள்ளாய். நீ எவ்வளவு பெரிய நலன் செய்திருக்கிருய் என்பதை இப்பொழுது நான் அறிகிறேன்'' என்ருன் வாலி.

இனி இராவணன் என்ற அரக்கனை இராமன் தாக்க வேண்டிய நிலை வருகிறது. இராவணனை வழிக்குக் கொண்டுவருவதற்காக இராமன் படிப்படியாக முயல்கின்ருன். ஆனல் இராவணன் மாறி அமையவே இல்லை. கடைசியாக இராமன் ''இராவணா, நீ இனி அழிந்து போவாய். உன் தவறை உணர்ந்து சீதையை என்னிடம் ஒப்படைத்துவிட்டால் நீ உயிர் பிழைக்கலாம்''என்று எச்சரிக்கை செய்தான். ''இராமா! நீ ஒரு மானுடன். நீயா என்னை அழிக்கப்போகின்ருய்!'' என்ருன் இராவணன். இராமன் பிரமாஸ்திரத்தை அவன்மீது தொடுத்து அவனை அழிக்கின்ருன். இராமன் கருணா மூர்த்தியாக இருந்து அந்தந்த இடத்துக்கேற்ற நடவடிக்கை எடுத்துக் கேட்டைத் தகர்த்தெறிந்தான். இராமன் போன்று தன்னால் இயன்றளவு கேட்டை எதிர்த்துப்போராடத் தெரிந்துகொண்டவனே வாழத் தெரிந்தவன் ஆகின்ருன்.

சஹோஸி சஹோமயிதேஹி என்பது இறைவா, நீ சகிப்புத் தன்மை வடிவெடுத்தவ

ஞய் இருக்கின்ருய். எனக்கு நீ சகிப்புத் தன்மையைத் தந்தருள்வாயாக என்ற பொருள் தருகிறது. திதிக்ஷை அல்லது சகித்துப் பழகுவது சிறந்த ஆத்ம சாதனம் ஆகிறது. நமக்கு வரும் துன்பம் அல்லது கேட்டை எவ்வளவுக்கெவ்வளவு சகித்துப் பழகுகின்ருேமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் உறுதி படைத்தவர்கள் ஆகின்ருேம். கேட்டை எதிர்ப்பது என்பதற்கும், கேட்டைச் சகிப்பது என்பதற்கும் வித்தியாசம் தெரிந்து கொள்ளவேண்டும். நமக்குப் புறத்தேயிருந்து நம்மைத் தாக்கிக் கெடுக்க வரும் ஒன்றை எதிர்த்துப் போராடியாக வேண்டும். இராவணன் உலகிலுள்ள மக்களுக்குத் தன் வலிமையினல் தீங்கு செய்து வந்தான். எனவே, அவனை எதிர்த்துப் போர் புரிந்து இராமன் அவனை அழித்தான். இனி கேட்டைச் சகிப்பது என்பது நம்முடலுக்கு வரும் நோயைப் பொறுத்துப் பழகுவது ஆகும். நோய் கேடானது. நோய்க்கு இடம் தரேல் என்பது கோட்பாடு. நோய் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாகும். நோய் வந்து விட்டால் உடனே டாக்டரிடம் செல்வது நமது போக்கு. சில நோய்களுக்கு அப்படிச் செய்வதுதான் நல்லது. சில நோய்களை நாம் பொறுத்துப் பழகலாம். நம் உடலுக்கு ஜுரம் வந்துவிட்டால் ஆயுர்வேத முறையை அனுசரிக்கும் வைத்தியர் உடனே ஜுரத்துக்கு மருந்து தரமாட்டார். காய்ச்சல் அதிகமாகிப் பின் தணிகிற பொழுதுதான் அதற்கு அவர் மருந்து தருவார். ஆனல் நவீன வைத்திய முறையில் உடலுக்குக் காய்ச்சல் வந்தவுடன் ஊசி மூலம் மருந்தைச் செலுத்திக் காய்ச்சலை இறக்கி விடுகிருர்கள். அப்படிச் செய்வதனல் நோயைச் சகிக்கிற பயிற்சி இல்லாது போய்விடுகிறது. நோயைச் சகித்தல் மூலமாக உடல் உறுதி பெறுகிறது. செடி ஒன்று காற்றில் அசைந்தும் வெய்யிலில் காய்ந்தும் உறுதி பெறுகிறது. அங்ஙனம் நோயின் மூலம் உடல் உறுதி பெறுகிறது. உடலுக்கு நோய் வரும்போது அது உடலிலுள்ள துர்நீரை அப்புறப்படுத்த உதவுகிறது. நோய் உடலில் அதிகரிப்பதற்குச் சந்தர்ப்பம் தருவதற்கேற்ப உடலில் உள்ள துர்நீர் வெளியேறுகிறது. நோயை உடனே அமுக்கி வைத்தால் அது மற்றொரு நோயாகக் கிளம்பும். ஓர் வரம்புக்கு உட்பட்டு இருக்கிற வரையில் நோயைச் சகித்துப் பழகலாம். அப்பொழுது உடலில் உள்ள கேடுகள் நீங்குகின்றன; உள்ளமும் உறுதி பெறுகிறது. சீதம், உஷ்ணம், லாபம், நஷ்டம், மானம், அவமானம் ஆகியவைகளைச் சகித்துப் பழகுகின்றவளவு உள்ளம் பண்பாடு அடைகின்றது. கோபத்துக்கு இடம் கொடுக்கின்ற அளவு உள்ளம் தளர்ச்சி அடைகிறது; உடலிலும் விஷம் பரவுகிறது. உடலில் ஒரு கட்டி வந்துவிட்டால் அதை அறுக்கவேண்டுமேயென்று நினைத்து அலறுகிறவர்கள் உண்டு. கட்டியை அறுக்கும் பொழுது மட்டும் வேதனைப்பட்டுப் பிறகு சமாளித்துக்கொள்பவர்கள் சிறிது திதிக்ஷை பழகினவர்கள் ஆகிருர்கள். கட்டி அறுக்கும் பொழுதும் துன்பப்படாதிருப்பவர்கள் சிறந்த முறையில் திதிக்ஷை பழகுகின்ருர்கள்.

துன்பங்களைச் சகித்துப் பழகுதல் நல்ல சாதனை ஆகிறது. "இறைவா, இப்படி ஏன் என்னைத் துன்பத்துக்கு உள்ளாக்குகின்ருய்?" என்று புலம்புவது கோழைத்தனம். "கண்ணு! எனக்கு எப்பொழுதும் சிறிது துன்பத்தைக் கொடுத்துக்கொண்டேயிரு. நீ துன்பத்தைத்தராவிட்டால் ஒருவேளை உன்னை நான் மறந்துவிட நேரிடும். இங்ஙனம் குந்திதேவி பிரார்த்தனை செய்துகொண்டாள். வாழ்வில் துன்பத்தை ஏற்றுப் பழகுவது சகிப்புத் தன்மையைப் பெறுவதாகிறது. சகிப்புத்தன்மை மூலம் கேட்டை நாம் நீக்க முயல்கின்ருேம். மன்னுயிர்களுக்குக் கேடு வராதுபாதுகாப்பதற்காகக் கேட்டைஒழித்துத் தள்ளுவது கேட்டை வெறுப்பதாகும். இதுவரை ஆராய்ந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவது சிறந்த ஆத்மசாதனம் ஆகிறது. இங்ஙனம் நம்மை நாம் பண்படுத்தி வந்தால் இகத்துக்கும், பரத்துக்கும் நாம் தகுதி உடையவர்களாகின்ருேம். பாரமார்த்திகப் பண்பை ஏற்றுப் பரத்தை அடைவதற்கான பக்குவம் ஆவதே வாழ்க்கைத்தத்துவமாகும். நம்மைப் பக்குவப்படுத்திவர சதா முயன்று வருவோமாக! நம் உள்ளத்தினுள்ளே குடிகொண்டுள்ள பரமன் நம்மைப் பக்குவப் படுத்துவதற்கு நமக்குத் துணையாக இருந்து சதா அருள்புரிந்து வருவாராக! (முற்றும்)

உலகப் பேராசிரியர்கள்

(சுவாமி விவேகானந்தர் 1900ஆம் ஆண்டில் கலிபோர்னியாவைச் சேர்ந்த பசாடினியாவிலுள்ள ஷேக்ஸ்பியர் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[16ஆம் பக்கத் தொடர்ச்சி]

உலகப் பேராசிரியர்கள் என்ன சொல்லியுள்ளார்களோ அதன்படி உலகம் நடக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அவர்களுடைய வாக்கெல்லாம் அனுபவ வாக்காகும். அவர்களுடைய வார்த்தைக்கு அணுகுண்டு போன்ற சக்தி உண்டு. சக்தியில்லாத சொல்லினால் என்ன பயன்? நீ எந்த மொழியில் பேசினால் என்ன? நீ மொழியை எப்படி உபயோகப்படுத்தினால் என்ன? இலக்கணச் சுத்தமாயும், அணி அமைப்போடும் உன்பேச்சு அமைந்திருப்பதனால் என்ன? உன் பேச்சு சொல் அலங்காரத்தோடோ அல்லது அலங்காரமற்றோ இருப்பதால் என்ன? இவைகள் எல்லாம் முக்கியமானவைகள் அல்ல. கொடுப்பதற்கு உன்னிடத்தில் ஏதேனும் நல்லறிவு இருக்கின்றதா? பேச்சைக் கேட்பதனால் என்ன பயன்? பேச்சின் மூலம்கொடுப்பதும், பெறுவதும் நிகழ வேண்டும். கொடுப்பதற்கு உன்னிடத்தில் ஞானம் இருக்குமாயின் அதைக்கொடு. நம்முடைய ஞானச் செல்வத்தை எடுத்து வழங்கும் கருவியாக வார்த்தைகள் இருக்கவேண்டும். ஞானச் செல்வத்தை வழங்குவதற்குச் சொல் ஒருவிதத்தில் பயன்படுகிறது. சிலர் பேசாது ஞானத்தை எடுத்து வழங்கியிருக்கின்றனர். "கல்லாலமரத்தின்கீழ் ஞானச்சாரியர் ஒருவர்அமர்ந்திருப்பதை நான் பார்த்தேன். அவர் பதினாறு வயதுடைய இளைஞராக இருந்தார். அவருக்கு எண்பது வயதுடைய முதியவர்கள் சிஷ்யர்களாக இருந்தார்கள். ஞானச்சாரியர் மௌனோபதேசம் செய்தார். சிஷ்யர்களுடைய ஐயங்கள் யாவும் அகன்று போயின." இத்தகைய பொருளுடைய ஸம்ஸ்கிருத ஸ்லோகம் ஒன்றுண்டு. மௌனமே முடிந்த நிலையாகிறது.

சில சமயங்களில் உலகப் பேராசிரியர்கள் மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றார்கள். மௌனநிலையில் இருந்துகொண்டே மானசீகமாக உண்மையை மற்றொருவருடைய மனத்திற்கு எடுத்துச் செல்வார்கள். அவர்கள் அவதாரமெடுத்து வந்திருப்பது உண்மையை மற்றவர்களுக்குப் புகட்டும் பொருட்டேயாம். அவர்கள் தெய்விக புருஷர்கள். அவர்கள் உத்தரவு போடுவார்கள். அவர்களுடைய உத்தரவை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. உங்களுடைய கிறிஸ்தவ சாஸ்திரத்தில் எத்தகைய அதிகாரத்துடன் ஏசுநாதர் இயம்பி இருக்கிறார் என்பது உங்கள் ஞாபகத்தில் இருக்குமல்லவா? "உலகெங்கும் சென்று உண்மையைப் போதிப்பீர்களாக. நான் உங்களுக்கு ஆணையிட்டதை மற்றவர்களும் பின்பற்றும்படி அவர்களுக்குப் போதிப்பீர்களாக." இங்ஙனம் அவருடைய உபதேசங்கள் ஒரு அதிகாரத் தொனியுடன் அமைந்திருக்கின்றன. உலகம் வழிபட்டு வரும் தத்துவதரிசிகள் அனைவருடைய வாழ்க்கையிலும் இத்தகைய ஆணையிடும் இயல்பைக் காண்பீர்கள்.

தரணியில் வாழும் தெய்வங்களாக உலகப் பேராசிரியர்கள் திகழ்கின்றார்கள். அவர்களை வழிபடாது வேறு யாரைத்தான் நாம் வழிபடுவது? கடவுளைப்பற்றிய கருத்தை என் மனதில் உருவாக்க முயல்கின்றேன். ஆனால் நான் உருவாக்கும் கடவுள் சிறியகடவுளாகத்தான் இருக்கின்றார். அக்கடவுளை வழிபடுவது சிறப்புடையது ஆகாது. இவ்வுலகில் தோன்றி வாழ்வு நடாத்திய பேராசிரியர்களுடைய வாழ்க்கையைக் கண்கொண்டு நான் பார்க்கிறேன். நான் கற்பனை பண்ணும் கடவுளைவிட அவர்கள் உயர்ந்தவர்கள். என்னிடத்திலுள்ள பொருளை ஒருவன் களவாடிவிட்டால் அவனைப் பின் தொடர்ந்து சென்று அவனைப்பிடித்துச் சிறையில் வைக்கும் என் போன்றவர்களிடமிருந்து கருணையைப்பற்றி எத்தகைய கருத்து உண்டாக முடியும்! பிறர் செய்த குற்றத்தைச் சகிக்கும் தன்மையை என்போன்றவர்களிடமிருந்து எப்படி எதிர்பார்ப்பது? என் இயல்புக்கு அப்பால் உயர்ந்த கருத்து என்னிடமிருந்து எப்படி வரமுடியும்? உங்களில் யார் உடல் உணர்

வைக் கடந்து அப்பால் செல்ல முடியும்? யாரும் செல்ல முடியாது. உங்களில் யார் உங்களுடைய மனதையும் கடந்து அப்பால் செல்ல முடியும்? ஒருவராலும் செல்லமுடியாது. உங்களுடைய வாழ்க்கை எந்தத் தரத்தில் இருக்கிறதோ அதற்குமேல் தெய்வீக அன்புபற்றி நீங்கள் எத்தகைய கருத்துக்கொள்ளமுடியும்! நம்முடைய அனுபவத்தில் இல்லாத ஒன்றைப் பற்றி நாம் எவ்விதக் கருத்தையும் கொள்ள முடியாது. ஆகையால் கடவுளைப்பற்றி நான் உருவாக்கும் கருத்துக்கள் உண்மைக்கு ஒத்து இருக்கின்றன என்று சொல்லமுடியாது. உலகப் பேராசிரியர்கள் சொல்லுபவை உண்மையான கருத்துக்கள். அவைகள் கற்பனைகள் அல்ல. அன்பும், கருணையும், தூய்மையும் அவர்கள்பால் இருப்பதை நாம் கற்பனை பண்ண முடியாது. அவர்களுடைய திருவடிகளில் வீழ்ந்து அவர்களைக் கடவுளாக வழிபடுவதில் என்ன வியப்புள்ளது? அதைத் தவிர வேறு என்ன நாம் செய்ய முடியும்? வாய் பேசுவதைவிடச் செயலில் ஈடுபடும் மனிதனைத் தான் நான் காண விரும்புகின்றேன். பேசுவதையெல்லாம் செயலில் காட்டமுடியாது. கடவுளைப்பற்றி சர்ச்சை செய்வது, அருவ வழிபாட்டைப்பற்றிப்பேசுவது,கடவுள் இத்தகையவர் அத்தகையவர் என்று சர்ச்சை செய்வது—இவை எல்லாம் சரியே. எல்லா நாடுகளுக்கும் எல்லா இனத்தவர்களுக்கும் மானுட வடிவில் வந்துள்ள அவர்கள் உண்மையான தெய்வங்கள் ஆகின்றனர். மனித சமுதாயம் இருக்கும் வரையில் அத்தகையவர்கள் வழிபாட்டுக்குரியவர்கள் ஆவார்கள். அவர்களிடத்தில் நமக்கு நம்பிக்கை உள்ளது. உண்மையில் அவர்கள்தாம் கடவுள்கள். வெறும் கடவுள் தத்துவத்தால் ஆவது என்ன?

நான் உங்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்து விடுகிறேன். உலகப் பேராசிரியர்கள் அனைவரையும் என் வாழ்க்கையில் நான் வழிபடுவது சாத்தியம் என்பதையும், இனி வரப்போகும் பேராசிரியர்கள் அனைவருக்கும் நான் வணக்கம் செலுத்தத் தயாராக இருக்கிறேன் என்பதையும் நான் கூறிக்கொள்கிறேன். தன் குழந்தை எந்த உடையில் தன்முன் தோன்றினலும் தாய் அக்குழந்தையை அறிந்துகொள்வாள். தன்குழந்தையை அறிந்துகொள்ளாத தாய் அக்குழந்தைக்குத் தாயாக இருக்க முடியாது. ஒரு தீர்க்கதரிசியின் இடத்தில்தான் கடவுள் தன்மையும் உண்மையும் இருப்பதாகவும் மற்றவர்களிடத்தில் கடவுள் தன்மையும், உண்மையும் இல்லை என்றும் கூறுபவர்களைப்பற்றி நான் ஒரு முடிவுக்கு வந்துள்ளேன். அவர்கள் தெய்வத்தைக் காண்பவர்கள் அல்லர் என்றும், பிறர் கூறியுள்ள சொற்களின் பொருள் தெரியாமல் தங்களை ஒரு மதச் சார்பினராகக் கருதும் குறுகிய மனப்பான்மையினர் என்றும் அவர்களைப் பகரலாம். அரசியலில் ஒரு கட்சியைச் சார்ந்து போகிறவர் போன்று அவர்கள் ஒரு மதப்பிரிவைச் சார்ந்து போகிறவர்கள் ஆகிறார்கள். அவர்கள் அனுஷ்டிப்பதும் உண்மையான மதம் அன்று. அருகில் சுவையான நீர் இருக்க உப்பு நீரைப் பயன்படுத்தும் அறிவிலிகளும் இவ்வுலகத்தில் சிலர் இருக்கின்றனர். தங்களுடைய பெற்றோர்களால் வெட்டப்பட்ட கிணறு என்பதற்காக அக்கிணற்றிலிருந்து கிடைக்கும் உவர் நீரைப் பயன்படுத்தும் அறிவிலிகள் உண்டு. என்னுடைய சிறிய அனுபவத்திலிருந்து நான் ஓர் உண்மையை அறிந்திருக்கிறேன். எந்த மதத்தையும் குறை கூறவேண்டியதில்லை. எந்த மதமும் கொடும் செயல் புரியும்படி யாரையும் தூண்டவில்லை. பின் மக்களைக்கொடுமையில் தூண்டியிருந்தால் அது எந்தச்சக்திதெரியுமா? அரசியல்தான் மக்களைக் கொடுமையின்கண் தூண்டியதே தவிர மதம் எதுவும் மக்களை கொடுமைசெய்யும்படி தூண்டவில்லை. மதத்தின் பெயரால் அரசியல் கொடுமையில்இறங்கினல் அது மதத்தினுடைய பிழையாகுமா?

''என்னுடைய தீர்க்கதரிசிதான் உண்மையான தீர்க்கதரிசி'' என்று ஒருவன் பகர்வானனல் அவன் பகர்வது உண்மையன்று. அவன் மதத்தைப்பற்றி அரிச்சுவடி கூட அறிந்தவன் அல்லன் என்று சொல்லலாம். சமயம் பேச்சாலோ, கொள்கையாலோ, சாதாரண அறிவினலோ தீர்மானிக்கப்படும் கொள்கையன்று. அது உணர்வினல் உணரப்படுவதாகும். உள்ளத்தால் கடவுளை நன்கு உணர முடியும். இவ் அண்டநாயகனுக்கும் அவருடைய தோற்ற

மாக இலங்கும் பிரபஞ்சத்துக்கும் நமக்கும் நெருங்கிய தொடர்வை உணர்த்துவதே சமய மாகும். உங்கள் இறைவனுகிய தந்தையின் வீட்டிற்குள் நீங்கள் உண்மையாகவே சென்றிருப்பீர்களானுல் அவருடைய குழந்தைகளை நீங்கள் எப்படி அறியாமலிருக்க முடியும்! அவருடைய குழந்தைகளை அறியாவிட்டால் நீங்கள் தந்தையின் வீட்டிற்குள் சென்றதாகக் கருதப்படமாட்டீர்கள். எல்லாக் காலத்திலும் எல்லா நாடுகளிலும் தோன்றிய ஆத்மீகப் பெரியோர்கள் ஆகிய ஆண்கள், பெண்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் மாறுபட்டவர் அல்லர் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்களாக. எங்கெல்லாம் உண்மையான சமயம் இருக்கின்றதோ எங்கெல்லாம் தெய்வத்தின் சம்பந்தம் இருக்கின்றதோ அங்கு விரிந்த மனதைக் காணலாம். அவ்விரிந்த மனம் தெய்வீக ஒளியை எங்கும் காண்கிறது. முகமதியர்கள் கொடுமை வாய்ந்தவர்களாக இருக்கின்றுர்கள். சமயவெறி உடைய அவர்கள் கூறுவதாவது: "ஒரு கடவுள்தான் இருக்கிறுர். அவர் முகமது என்னும் தீர்க்க தரிசியாவார்." தங்கள் மதத்துக்கு அப்பால் ஒன்றும் இல்லை என்றும், அப்படியிருந்தால் அதை உடனே அழித்துவிடவேண்டும் என்னும் கொள்கை உள்ளவர்கள். தங்கள் கொள்கையில் நம்பிக்கையில்லாத ஆடவர், மகளிர் அனைவரையும் கொன்றுவிடவேண்டும் என்னும் கொள்கையுடையவர்கள். தங்கள் வழிபாட்டிற்குப் புறம்பான வழிபாட்டைத் தகர்த்தெறிய வேண்டும், தங்கள் நூல் போதிக்கும் உண்மைக்குப் புறம்பான நூலைப் பொசுக்கித்தள்ள வேண்டும் என்னும் கொள்கையுடையவர்கள். பசிபிக் கடலிலிருந்து அட்லாண்டிக் கடல் வரையிலுமுள்ள நிலப்பரப்பு முழுவதும் குருதிவெள்ளம் ஓடச் செய்வது எதுவோ அதுதான் முகமதிய மதம். இத்தகைய முகமதியர்க்கிடையிலும் இக்கொடுமைகளையெல்லாம் அகற்றுவதற்கு உண்மையான தத்துவஞானியாக இருந்தவர் அக்கொடுமைகளை எதிர்த்திருக்கிறுர். அப்படி அவர் பேசியதிலிருந்து அவர் சிறிது தெய்வீக சக்தியாவது பெற்றிருக்க வேண்டுமென்பதும் அவர் மீது தெய்வத்தின் ஸ்பரிசம் பட்டிருக்க வேண்டும் என்பதும் புலனுகிறது. மனிதாபிமானத்தோடு நடந்துகொண்டது உண்மையைத் தரிசித்திருக்கிறுரென்பதை வெளியாக்குகிறது.

நவீன பரிணுமவாதக் கொள்கையுடன் அத்வைதம் என்னும் மற்றொரு கொள்கையுமிருக்கிறது. சமயத்துறையில் பழைய கருத்துக்களுக்கு மீண்டும் செல்லுகின்ற இயல்பு நம்மிடையே இருக்கின்றது. புதியது ஏதாவது ஒன்றைப் பற்றிச் சிந்திப்போம். தவருகவிருப்பினும் அதைச் செய்து பார்ப்போம். புதிய வழியில் நாம் லக்ஷியத்தை ஏன் அடையக்கூடாது? தோல்விகள் மூலம் நமக்கு அறிவு வளர்ச்சி உண்டாகலாம். காலம் அகண்டமானது. அந்தச் சுவரைப் பாருங்கள். அது எப்பொழுதாவது பொய் பேசியிருக்கிறதா? ஆனுல் பொய் பேசாததை முன்னிட்டு அது ஏதாவது மேன்மை அடைந்திருக்கிறதா? சுவர் எப்பொழுதும் சுவராகத்தானிருக்கிறது. மனிதன் பொய்யும் புரட்டும் பேசுகின்றுன். ஆனுல் அவன் ஒரு தெய்வமாகவும் ஆகக்கூடும். வெறுமனே சோம்பலுற்றிருப்பதை விடச் செயல்புரிவது மேல். ஆரம்பத்தில் நீ தவறு செய்தாலும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். ஒன்றும் செய்யாததை விட ஏதாவது செய்வது மேல். பசு பொய் பேசுவது இல்லை. ஆனுல் அது யாண்டும் பசுவாகவே இருக்கிறது. ஏதாவது செயல் புரி. சிந்தனைக்கு இடம் கொடு. நீ சிந்திப்பது தவருே சரியோ, அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். ஆனுல் நீ சிந்தித்துப் பழகு. நம் முன்னேர்கள் சென்ற வழி இது அல்ல என்பதற்காக நம்முடைய சிந்தனையை அறவே விட்டொழித்து விட்டு வெறுமனே இருப்பதா? சிந்தனு சக்தியை இழக்கலாமா? செத்ததற்கு நிகராக இருப்பதில் யாது பயன்? சமயத்துறையில் நாமாக சிந்திக்காது வாழ்வை வளப்படுத்தும் எண்ணமில்லாது வாழும் வாழ்க்கையில் யாது பயன்? நாஸ்திகர்கள் ஒருவிதத்தில் உய்வடைய வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் ஏதாவது தவருன முறையிலாவது சிந்திக்கிறுர்கள். சமயத்துறையில் எந்த விதமான சிந்தனையும் செய்யாதவர்கள் சமயத்தைப் பின்பற்றுகிறுர்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் விலங்கனைய வாழ்வு வாழ்கிறுர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். (தொடரும்)

பரம்பொருளின் சாந்நித்தியம்

கடவுள் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கிருர் என்பது உண்மை. கடவுள் யாவரிடத்திலும் இருக்கிருர். ஆனல் எல்லாரும் கடவுளை ஒரே மாதிரியாக உணர்வதில்லை. ஆத்ம போதம் விழித்தெழுவதற்கேற்ற பிரகாரம் ஒவ்வொருவரும் தங்களிடத்திலுள்ள கடவுளை உணர்கிருர்கள். கடவுள் சாந்நித்தியத்தை உணர்வதற்கேற்றவாறு கடவுளிடம் இருந்து உதவி வருகிறது. நாம் அவரை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால் அவர் நம்மை நோக்கிப் பல அடிகள் வருகிருர். ஒரு அடி எடுத்து வைக்கின்ற சிறு முயற்சி நாம் செய்தாக வேண்டும். அவரவர்கள் அடைந்திருக்கின்ற மனபரிபாகத்துக்கேற்ற பிரகாரம், அவரவர் அடைந்திருக்கின்ற ஆத்மீக விழிப்புக்கேற்ற பிரகாரம் கடவுள் ஒவ்வொருவரிடமும் வீற்றிருக்கும் நிலையை ஆராய்வோம்.

ஆத்மீக உணர்வில்லாது உடல்பற்றில் உழன்று கிடப்பவர்கள் உடல் சம்பந்தமான காரியங்களிலேயே கருத்துடையவர்களாக இருக்கிருர்கள். பசியெடுத்தால் உண்பதும், தாகம் எடுத்தால் நீர் பருகுவதும், தூக்கம் வந்தால் உறங்குவதும் ஆகிய சாதாரண செயல்களில் காலம் முழுவதையும் கழிப்பவர்களாய் அவைகளுக்குமேல் ஆத்மீக விழிப்புக்குரிய எந்தச் செயலையும் செய்யாதவர்களாய் பெரும்பாலான மக்கள் இருக்கிருர்கள். வயிற்றுப் பிழைப்புக்காக அலேவதும், இந்திரிய சுகத்திற்காக அடிமை வேலை செய்வதும், போக வாழ்வுக்காக மற்றவரோடு சண்டைபோடுவதும் இலட்சியம் எனக்கொண்டிருக்கிற மக்கள் இருக்கிருர்கள். பொருள் வேண்டும் என்றும், போகம் வேண்டும் என்றும் என்ன பாடுபடுகிருர்கள்? பொருளுக்காகவும், பேர் புகழுக்காகவும் இரவும், பகலும் வெறிபிடித்தவர்களாய் அலேபவர்கள் இருக்கிருர்கள். அவர்கள் நாடுகின்ற நாட்டம் சரியில்லை என்று சொன்னல் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மைதாஸ் என்னும் உலோபி இருந்தான். அவனுக்குப் பொன்னசை ஏராளமாக இருந்தது. அவன் சிறுதேவதையை வழிபாடு செய்தான். அவன் வழிபட்ட சிறுதேவதை அவன் முன் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டது. நான் தொட்டதெல்லாம் பொன்னுக வேண்டுமென்று வரம் கேட்டான். ''இந்த வரம் உனக்கு வேண்டாம். இதனல் நீ துன்பமடைவாயே யொழிய இன்பம் பெறமாட்டாய்'' என்றது தேவதை. ''நான் வேண்டுவது அது ஒன்றையே. அதை நீ எனக்கு வரமாகக் கொடு'' என்று அவ்வரத்தையே வற்புறுத்திக் கேட்டான். ''நீ விரும்பியபடியே வரமளிக்கின்றேன். நான் உனக்கு ஒரு மந்திரம் உபதேசிக்கின்றேன். அதிகாலையில் ஸ்நானம் செய்துவிட்டு அந்த மந்திரத்தை முழுமனதோடு மூன்று தடவை உச்சரிப்பாயானல் நீ தொட்டதெல்லாம் பொன்னுக மாறும்'' என்று கூறி மந்திரத்தை அவனுக்கு உபதேசித்துவிட்டு தேவதை மறைந்தது. மறுநாள் காலை ஸ்நானம் செய்துவிட்டு மந்திரத்தை உச்சரித்தான். மூன்று முறை மந்திரத்தை உச்சரித்ததும் அவன் கைவைத்திருந்த ஆசனம் பொன்மயமாயிற்று. அவன் அறையிலுள்ள ஒவ்வொரு சாமானையும் தன் கைகளால் தொட்டான். அவன் கைபட்ட யாவும் பொன்னுக மாறின. மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். இனி, எனக்கு என்ன குறை என்று எக்களிப்புக்கொண்டான். ஆனல் அவனடைந்த மகிழ்ச்சி நீடித்திருக்கவில்லை. பசி வந்தபொழுது காலைச் சிற்றுண்டி அருந்த உணவில் கைவைத்தான். உணவு பொன்கட்டியாக மாறியது. பசி என்னும் துன்பத்துக்கு ஆளானன். சிறிது நேரத்துக்குள் அவனுடைய ஒரே புதல்வன் அவனை நோக்கி ஓடிவந்தான். கண்மணி என்று மகனைக் கட்டி அணைத்தான். மகன் தங்கக் கட்டியாக மாறிவிட்டான். தன்னுடைய மடமையை எண்ணி பெருந்துயரம் அடைந்தான். வரம் தந்த தேவதையைக் குறித்து மறுபடியும் இறைஞ்சி வேண்டினன். தேவதை அவன் முன்தோன்றி வரத்தைப்பெற்று மகிழ்ச்சியோடு இருக்கிருயா என்று கேட்டது. ''இப்பொழுதுதான் எனக்குப் புத்தி வந்தது. நீ தந்த வரத்தை நீயே எடுத்துக்கொள். என்னுடைய பழைய நிலையே எனக்குப் போதுமானது'' என்ருன். தேவதையும் வரத்தைத் திருப்பி எடுத்துக்

கொண்டது. மைதாஸ் போன்ற நிலையில்தான் உலகத்தவர்கள் ஆசைபிடித்து அலைகின்றார்கள். கடவுளே அவர்களுக்குப் புத்திமதி சொன்னாலும் அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தாங்கள் கொண்டுள்ள ஆசை துன்பத்துக்கு ஏதுவானது என்று அனுபவவாயிலாக அறியும் போதுதான் அவர்களுடைய வாழ்க்கையில் திருப்பம் ஏற்படும். அந்நிலை உண்டாகும் வரையில் கடவுள் அவர்களுடைய செயல்களுக்கெல்லாம் சாட்சியாக இருந்து வெறுமனே கண்காணித்து வருகிறார். கடவுளை மறந்து உலக காரியங்களில் ஈடுபட்டிருக்கின்ற மக்களிடத்திலும் கடவுள் சாந்நித்தியம் இருக்கிறது. அவர்களுடைய செயலில் பங்குகொள்ளாது உபத்ரஷ்டா அல்லது அருகிலிருந்து அவர்களுடைய செயலைக் கண்காணிக்கின்ற நிலையில் அவர்களிடம் கடவுள் இருந்து வருகிறார். அவர்களுடைய செயல்களுக்குக் கடவுள் சம்மதம் தருவதில்லை. கடவுள் சம்மதத்தையும் அவர்கள் நாடுவதில்லை.

மனம்போன போக்கெல்லாம் சென்று ஆசை வெறிகொண்டு உலக இன்பத்தைப் பெற்றுத் துன்பத்தை அடைந்தான பிறகு மனிதனுக்குச் சிறிது விழிப்பு வருகிறது. தன்னை உடல் மயமாகக் கருதி விவகாரங்களைச் செய்து வந்த ஜீவன் சிறிது விழிப்பு வந்ததும் "நான் இதுவரையிலும் மிருகத்தனமான வாழ்வு வாழ்ந்து விட்டேன். உண்பதிலும், உறங்குவதிலும், இந்திரிய சுகங்களை அனுபவிப்பதிலும் வாழ்க்கையைக் கழித்த நான் துன்பத்துக்கு ஆளானேன். இந்த வாழ்வு நிலையற்றது. நிலையான வாழ்வை நான் நாடவேண்டும்" என்னும் உணர்ச்சி உண்டாகிறது. மனிதன் அங்ஙனம் சிந்திக்கத் தொடங்கும்பொழுதுதான் ஒழுக்க வாழ்வின் அவசியத்தை உணர்கின்றான். "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" என்னும் குறளின் சிறப்பு அப்பொழுதுதான் அவனுக்கு விளங்குகிறது. தான் செய்கின்ற காரியம் சரியா தவறா என்னும் ஆராய்ச்சியில் அவன் அறிவு ஈடுபடுகிறது. அத்தகைய ஆராய்ச்சி செய்யும் பொழுதுதான் மனிதன் தன் விவேகத்தைப் பயன்படுத்துகிறான். இதுவரையிலும் மனம் போனவாறு செய்த செயல்களுக்குத் தடை உண்டாகிறது. புலனடக்கமும், மன அடக்கமும் ஏற்பட்டு ஒழுக்கமான செயலில் பிரவேசிக்கின்ற நிலை மனிதனிடம் உண்டாகும்பொழுது கடவுள் அவனுடைய செயலில் சிறிது பங்கு கொள்ள ஆரம்பிக்கிறார். ஒழுக்க நெறியில் நிற்கும்பொழுது மனிதனுடைய உள்ளத்திலிருந்து நல்லதைச் செய்வதற்கு ஆதரவும், கெட்டதைச் செய்வதற்குத் தடையும் வருகிறது. நம் உள்ளம் நல்லதின்கண் நம்மைச் செலுத்திக் கெட்டதின்கண் நம்மைத் தடுக்கும்பொழுது கடவுள் நம்முடைய செயலுக்கு ஆதரவு தருகிறார். கேடான செயலில் ஈடுபட்டு இருக்கும் வரையிலும் அவர் சாட்சியாக இருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறார். நம் செயலுக்குச் சிறிதும்ஆதரவு தராதவராகஇருக்கிறார். நாம் நற்செயலில் ஈடுபடுகிறபொழுது நம் செயலுக்கு ஆதரவாளராக இருந்து செயலுக்கு உற்சாகம் தருகின்றார்.

குழந்தையொன்று வழியில் கண் பார்வை குன்றிய வயோதிகன் கையைப் பிடித்து அவனுக்கு உதவியாக அவன் வீட்டு வரையிலும் சென்று அவனைப் பத்திரமாக வீட்டாரிடம் ஒப்படைத்தது. அக்குழந்தை அப்படித் தான் உதவி செய்ததைத் தன் தாயிடம் கூறியது. அப்பொழுது தாய் உன் செயல் போற்றுதற்குரியது. நல்ல காரியம் செய்தாய் என்று அன்போடு குழந்தையின் முதுகைத் தடவிக்கொடுத்தாள். அப்போது அக்குழந்தை உலகத்தையே சன்மானமாகப் பெற்றது போன்ற பேருவகையை அடைந்தது. நாம் செய்கின்ற நல்ல காரியத்துக்கு உலகத்திலிருந்து போற்றுதலும், நம்முள்ளத்திலிருந்து இன்பமும் உண்டாகும்பொழுது நமக்கு அச்செயலில் ஊக்கம் உண்டாகிறது. கடவுள் போற்றுதல் மூலமாகவும், நம் உள்ளத்துக்கு இன்பத்தைத் தருவதன் மூலமாகவும் நம்முடைய செயலுக்கு ஆதரவு தருபவர் ஆகின்றார். நற்செயலில் ஈடுபடுபவர்கள் கடவுள் தங்களுடைய உள்ளத்தில் அனுமந்தா அல்லது ஆதரவாளராக இருப்பதை உணர்கின்றார்கள். தீமையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உபத்ரஷ்டா அல்லது சாட்சியாக இருந்த கடவுள் நற்காரியத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு அனுமந்தா அல்லது ஆதரவாளராக இருக்கிறார்.

தீய காரியத்தில் ஈடுபடுபவர்களை விட நற்காரியத்தில் ஈடுபடுபவர்கள் கடவுளின் சாந்நித்தியத்தைத் தங்கள் உள்ளத்தில் அதிகம் உணர்கிறார்கள். தீய காரியங்களைச் செய்வதற்கு மனது ஒருப்படாது, நல்ல காரியங்களில் அது பிரவேசிக்கிற பொழுது ஈசனுடைய சாந்நித்தியத்தை அது உணர்கிறது. நம் உள்ளம் நம்மை நல்வழியில் நடாத்துகிற பொழுது ஈசனுடைய சாந்நித்தியம் அவ் உள்ளத்தில் விளங்குகிறது.

நல்ல எண்ணங்களை எண்ணுவதன் மூலமாகவும், நல்ல காரியத்தைச் செய்வதன் மூலமாகவும் நம் உள்ளத்திலுள்ள அழுக்கைப்போக்க முயலுகின்றோம். நல்ல காரியம் செய்வதற்கு உள்ளத்தில் உறுதி வேண்டும். நம்முடைய சக்தி முழுவதையும், உபயோகப்படுத்தி நல்ல காரியம் செய்கின்றோம். நம் சக்திக்கு மீறி அக்காரியத்துக்குத் தடை வருகிறது. அப்பொழுது நம் உள்ளம் கடவுளுடைய உதவியை முழுமையாக நாடுகின்றது. திரௌபதி தேவியைச் சபைக்கு அழைத்து வந்து எல்லாருடைய முன்னிலையிலும் துகில் உரியும்படி துரியோதனன் உத்தரவிட்டான். துச்சாதனன் அச்செயலைச் செய்தான். திரௌபதிக்கு யாருடைய உதவியும் அப்பொழுது கிட்டவில்லை. அவளுடைய உள்ளம் பரம்பொருளினுடைய உதவியை நாடியது. பரம்பொருளிடமிருந்து உடனே அவளுக்கு உதவி வந்தது. எனவே நம் உள்ளம் எப்பொழுதெல்லாம் பரம்பொருளின் உதவியை முழுமையாக நாடிப் போகிறதோ, அப்பொழுதெல்லாம் அவரிடமிருந்து உதவி வருகிறது. நாம் நம் உள்ளத்தினுடைய அழுக்கைப் போக்குவதற்கு நம்முடையமுயற்சி அனைத்தையும் பயன்படுத்தவேண்டும். நம்முடைய சக்தியையும் மீறி நமக்குக் கஷ்டங்கள் வருகிறபொழுது அக்கஷ்டங்களை வெல்லுவதற்குக் கடவுள் நமக்கு உதவிபுரிய வருகிறார். கடவுளுடைய உதவியைப் பெறுகிறபொழுது கஷ்டங்கள் எளிதில் வெல்லப்படுகின்றன. கஷ்டங்களை வெல்லுவதற்குக் கடவுள் துணை புரிகிறார் என்பதை நம் உள்ளம் உணர்கிற பொழுது, கடவுள் நம்மை எவ்வளவு தூரம் தாங்குகிறார் என்பதை நாம் அறிய முடிகிறது. நல்ல காரியத்தில் தூண்டிய கடவுள், நல்ல காரியங்கள் செய்வதில் வருகிற கஷ்டத்தைத் தாங்குபவராகவும் இருக்கிறார். இப்பொழுது கடவுள் நமக்குப் பர்த்தா அல்லது தாங்குபவராக நம் உள்ளத்தில் வீற்றிருக்கின்றார். கடவுள் பர்த்தாவாக இருந்து நம்மைத் தாங்கி வருகிறார் என்பதை அறிகிறபொழுது கடவுளுடைய சாந்நித்தியத்தை நம் உள்ளத்தில் அதிகம் உணர்கின்றோம்.

கர்மம் செய்வதன் மூலமாக இன்பம், துன்பம் நமக்கு மாறி மாறி வருகின்றன. கர்மபலனில் வருகிற சுகத்தில் பற்றுதல் வைத்தும், துன்பத்தில் வெறுப்புக்கொண்டும் இருப்பது கர்மத்துக்கு நம்மைப் போக்தாவாக்குகிறது. கர்மம் செய்ய உரிமையுண்டு. கர்மபலனில் நமக்கு உரிமையில்லை. இவ்வுண்மையை உணர்ந்து கர்மத்தை மட்டும் செய்து கர்மபலனைத் தெய்வத்திடம் ஒப்படைக்கிறபொழுது, கடவுளைப் போக்தாவாக ஆக்குகின்றோம். தர்மராஜா சொர்க்கத்திற்குப் போனபொழுது ஒரு நாய் அவருடன் சென்றது. அவருடன் சென்ற நாய்க்குச் சொர்க்கத்தில் இடமில்லை என்று சொன்னார்கள். அப்படியானல் நான் செய்த புண்ணியத்தின் பலனும் எனக்கு வேண்டாம்; சொர்க்கமும் எனக்கு வேண்டாம் என்று கர்மபலனைத் தியாகம் பண்ணினர். தர்மராஜா போன்று நம்முடைய கர்மபலன்களையெல்லாம் தெய்வத்திடம் பூரணமாக ஒப்படைக்கும்பொழுது தெய்வத்தை நாம் போக்தா ஆக்குகின்றோம். ''நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகம்!'' என்று மாணிக்கவாசகர் செய்தது போன்று கடவுளை போக்தாவாக ஆக்கி நம்முடைய செயல்களுக்கெல்லாம் அவரை நாயகமாக்கி விடவேண்டும். கர்மப்பற்று அப்போது நமக்கில்லை. கடவுளுடைய உணர்வில் ஊறியிருந்து கர்மம் செய்வது அப்பொழுது நமக்குச் சாத்தியம் ஆகிறது. கர்மபலனை ஈசுவரனிடம் ஒப்படைத்து நாம் கர்மம் செய்கின்ற பொழுது கடவுளுடைய சாந்நித்தியத்தை உள்ளத்தில் மேலும் தெளிவாக உணர்கின்றோம்.

கர்மத்தில் மூன்று படிகள் இருக்கின்றன. முதலில் சங்கல்பம் செய்கிறோம். பிறகு செயல்படுகிறோம். அதன் பிறகு செயலின் பயனை அனுபவிக்கின்றோம். சங்கல்பம் செய்யும் பொழுதும், கர்மபலனை அனுபவிக்கும் பொழு

தும் நாம் செயலுக்குக் கர்த்தாவாகின்றோம். கர்மபலனைக் கடவுளிடம் ஒப்படைக்கிறபொழுது கடவுளை நாம் போக்தாவாக்குகின்றோம். கர்மத்திற்கு உரிய சங்கல்பத்தையே கடவுளிடம் ஒப்படைக்கிறபொழுது கடவுளை நாம் மஹேசுவரன் ஆக்குகின்றோம். நம் உள்ளத்தில் எழுகின்ற சங்கல்பமே ஈசனுடைய சங்கல்பமாக நிகழும்பொழுது ஈசனுக்கு மிக அண்மையில் நாம் சென்றவர்களாகின்றோம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ''எச்சில் இலைபோல் வாழத் தெரிந்து கொள்ளவேண்டும்'' என்கின்றார். காற்றடிக்கிற திசையில் எச்சில் இலை பறந்து போவது போன்று ஈசனுடைய திட்டத்திற்கேற்ப நம் உள்ளம் செயல்படுமாறு உள்ளத்தை ஈசனிடம் ஒப்படைக்கவேண்டும். நம்முடைய சங்கல்பம் என்று ஒன்று இல்லாது ஈசனுடைய சங்கல்பத்தில் நம் உள்ளம் ஒன்றுபடும்பொழுது அது சத்திய சங்கல்பம் ஆகின்றது. சத்தியசங்கல்பர்கள் ஆகும்பொழுது தான் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்னும் ஆப்த மொழியின் உண்மையை அறிய முடியும். கடவுள் மஹேசுவரனாக இருந்து அனைத்தையும் ஆட்டுவித்து வருகின்ற அவருடைய அற்புதச் செயலை அறிகின்றபொழுது அவருடைய சாந்நித்தியத்தை நம் உள்ளத்தில் பூரணமாக உணர்கின்றோம்.

உடல் தாங்கி இருக்கின்ற வரையிலும் ஜீவர்கள் மேற் கூறிய நிலைகளில் பரம்பொருளின் சாந்நித்தியத்தை உணர்கின்றார்கள். நிர்விகல்ப சமாதியில் தேகத்தை உதறித் தள்ளிவிட்டுப்பரத்தோடு லயமாகின்ற நிலையில் அவர் பரமாத்ம சொரூபம் ஆகின்றார். உப்புப் பொம்மை கடலில் கரைந்து கடல்மயமாவது போன்று நிர்விகல்ப சமாதியில் ஜீவபோதம் முற்றிலும் கரைந்து ஜீவன் பரத்தில் லயமாகி விடுகின்றான். அங்கு பரம் ஒன்றுதான் எஞ்சி இருக்கிறது. அந்நிலையைச் சொற்கொண்டு விளக்குவது என்றால் அகண்ட சச்சிதானந்தம் எனலாம்.மாயையின் விகாரங்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவைகள் ஆங்கில்லை. இன்பம், துன்பம், உடைமை, வறுமை, நன்மை, தீமை முதலிய இருமைகள் ஆங்கில்லை. காயம் ஆங்கு காய்ந்துபோகிறது. மனம் ஆங்கு மாய்ந்துபோகிறது. கால தேச நிமித்தம் யாவும் அந்நித்திய நிலையில் நிராகரிக்கப்படுகின்றன. அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் என்னும் பேதங்கள் ஆங்கு முடிவுறுகின்றன. ஜீவாத்மா பரமாத்மாவோடு இரண்டறக் கலந்துகிடக்கும் அந்நிலையை அனுபவித்தவரே அதன் பெருமையை அறிவார். அந்நிலையில்தான் முற்றிலும் பரமாத்மாவை ஜீவன் அனுபவிக்கின்றான்.

கடவுள் நம்பிக்கையற்றவர்களிடத்திலும் கடவுள் சாட்சி சொரூபமாக இருந்து அவர்களுடைய செயல்களை எல்லாம் கண்காணித்து வருகிறார். கடவுள் நம்பிக்கை உடையவர்களிடத்தில் அவர்களை நல்வழிப்படுத்தி அவர்களுடைய செயலுக்கு ஆதரவு தருபவராகவும், நற்செயலில் ஈடுபடும்பொழுது பக்தர்களுக்கு வரும் கஷ்டங்களையெல்லாம் தாங்குபவராகவும், கர்ம பலனை ஏற்று கர்மபந்தத்திலிருந்து விடுவிப்பவராகவும், பக்தர்களுடைய எல்லாச் செயல்களுக்கும் தாமே கர்த்தாவாக இருந்து பக்தர்களை ஆட்கொள்பவராகவும் இருக்கிறார். கடவுளுடைய சாந்நித்தியம் அவரவர்களின் தகுதிக்கேற்ப அவரவர்களுடைய உள்ளத்தில் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. இறுதியில் பரமாத்மாவோடு லயமாகும் நிலையில் எங்கும் பரமாத்மசாந்நித்தியமே நிலவுகிறது. இங்ஙனம் பரம்பொருளின் சாந்நித்தியம் நிலவி வருகிறது என்பதை விளக்கும் கீதையின் சுலோகம் வருமாறு:

उपद्रष्टानुमन्ता च भर्ता भोक्ता महेश्वरः ।
परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन्पुरुषः परः ॥ २२

உபத்ரஷ்டானுமந்தா ச பர்தா போக்தா மஹேச்வர: ।
பரமாத்மேதி சாப்யுக்தோ தேஹேऽஸ்மின்புருஷ: பர: ॥ 22

இத்தேகத்திலுள்ள பரம புருஷனானவன் சாக்ஷி, அனுமதிப்பவன், தாங்குபவன், அனுபவிப்பவன், மஹேசுவரன், பரமாத்மன் — இப்படியெல்லாம் இயம்பப்படுகிறான்.

நாம் சாதனை செய்யும்பொழுது நம் மனம் பண்பட்டு வருகிறது. மனம் பண்பட்டு வரவர பரம்பொருளின் சாந்நித்தியத்தை அதிகம் உணர்கிறது. இறுதியில் பரமாத்மாவோடு லயமாகிறபொழுது மனம் முற்றிலும் கரைந்து போகிறது.

வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

ஆத்மாவே மூலப் பிரகிருதியாக வடிவெடுக்கிறது. அந்த மூலப் பிரகிருதி அனாத்மவஸ்து எனப்படுகிறது. மூலப்பிரகிருதியே பிரபஞ்சமாக, அனேக அனாத்ம வஸ்துக்களாகப் பரிணமிக்கிறது, வடிவெடுக்கிறது. கடலின் மேல் காற்று வீசி அலைகளை எழுப்புகிறது; தத்தளிப்பு, கொந்தளிப்பு, ஓட்டம் ஆகிய காரியங்களையும், நுண்ணலை, சிற்றலை, பேரலை ஆகிய ரூபங்களையும் உண்டாக்குகிறது. ரூபம் எத்தனை எடுத்தாலும், நாமங்கள் எத்தனை வைத்தாலும், எத்தனை காரியங்கள் நிகழ்ந்தாலும், அவைகள் யாவும் கடலே, கடலின் சொரூபமே. கடலுக்கு அப்பால், அதற்கு அன்னியமாகச் செயலொன்றும் இல்லை. பிருதிவி ஒன்றுதான் ஆனாலும் அது பல காரியங்களாக மாறும் பொழுது ஒரே பிருதிவி, மலை, மரம், கோபுரம், சுவர், நெற்குதிர், வீடு, மடம், குடம், சட்டி ஆகிய பல ரூபங்களாக ஆகிறது. இதே போல ஆகாச உதாரணமும் சொல்லப்படுகிறது. ஆத்மா ஒன்றே ஆனாலும் ஆத்மா பல சரீரங்களுக்குள் புகுந்துகொண்டது போல் தோன்றும்போது தேவர், மனிதன், விலங்கு, பக்ஷி, புழு, பூச்சி என்று பல தோற்றமுடையது ஆகிறது. இது **அவச்சின்ன பக்ஷம்** என்று வேதாந்த பரிபாஷையில் சொல்லப்படுகிறது. ஆத்மா தொடர்ந்து எல்லா இடத்திலும் உள்ளது என்று பொருள். இது ஒரு கொள்கை, அல்லது விளக்கம் எனலாம். இதையே சூரியன் அதன் பல்கோடி பிம்பங்கள் என்கிற உதாரணத்தைச் சொல்லி **ஜீவன் ஆத்மாவின் பிரதிபிம்பம்** என்று விளக்குவது மற்றொரு பக்ஷம் அல்லது கொள்கை ஆகிறது. இக்கொள்கையில் மேலும் ஒருவிளக்கம் இருக்கிறது. ஜலத்தின் தன்மையான சுவை, குளிர்ச்சி, ஓட்டம் ஆகியவை அந்த ஜலத்தில் தோன்றும் பிம்பமான சூரியனில் எந்த மாறுதலையும் உண்டுபண்ணா. அதே போல இத்தனை சரீரங்கள், பிரபஞ்சப் பொருள்களாக ஆத்மா தோன்றிக்கொண்டிருந்தாலும் இன்ப துன்ப அனுபவங்கள், சரீரங்கள், அந்தக்கரணம் சம்பந்தப்பட்டவையேயன்றி அவை ஆத்மாவை எட்டா; ஒரு மாறுதலையும் உண்டு பண்ணா. ஆகையால் இந்த உபாதிகளை, நாம ரூபங்களை ஒதுக்கிவிட்டால் ஜீவாத்மாவே பரமாத்மா என்பது விளங்கும். பரமாத்மாவே இத்தனை உபாதிகளுடன் கூட ஜீவாத்மா ஆகிறது. ஜீவாத்மா, பரமாத்மா, பிரபஞ்சம் இவைகளுக்கு இடையில் உள்ள சம்பந்தம் மனதுக்கு எவ்வளவு மகிழ்ச்சியையும் எழுச்சியையும் தருகிறது.

கர்ணனுக்குத் தன் பெற்றோர் யார் என்று தெரியாது. குலம் கோத்திரம் தெரியாததால் அவன் வாழ்வில் பல சிறுமைகள் அடைந்தான். அவனை வளர்த்தவர்களை முன்னிட்டு தேரோட்டியின் மகன், ராதேயன் என்று அழைக்கப்பட்டான். தானும் அங்ஙனமே நினைத்திருந்தான். தான் குந்தியின் மகன், யுதிஷ்ட்டிரர், பீமன், அர்ஜுனன் இவர்கள் தன் தம்பிகள் என்று தெரிந்த போது அவனுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. அதற்கு முன் அவன் வாழ்வு இருள் சூழ்ந்தது போன்று இருந்தது. சீலமும் லக்ஷியமும் உள்ளவன். ஆயினும் வாழ்வில் அவன் பட்ட கஷ்டங்கள், சாபங்கள் எத்தனை! இதனால் மகிழ்ச்சி இன்றி, எழுச்சியின்றி எப்படியோ வாழ்ந்து வந்தான். தன் பெற்றோர் யார் என்று தெரிந்துகொண்டவுடன், தான் குந்தியின் மூத்தமகன், பாண்டவர்களின் அண்ணன் என்று தெரிந்துகொண்டபோது முன்னிலும் அதிகத் துயரம் உண்டாயிற்று. ஆனால் வாழ்வு பிரகாசம் பொருந்தியது ஆயிற்று. அவனுக்குத் தாழ்வு இல்லை, மனதை வாட்டிய பழைய துன்பங்கள் போய்விட்டன. வாழ்வில் ஒப்பற்ற ஆதர்ச புருஷனாக, லக்ஷிய புருஷனாக அவன் பயமின்றி உயிர்விட்டான். இது போன்ற நிலையில் ஜீவாத்மா, பரமாத்மா இணக்கம் இருக்கிறது. நாம் அனைவரும் பரமாத்மாவே. மாயையின் வசப்பட்டவர்களாக, நமது கனவு போன்ற வாழ்வில் உழல்பவர்களாக நமது நிஜ சொரூபத்தை மறந்தவர்களாக வாழ்ந்து வருகிறோம். இதை அகற்றி வைக்கவே வேதாந்தம் முயலுகிறது. விசாரம் செய்கிறது. அதைப் படிப்படியாகப் புரிந்து

கொண்டு, உணர்வில் அக்கருத்துக்கள் ஏறப் பட்டனவாகி, ஜாக்கிரத, சொப்பன, சுஷுப்தி அவஸ்தைகளை எப்படி நன்கு உணர்கிறோமோ அந்த அளவில் நமது சொருப உணர்வு வர வேண்டும். நாம் மனம் அல்ல, சரீரம் அல்ல, ஆத்மாவே, பரமாத்மாவே. இதை நாம் உணர வேண்டும்.

கல், மண், உலோகம் இவைகளில் செய்யப் பட்ட விக்ரகம், படம், பூரணகும்பம், தீபம் அல்லது குத்துவிளக்கு, ஸ்ரீ சக்கரம் அல்லது மந்திரத்தகடு முதலிய சின்னங்கள், சிலுவை, வேல் போன்றகுறிகள் ஆகிய இவைகளை வைத்து மக்கள் வணங்குகிறார்களே அவை களில் எவ்விதம் ஈசுவரத்தன்மை ஏற்படு கிறது? புண்ணிய க்ஷேத்திரங்களிலும், ஒவ் வொரு ஊரிலும் ஒவ்வொரு வீட்டிலும் இறை வன் பலவடிவங்களில் வழிபாடு செய்யப்படு கிறாரே அவர் ஜீவர்களைப் போலவே பலவாக ஆகி இருக்கிறாரா? அவைகள் அனைத்தையும் மக்கள் வணங்கும்போது கல்லே மண்ணே என்று வணங்குவதில்லை. அவைகள் கடவுள் அல்ல என்பது அவர்களுக்குத் தெரியும். ஆயி னும் அந்தச் சின்னங்கள் அவர்களின் இதயங் களைக்கனியச் செய்கின்றன, உள்ளங்களை உருக்குகின்றன, உடலை மறக்கச் செய்கின் றன, மனதை விகசிக்கச் செய்கின்றன, ஏதேதோ லீலைகளை, திருவிளையாடல்களை யெல்லாம் ஞாபக மூட்டுகின்றன. அவைகள் இத்தகைய தெய்வ உணர்வுகளை வெளிக் கொணரும், ஞாபக மூட்டும் சின்னங்கள் ஆகின்றன. அன்பு நிறைந்த தாயும் மகனும் சந்திப்பதுபோன்று இருக்கிறது பக்தன் ஆல யத்தில் இறைவனை வழிபடுவது. அனைத்திற் கும் ஆதிமூலமே, விசுவநாதனே, ஆதி அந்தம் அற்றவனே, பிறப்பு இறப்பு அற்றவனே, பிர பஞ்ச அதீதனே, மனம் வாக்குக்கு எட்டாத வனே, தீனபந்து, அனாதரக்ஷகன், பக்தவத்ஸ லன் அந்தச் சின்னங்களில் மக்களுக்குக் காட்சி கொடுக்கிறான். ஆகையால் சிலைகளுக்கு அர்ச் சாவதாரம் என்று பெயர். அதாவது சிலை ரூப மான கடவுள் என்று பொருள்.

ஸ்ரீராமனும் கிருஷ்ணனும் மஹாவிஷ்ணுவின் அவதாரம் என்கிறோம். அவதாரம் என்றால் கீழ் நிலைக்கு இறங்கிவருதல் என்று பொருள். கண பதியும் முருகனும் சிவகுமாரர்கள் என்கிறோம். உண்மையில் ஜீவர்கள் அனைவரும் கடவுளின் குழந்தைகளே. அவரே பிரபஞ்ச, ஜீவ, ஜட, மானுடநிலைக்கு இறங்கி வந்துள்ளார். ஆகை யால் சின்னங்களைக் கடவுளாகப்பாவித்தலில் பாரமார்த்திக நலன்கள் யாவும் அமைகின்றன. அதில் நஷ்டம், தீமை ஒன்றுமில்லை. இந்தப் பாவனை வலுத்து வரவர ஜீவன் கடவுளாகவே ஆகிவிடுகிறான். நாடகத்தில் அவரவர் ஏற்றுக் கொண்ட பாத்திரமாகத் தன்னைப் பாவித்துக் கொண்டு அவர்களின் இன்ப துன்பங்களைத் தாம் அனுபவிப்பதாக நடிக்கிறார்கள். அந்தப் பாவம் வலுவானதாக ஆக நடிப்பு நிஜ மானதாக ஆகி பார்க்கிறவர்கள் உள்ளத்தைத் தொடுகிறது. மஹாகாவியம் ஒன்றில் வருகிற பாத்திரங்கள் அத்தனை மயமாகவும் அந் தந்த சந்தர்ப்பத்தில் கவிஞன் தன்னைபாவிப் பதால் காவியத்தின் சிறப்பு, நயம் மிகுதி யாகிறது; அது அழியாத அமரகாவியம் ஆகிறது. அதுபோல சாதாரணமான சின் னங்களைக் கடவுளாகப் பாவித்து, எண்ணி எண்ணி பக்தியில் முன்னேற்றமடைதல் தவ றானது ஆகுமா? பக்தி வளர்ச்சிக்கு அது எவ் வளவு பெரியதுணை என்பதை எண்ணிப் பார்த் தால் விளங்கும். கல்லை, மண்ணை கடவுளாகப் பாவித்து வணங்கி, வழிபட்டு மனிதன் தூய வனாய், பக்தனாய், தெய்வமாய் ஆனான். அந்தக் கல்லோ, இதே போன்ற ஆயிரக்கணக்கான மக்களின் பாவனை, உணர்வின் வேகத்தால் மகிமை நிறைந்த மூர்த்தியாக, அருள் நிறைந்த ஆண்டவனாக ஆகிறது. அந்த ஆலயமே நற் சிந்தனைகள், தெய்வீக எண்ணங்கள், அருள் உணர்வுகள் நிறைந்ததாகிறது. அந்தத் தெய் வீக எண்ணங்களின் வியாபகத்தால் அந்தச் சூழ்நிலைக்கு வருகிறவர்களுக்கும் நிம்மதி, மனச் சாந்தி உண்டாகிறது. பக்தர்கள் மிக்க உணர் வுடன் இறைவனின் சாந்நித்தியத்தைப் பிரத் யக்ஷமாக உணர்ந்து மிகவும் உருகி, அன்பில் தோய்ந்து அருட்பா பாடுகிறார்கள், தேவஆரம் சாத்துகிறார்கள். அவர்களது திருவாய்மொழி, திருவாசகம் என்றென்றும் பக்தர்களுக்கும் கடவுளுக்கும் இனிமையானதாகின்றன. இந்தப் பாகவதம், (பகவானைப்பற்றிச் சொன்னது) திருப்புகழ், பக்தர்களின் திருமந்திரம், அனு

சந்தானத்துக்குரியது ஆகிறது. அதனுல் அந்த க்ஷேத்திரங்கள் பாடல் பெற்ற ஸ்தலங்கள் என விசேஷமாகச் சொல்லப்படுகின்றன.

ஒவ்வொரு கோபிகாஸ்திரீக்கும் பக்கத்தில் ஒரு கண்ணன் இருந்து விளையாடினன் என்று பாகவதத்தில் படிக்கிறோம். கோபிகாஸ்திரீ களுக்குமட்டுமன்று, அகிலாண்ட கோடிக்கும் பிரம்மாண்டநாயகன் பல மூர்த்திகள் ஆகி அருள்பாலிக்கிருன். பண்பாட்டில், பக்தியில் மேல்நிலைக்கு வராதவர்களுக்கு விக்கிரக வழி பாட்டின் அத்யாவசியம், சிறப்பு விளங்காது. அவர்களை அளவையாக, உதாரணமாக, பிர மாணமாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. மலம் மூத்திரம் முதலிய அசுத்தம் நிறைந்த இந்தச் சரீரத்தை நம்முடையது என்று எண்ணி அதற் குச் செய்யும் உபசாரங்களைவிட, அதற்கென்று இடையருது பாடுபடுவதைவிட, தூய்மை மிக்க தெய்வ மூர்த்திகளைக் கடவுளாகப்பாவித்து, அபிஷேக ஆராதனை செய்து வழிபடுதல் ஆயிர மடங்கு உத்தமமானது. அதில் நமக்குக் கோடிபுண்ணியம் உண்டு. இந்தச் சரீரத்தை க்ஷேத்திரமாக, மிக்க பிரயோஜனமுடையதாக ஆக்குபவர் ஆகிறோம். இக்காலத்தில் ஸ்ரீ ராம கிருஷ்ணர் விக்ரகவழிபாட்டின்மூலம் பரிபூரண நிலை அடைந்தவர் ஆனர். ஆலயத்தில் பூஜாரி யாகச் சேர்ந்தார். பரிபூரண விசுவாசமும் அன் பும் செலுத்தி அர்ச்சாவதாரமாகிய இறைவனை வழிபட்டு இறைவனுடன் இரண்டறக் கலந் தார். வழக்கு இழந்த அல்லது மிகவும் சர்ச் சைக்குரிய நம் மதக்கோட்பாடுகளை யெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அனுஷ்டித்து அக்கோட் பாடுகளுக்கு உயிரூட்டினர். ஸ்ரீ ராமகிருஷ்ண ருக்கு ஆலயத்திலிருந்த அம்பிகை விக்ரகம் உயிருள்ள அன்னை ஆயினள். அவளுடன் அளவளாவி விளையாடினர், சந்தேகங்களைக் கேட்டார், பாடம் கற்றுர், வாழ்க்கைப் பிரச்னை களையெல்லாம் சொல்லி அவள் நடாத்திய பிர காரம் நடந்தார். அவரது வாழ்வில் ஒரு கண மும் அவர் அம்பிகையை மறந்தறியார். உலகில் அவருடையது அனைத்தும் அம்பிகையே.

விவேகானந்த சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ் ணரை முதல் முதல் சந்தித்தபோது 'நீங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?' என்று கேட் டார். 'ஆம் குழந்தாய். நாம் இருவரும் ஒரு வரை ஒருவர் அறிவதை விட, உணர்வதைவிட இன்னும் ஆழ்ந்தமுறையில் இறைவனை உணர் கிறேன். வேண்டுமானல் உனக்கும் காட்டு கிறேன்' என்றுர். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஆரம்ப சாதனை நாட்களில் ஜடாதாரி என்கிற ஒரு ராமபக்தர் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு வந் தார். அவரிடம் தவழ்கிற ராம விக்ரகம் ஒன்று இருந்தது. அதைப் பாலராமனுக உபாசித்துப் பாலராமனது திருக்காட்சி பெற் றிருந்தார் அப்பெரியார். சிலை ரூபமாக இல் லாமல் அவ்விக்ரகம் அவருக்குச் சாக்ஷாத் பாலராமனுக ஆயிற்று. அவருடன் விளையாடி, அவருடன் உண்டு, அவரோடு உறங்கி அக் குழந்தை ராமன் வாழ்ந்து வந்தான். வாழ்க் கையில் இதைவிடப் பெரியபேறு வேறு என்ன இருக்கிறது? ஸ்ரீ ராமகிருஷ்ணரும் சாக்ஷாத் காரம் பெற்ற பெரியார் ஆகையால் ஜடாதாரி யின் மேலான நிலை விளங்கியது; பிரத்யக்ஷ மாகத் தெரிந்தது. அக்கல்யாணராமன் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் ஓடிவந்து விளையாடு வான். ஜடாதாரி நிவேதனம் செய்வதற்காக அவனைத் தேடி ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வருவார். அவனே வரமாட்டேன் என்று பிடிவாதம் செய் வான். "என் அன்புக்குரியவனே, உன் குணம் எப்போதும் அப்படிப்பட்டதுதானே, தந்தையாரும் தாயாரும் கதறக் கதற வனம் சென்றவன் தானே. உனக்கு விருப்பமானல் அங்கேயே இரு. உன் ஆனந்தம் என் ஆனந் தம் உன் விருப்பம் என் விருப்பம்" என்று கண்ணீர் மல்கச் சொல்வார். சில வேளைகளில் வந்து சாப்பிட்டுவிட்டுப் போவான். மற்றும் சில வேளைகளில் வரவேமாட்டான். கடைசியில் தக்க பெரிய இடத்தில்தானே குழந்தை இருக் கிருன்; அதுவே அவனுக்கு உகந்த இடம் என்று மகிழ்ந்து ஸ்ரீ ராமனிடமும், ஸ்ரீ ராம கிருஷ்ணரிடமும் கண்ணீர்மல்க விடைபெற்றுச் சென்றுர் ஜடாதாரி. பக்தனுக்காக அவன் சிப்பாய் வேலை செய்வான், நவாப்பிடம் பணம் கட்டுவான், பிட்டுக்கு மண் சுமப்பான், தேரோட்டுவான், மாவு அரைப்பான், அடிபடு வான், என்ன வேலை வேண்டுமானலும் செய் வான். அத்தகைய அருள் நிலையை நாம் அடைந் தால் நாமும் இறைவனைநேருக்குநேர் சாக்ஷாத் கரிக்கலாம்.

குஹ தத்துவம்

சிவன் கோயிலில் சிவனார் சந்நிதியைப் பக்தர்கள் அணுகும்பொழுது சிவனுக்கு வலப் பக்கத்தில் கணபதியும், இடப் பக்கத்தில் முருகனும் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருப்பதைக் காண்பார்கள். இதே அமைப்பு அம்பிகையினுடைய சந்நிதியிலும் இருக்கிறது. இதில் பெரிய கோட்பாடு ஒன்று அமைந்திருக்கிறது. சிவகுமாரன் என்னும் சொல் கணபதிக்கும் பொருந்தும்; சுப்ரமணியத்துக்கும் பொருந்தும். அதே பாங்கில் உமையாள் மைந்தன் என்கிற சொல்லும் இரு சகோதரர்களுக்கும் பொதுவானது. இருவரும் அம்மைக்கும் அப்பனுக்கும் புதல்வர்கள்.

இனி, அகிலாண்டங்களிலுள்ள ஜீவகோடிகள் அனைத்தும் அம்மைக்கும் அப்பனுக்கும் செல்வர்கள் செல்விகள் ஆகிறார்கள். உண்மை அங்ஙனம் இருக்க இவர்கள் இருவர் மட்டும் ஏன் அம்மை அப்பனுக்குரிய செல்வர்கள் என்று பிரித்தெடுத்துப் பகரப்பெறுகிறார்கள்? அதில் கருத்தொன்று உண்டு. மற்ற செல்வர்களுக்கும் செல்விகளுக்கும் இவர்கள் இருவரும் முன்மாதிரி ஆகிறார்கள். அம்மை அப்பனைச் சென்றடைய விரும்புகிற ஜீவர்கள் அனைவரும் கணபதியைப் போன்றும், கார்த்திகேயனைப் போன்றும் பரிபாகம் அடையவேண்டும். பரிணமத்தில் இன்னும் கீழ்நிலையில் இருக்கிற ஜீவர்கள் தங்களுக்கு ஆதிமூலமாகிய சிவசக்திக்கு மிகத் தொலைவில் இருக்கிறார்கள். மேல்நிலைக்குப் பரிணமித்துப் பக்குவம் அடைவதற்கு ஏற்ப அவர்கள் அம்மை அப்பனுக்குப் பக்கத்தில் வருகிறார்கள். பக்குவப்பட்டு மானுடநிலையை அடைந்துள்ள ஜீவர்கள் தெய்வத்துக்கு மிக அண்மையில் வந்திருக்கிறார்கள். அவர்கள் சிவசக்தியை நோக்கிப் போகிற பயணத்தில் பெரும்பகுதி பூர்த்தியாய் இருக்கிறது. கடைசிப் பகுதியை அவர்கள் மங்களகரமாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். அதற்கேற்றபடி தங்களைப் பக்குவப்படுத்துவதும் அவர்களுடைய கடமையாகிறது. கணபதியைப் போன்றும், குமரனைப்போன்றும் தங்களை அமைத்துக்கொண்டாலொழிய அவர்கள் சிவசக்தியை அடையமாட்டார்கள்.

கணேசன் அறிவுசொரூபம். கார்த்திகேயன் ஆற்றல் சொரூபம். கடவுளை அடையவிரும்புகிறவர்கள் அறிவில் மேலோங்கி வரவேண்டும். ஆற்றல் மிகப் படைத்தவர்களாக வேண்டும். பெற்றுள்ள அறிவைச் செயலுக்குக் கொண்டு வராவிட்டால் அவ் அறிவினால் அடையும் பயன் ஒன்றுமில்லை. பூமியைச் சாகுபடி பண்ணினால் உணவுப் பொருள்வகைகளை உற்பத்திபண்ணலாம் என்னும் அறிவு மனிதனுக்கு வந்திருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். வெறும் இவ் அறிவினால் மனிதன் அடையும் நலன் ஒன்றுமில்லை. இந்த நல்லறிவு செயலாக வடிவெடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அறிவு பூர்த்தியாகிறது. சாகுபடியைச் செம்மையாகச் செய்வதே அதைப்பற்றிய ஞானத்தைப் பெற்றதின் அறிகுறியாம். சாகுபடியைச் செம்மையாகச் செய்து தானியங்களை விளைவிக்கவேண்டும். அவைகளை முறையாக அறுவடை செய்ய வேண்டும். உணவு சமைத்தல் வேண்டும். அதை மக்களுக்கிடையில் வழங்குதல் வேண்டும். மக்கள் அதை உண்டு பசியைத் துடைத்தல் வேண்டும். உடலை உறுதிப்படுத்துதல் வேண்டும். இத்தனை செயல்களும் நடைபெறுகிறபொழுதே சாகுபடியைப்பற்றிய நல்லறிவு பலன்கொடுத்ததாகும்.

அறிவுக்கும் ஆற்றலுக்கும் உள்ள தாரதம்மியத்தைப் பற்றிய புராண வரலாறு ஒன்றுள்ளது. அதாவது கைலையங்கிரியிலே அம்மையும் அப்பனும் இனிது வீற்றிருக்கின்றனர். கணேசன் கார்த்திகேயன் ஆகிய மைந்தர் இருவரும் இனிது விளையாடிக் கொண்டிருக்கின்றனர். நாரத மகரிஷி கனி ஒன்றைக் கொண்டு வந்து பார்வதி, பரமேசுவரன் முன்னிலையில் படைத்து வீழ்ந்து வணங்குகிறார். சிறுவர் இருவரும் அக்கனியைப் பெறுதற்கு ஓடி வருகின்றனர். இருவருள் இக்கனியை யாருக்குக் கொடுக்கலாம்? என்னும் கேள்வியை நாரதர் கிளப்பினார். இருவருக்கும் இடையில் பந்தயம் விடலாம் என்று அவர் பகர்கிறார். அகிலாண்டங்களையும் அளந்து பார்த்து விட்டு முதலில் வருகிறவனுக்கு இக்கனியைக் கொடுக்கலாமென்று மகரிஷி முடிவு

கட்டுகிறார். பந்தயம் விடுகிறார். முருகன் ஏறு மயில் ஏறி அண்டங்களை அளக்க அதிவேக மாகப் போய் மறைகிறான். மூத்தவனுக்கோ அத்தகைய ஆற்றல் இல்லை. வெறும் அறிவு சொரூபம். எண்ணிப்பார்க்கிறான். எலி வாகன னாக அம்மை அப்பனை வலம் வருகிறான். கை நீட்டிக் கனியைக் கேட்கிறான். அகிலாண்டங் களை அளந்தாய் விட்டதா என்னும் கேள்வி பிறக்கிறது. சிவசக்திக்குப் புறம்பாக அண் டங்கள் எங்கே இருக்கின்றன என்னும் ஆட் சேபம் ஆனைமுகத்தவனிடமிருந்து வருகிறது. அறிவுத் தெய்வமாகிய அவன் கூற்றில் அர்த் தம் உளது. கனியை அவனுக்குக் கொடுக்க அம்மை அப்பன் முன்வருகின்றனர். அதற் குள்ளாக இளையவன் அண்டங்கள் அனைத் தையும் அளந்தெடுத்து அவைகளின் உட் பொருளை அறிந்து கொண்டவனாக விரைந்து வருகிறான். மூத்தவனுடைய அறிவு பெரிய தென்றால் இளையவனுடைய ஆற்றல் சாமான் னியமானதன்று. அறிவுக்கு நிகராகவே அது இருக்கிறது. கனியை யாருக்கு வழங்குவது என்னும் வினவுக்கு விடை கண்டு பிடிப்பது மிகக் கஷ்டம். அறிவுக்கு நிகரானது ஆற்றல். அறிவையும் ஆற்றலையும் நன்கு பயன்படுத்து கிறவர்களே அம்மை அப்பனை அடைய வல்ல வர்களாகின்றனர். இக்கோட்பாட்டை மக்க ளுக்குப் புகட்டுதற்காகவே கணபதியும், கார்த்திகேயனும் அம்மை அப்பனுக்கு இரு மருங்கில் எழுந்தருளியிருக்கின்றனர்.

இளையவன் ஆற்றல் தெய்வம் மட்டும் அல்லன். அவன் ஞானபண்டிதன். ஆதலால் அவன் தூக்கி வினை செய்கிறான். பரத்தை அடைய விரும்புகிற ஞான சாதகர்கள் எல் லார்க்கும் அவன் முன்மாதிரி ஆதலால் கலியுக வரதன் என்னும் பெயர் பெற்றவனாக அவன் இலங்குகிறான். ஜீவாத்மாக்களிடம் இருக்கும் கூறுகளெல்லாம் அவனுடைய சொரூபமாக வடிவெடுக்கின்றன. அது எப்படி என்று பார்ப்போம். ஆறுமுகக் கடவுளாக அவன் இலங்குகிறான். உடல் எடுத்துள்ள உயிர் ஒன் றுக்கு ஆறுமுகம் தேவையில்லை. அப்படியிருக்க அவனுக்கு மட்டும் ஆறுமுகம் இருப்பானேன்? பண்பட்டுள்ள ஜீவன் ஒருவன் தன்னுடைய ஐந்து இந்திரியங்களையும், ஆறாவது இந்திரிய மாகிய அகக்கண்ணையும் உச்ச நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறான். ஒவ்வொரு இந்திரிய மும் தன்னளவில் பரிபூரண நிலையை எட்டிய தாகும். ஓர் இந்திரியமே எல்லா இந்திரியங் களின் செயல்களைப் புரியவல்லதாகிறது. அந்த அளவில் ஒவ்வொரு இந்திரியமும் ஒரு தலைக்கு நிகராகிறது. அப்படி ஆறு தலை படைத்திருக்கிற பொழுது அறிவுத்திறன் அகண்டாகாரமாக விரிவடைகிறது. அவனால் அறியப்பட்டது எது? அறியப்படாதது எது? என்னும் கேள்வி எழ இடமில்லை. முற்றும் உணர்ந்த முழுமுதற் பொருளாக அவன் இருக்கிறான். அதைச் சொல்லால் விளக்க முடியாது. ஆறுமுகம் என்னும் வடிவமே அதை நன்கு விளக்குகிறது. இனி மானுட சரீரத்தில் ஷட் சக்கரம் என்று சொல்லப்படும் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகள் முறையே மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை எனப் பெயர் பெறுகின்றன. இந்த ஆறு ஆதாரங் களுக்கும் அதிஷ்டான தெய்வமாக இருப்பவன் கந்தன். அந்த யோக தத்துவத்தை விளக்கு தற்கு அவன் ஆறுமுகக் கடவுளாகிறான். புற வுலகில் அவனுடைய இருப்பிடம் ஆறுபடை வீடுகளாக வடிவெடுக்கிறது. ஆக, ஒவ்வொரு முகமும் ஒரு ஞானபூமிக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. இறைவன் ஷட்குண சம் பன்னன் எனப் போற்றப்படுகிறான். ஆறுவித தெய்விக சம்பத்து என அவைகள் பொருள் படுகின்றன. ஞானம், வைராக்கியம், வீரியம், ஐசுவரியம், ஸ்ரீ, கீர்த்தி ஆகிய இவை ஆறும் பரமனிடத்தே பரிபூரணநிலையை எட்டியிருக் கின்றன. இவற்றினுள் ஏதேனும் ஒன்று சிறப் பாக அமைந்துவிட்டால் சாதாரண ஜீவன் ஒருவன் பெருமகன் ஆகிவிடுகின்றான். இந்த ஆறு தெய்வ மகிமைகளும் ஒருவனிடம் சேர்ந்து மிளிருமானால் அவன் தெய்வீக மனிதன் ஆகி விடுகின்றான். முருகனிடம் இவை ஆறும் நிறைந்திருப்பதால் அவன் ஷண்முகக்கடவு ளாகிறான்.

அன்னை பராசக்தி இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி சொரூபிணீ என்று போற்றப் பெறுகிறாள். அத்தகைய பார்வதி தேவியின் புதல்வனாகிய முருகக்கடவுள் இச்சாசக்தியை

வள்ளியின் வடிவத்தில் தன்பால் வைத்திருக்கிறான். ஞானசக்தியைக் கதிர்வேல் வடிவத்தில் கையில் ஏந்தியிருக்கிறான். கிரியா சக்தியைத் தேவகுஞ்சரியாகத் தன்பால் வைத்திருக்கிறான். ஆக, அன்னையினிடம் உள்ள மூவிதச் சக்திகளும் மைந்தனிடத்திலும் நிறை நிலையில் அமைந்திருக்கின்றன.

இரண்டு கரங்களைக்கொண்டு சாதாரண மனிதன் செயற்கரிய செயல்களைச் செய்கிறான். எழுதுவதற்கு ஓர் ஆயுதம், கல் உடைப்பதற்கு ஓர் ஆயுதம், நகை செய்வதற்கு ஓர் ஆயுதம், ஓவியம் தீட்டுவதற்கு ஓர் ஆயுதம், இசையைக் கிளப்புவதற்கு ஓர் ஆயுதம், இரண வைத்தியம் செய்வதற்கு ஓர் ஆயுதம், போர்புரிவதற்கு ஓர் ஆயுதம், வீடு கட்டுவதற்கு ஓர் ஆயுதம், வீட்டைச் சுத்தம் செய்வதற்கு ஓர் ஆயுதம், வீட்டை இடிப்பதற்கு ஓர் ஆயுதம் இப்படிப் பல ஆயுதங்களை இரண்டு கைகளையுடைய மனிதன் கையாண்டு தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்துகின்றான். ஆறுமுகக் கடவுளோ தன்னுடைய முகங்களுக்கு ஒப்ப பன்னிருகரங்களை உடையவனாக இருக்கிறான். ஒவ்வொரு கரத்திலும் ஒவ்வொரு தெய்விக ஆயுதம் அமைந்திருக்கிறது. ஆதலால் அவனால் ஆற்றமுடியாத செயல் ஏதுமில்லை. பிரபஞ்சமெங்கும் நிகழ்ந்து வருகிற தெய்விகச் செயல்களனைத்தும் அவனுடைய செயல்களாம். ஒவ்வொரு ஜீவனும் படைத்துள்ள ஆற்றலைப் பரமனுடைய வழிபாட்டுக்கென்றே பயன்படுத்தும்பொழுது அது கந்தவேளுக்குரிய சிறந்த வழிபாடு ஆகிறது.

சேனாபதி என்னும் பெயர் படைத்தவனாகச் சக்தியின் செல்வன் இருக்கிறான். சேனாபதியின் திறமைக்கு ஏற்ப சேனை போரில் வெற்றி பெறுகிறது. பக்தர்கள் எல்லாரும் அக்ஞானத்தோடு போராடி அதைத் தகர்த்துவிட்டு ஆண்டவனை அடைய முயலுகின்றார்கள். அந்த அக்ஞான சொரூபமாக இருப்பவன் சூரபத்மன். ஆற்றல் மிகப் படைத்த அந்த அரக்கனைத் தகர்த்துத்தள்ள கந்தனுக்கே சாத்தியமாகிறது. ஆதலால் அவன் யாண்டும் தலைசிறந்த சேனாபதியாகத் திகழ்கிறான்.

இளமையும், ஆத்ம சொரூபமும் இணைபிரியாதவைகள். பலவிதமான பாங்குகளில் அழகு தன்னைத்தானே விளக்கிக் கொண்டிருக்கிறது. இளமைக்கு ஓர் அழகு உண்டு. தூய அன்புக்கு ஓர் அழகு உண்டு. தெளிந்த அறிவுக்கு இன்னொருவித அழகு உண்டு. ஒழுக்கம், இன்சொல் ஆகியவற்றுக்கு அழகுண்டு. பராக்கிரமம் என்னும் வீரச்செயலுக்கு ஓர் அழகுண்டு. இந்த எல்லாவித அழகுகளும் திரண்டு உருவெடுத்தவன் முருகன். அழகைப் போற்றுபவர் அறிந்தோ, அறியாமலோ முருகனைப் போற்றுகின்றனர். தெளிந்த மனம்கொண்டு பார்ப்பவர்க்குப் பார்க்குமிடம் எங்கும் அழகு தெய்வத்தின் தரிசனம் தோன்றும். அழகு அல்லது முருகனைத் தவிர இயற்கையில் வேறொன்றுமில்லை.

இவையாவுக்கும் மேலாகக் குமரக்கடவுள் குஹன் என்று போற்றப்பெறுகிறான். குகையில் வசிப்பவன் குஹன். குகைகள் அனைத்திலும் தலை சிறந்ததாய் இருப்பது ஜீவாத்மாவின் உள்ளம் என்னும் குகை. உள்ளம் என்னும் குகையைத் தஹராகாசம் என்றும் கந்தகோட்டம் என்றும் சொல்வதுண்டு. அங்கு வீற்றிருக்கும் பரம்பொருள் குஹப்பிரம்மம் என்று அழைக்கப்படுகின்றது. அது எவ்வளவு பெரியது, எவ்வளவு ஆழ்ந்தது, எவ்வளவு வலியது என்பது நமக்குத் தெரியாது. உள்ளத்தின்கண் குஹப்பிரம்மத்தை உணர்வதே நல்ல வழிபாடு ஆகிறது. அனந்தங்கோடி ஜீவாத்மாக்களின் உள்ளங்களிலே இலங்குவதால் அவன் குஹன் என்னும் நாமம் படைத்துள்ளான். அந்தந்த ஜீவன் உள்ளத்தில் வீற்றிருந்துகொண்டு அவர்கள் எல்லாரையும் அவன் பண்படுத்தி வருகிறான். அவனுடைய மகிமையை அறிந்துகொள்ளுதற்கு ஏற்ப அவன்பால் பக்திபெருகுகிறது. பக்தி ஓங்குதற்கு ஏற்ப பக்தன் பரமனுக்கே உரியவனாகிறான். இத்தகைய அரியபெரியசெயலை ஆறுமுகக் கடவுள் யாண்டும் இயற்றி வருவதால் மக்கள் அவன்பால் கவர்ந்திழுக்கப்படுகின்றனர். ஊசி காந்தத்தின்பால் கவர்ந்திழுக்கப்படுவதுபோன்று ஜீவாத்மாக்கள் கதிர்வேலவன்பால் கவர்ந்திழுக்கப் பெறுகின்றனர். அறிவிலும், ஆற்றலிலும் கதிர்வேலவன் மயமாவதே குஹ வழிபாடுஆகிறது. வாழ்க கதிர்வேலவன். வாழ்க குஹன். வாழ்க குஹன் அடியார்கள்.

சம்பந்தர் வாக்கு

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன்)

திருஞானசம்பந்தப் பெருமான் திரு ஆலவாய் என்னும் மதுரையம்பதிக்குச் சென்று, ஆலவாய் மேவிய அண்ணலை வழிபட்டுப் போற்றி இனிது இருந்து வருகின்ருர். அச் சமயம், சம்பந்தப் பெருமானின் தந்தையார் சிவபாத இருதயர் மதுரை மாநகருக்குச் சென்ருர். சென்று, அருந்தவ ஞானியரான சம்பந்தப் பெருமானைக் கண்டார். தந்தையாரைக் கண்டதும், ''இத்தந்தையும் தாயும் இப்பிறவியில் நமக்குப் பெற்ருேர் ஆவார்கள்; ஆனல், பரம்பொருளே நமக்கு எல்லாப் பிறவிகளிலும் தாயும் தந்தையும் ஆகும். தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம் சிவபெருமான். 'தாதாய்! மூவேழ் உலகுக்கும் தாயே!' என்றெல்லாம் கூறுகிருர்கள். எப்போதும் உடன் இருந்து உதவும் இறைவனையே எண்ணுதல் வேண்டும்'' என்ற சிந்தனை சம்பந்தருக்கு எழுகின்றது. கூடவே, அவருக்குத் தாம் அவதாரம் செய்தருளிய கழுமலம் என்ற சீகாழிப் பதியின் நினைவு வருகிறது. கழுமலத்து எம்பெருமானை எண்ணிப் பாடுகின்ருர்.

> **''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
> **எண்ணின் நல்லகதிக்கு யாதும்ஓர் குறைவிலைக்**
> **கண்ணின் நல்அஃதுறும் கழுமல வளநகர்ப்**
> **பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை**
> **இருந்ததே.''**

— காட்சிக்கு இனிமையைத் தருகின்ற, நல்ல வயல் வளமும், சோலை வளமும் பொருந்தியிருக்கின்ற கழுமலம் என்ற சீகாழித் தலத்திலே, பெண்ணின் நல்லவளாகிய உமையம்மையோடு சிவபெருமான் அம்மையப்பராக எழுந்தருளியிருக்கின்ருர். இத்தகைய கிடைத்தற்கு அரிய காட்சி நமக்குக் கிடைப்பதால், இவ்வுலகத்தில் நல்ல முறையில் வாழ்க்கை நடத்தலாம். நாள்தோறும் அப்பெருமானை நெஞ்சகத்தில் வைத்து நினைத்துப் போற்றி வந்தால், நம் வாழ்வுக்கு எல்லா நன்மைகளும் வந்து சேரும்; ஒரு குறையும் இல்லை'' என்கிருர்.

இறைவன் சக்தியாகவும், சிவமாகவும், தனிப் பரம்பொருளாகவும் வீற்றிருந்து அருள் பாலிக்கும் இன்பநிலை இப்பாடலில் சொல்லப் படுகிறது.

சிவபெருமான் கருணையே வடிவம் ஆனவர். ''பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்தது''—கருணையே வடிவமான சிவபெருமான் சக்தியோடு கூடி வீற்றிருக்கும் திருக்காட்சியானது, இப்பூவுலகில் நமக்கு நல்ல கதியைத் தருவதாகும். எம்பெருமான் சக்தியை ஒரு பாகமாகக் கொண்டு வீற்றிருக்கும் திருக்கோலம் அர்த்தநாரீசுவர வடிவமாகும். இறைவன் சக்தியும் சிவமும் ஆக இரண்டு தன்மைப் பட்டு விளங்குகின்ருன். உலகில் பல வகைப் பட்ட உயிர் இனங்கள் வாழ்கின்றன. அவை வெவ்வேறு வடிவ அமைப்புக்களைக் கொண்டவை. சில உயிர் இன வடிவங்களில் ஆண் பெண் என்ற வேறுபாட்டைக் கண்ணுலே கண்டு அறிந்துகொள்ள முடியும். சில உயிர் இன வடிவங்களில் அவ்வாறு கண்ணல் கண்டு கொள்ள முடியாது. சில அடையாளங்களைக் கொண்டும், சில குணங்களைக் கொண்டும் ஆணு பெண்ணு என்று சில உயிர்வகைகளை அறிந்துகொள்ள முடியும்.

எனவே, உலக உயிர்கள் அனைத்தும் ஆண் பெண் என்ற இருவகைக் கூறுபாடுகளைக் கொண்டு விளங்குகின்றன. இதற்கு என்ன காரணம்? ஒரு பொருள் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பொருள் எப்படி உண்டாகி இருக்கமுடியும்? ஏதோ ஓர் அடிப்படையான பொருளில் இருந்து தானே அந்தப் பொருள் தோன்றியிருக்க முடியும். அப்படியானல், மூலப் பொருளின் குணங்களை, அந்த மூலப் பொருளில் இருந்து தோன்றிய பொருள்களைக் கொண்டு விளங்கிக் கொள்ள முடியும் என்பது இயற்கை நியதியாகும். இதனை இன்னெரு விதமாகவும் கூறலாம். தோன்றிய பொருள்களில் உள்ள குணங்களைக் கொண்டு, அந்தப் பொருளுக்கு மூலாதாரமான பொருளின் குணங்களையும் அறிந்து கொள்ளலாம்.

நம் முன்னேர்கள் இந்நியாய வாதத்தை வைத்து ஓர் உண்மையைக் கண்டறிந்து சொன்

னர்கள். அதாவது, உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் தாமாகவே தோன்றியிருக்க முடியாது. அவ்வாறு அவை தாமாகவே தோன்றக்கூடிய ஆற்றல் அவற்றிற்கு இல்லை. எனவே, அவை அனைத்தும் ஒருமூலப்பொருளில் இருந்தே தோன்றியிருக்கவேண்டும். படைப்பவன் ஒருவன் தன்னிடமிருந்து இவற்றைத் தோற்றுவித்திருக்கிறான். ஆகவே, படைப்பவனாகிய இறைவன் உலகப் பொருள்கள் அனைத்தையும் உண்டுபண்ணியிருக்கிறான் என்பது விளங்குகிறது.

நாம் என்ன பார்க்கிறோம்? உலக உயிர்கள் ஆண் பெண் வடிவங்கொண்டு விளங்குவதைப் பார்க்கிறோம். தோற்றத்துக்கு வந்த பொருள்கள் ஆண் பெண் வடிவங்கொண்டு விளங்குமானால் அவற்றின் தோற்றத்துக்குக் காரணமான மூல பரம்பொருளும் அதே ஆண் பெண் இயல்பைக்கொண்டுதானே விளங்கமுடியும்; விளங்க வேண்டும். தர்க்க வாதத்துக்குப் பொருந்தும் முறையும் இதுதானே.

மூலப்பொருள் காரணம்; அதிலிருந்து தோன்றிய பொருள்கள் காரியம். காரண காரிய நியாயப்படி பார்த்தாலும் இது முழுவதும் பொருத்தமாகும். காரணத்தில் உள்ள குணங்கள் காரியத்தில் அமைந்திருப்பது நியாயந்தானே.

மிகப் பழங்காலத்திலேயே நம் முன்னோர்கள் இவ்வாறு சிந்தித்து விளக்கிப் பொருள்களின் அமைப்பு உண்மை கண்டு கூறியிருப்பது வியக்கத்தக்கது; நாம் பெருமைப்படத் தக்கது.

எனவேதான் சம்பந்தர், "பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என்கிறார். உலகப் பொருள்களின் உண்மைத் தன்மையை உள்ளவாறு கண்டு கூறியவர் ஆகிறார் சம்பந்தர்.

உலகத்தைப் படைத்த ஆதிசக்தி இரண்டு வகை அலைவுகளைக் கொண்டது; அந்த அலைவுகளாகவே திகழ்கிறது. ஒன்று நேர்கோட்டில் செல்லுவது; மற்றொன்று வட்ட வடிவில் சுழன்று செல்லுவது. "(The whole material Universe is resolved into two kinds of waves; a kind which goes round and round in circles, and a kind which travels in straight line. P. 68. The Mysterious Universe by Sir James Jeans.) என்று அறிஞர் ஒருவர் கூறுவது இங்கே கருதத்தக்கது.

இறைவன் ஆணாகவும், பெண்ணாகவும் விளங்குகின்றான். ஆதலின் உயிர் இனங்களும் ஆணாகவும், பெண்ணாகவும் விளங்குகின்றன என்று காரணகாரிய முறைப்படிப்பார்த்தோம்.

இறைவன் ஏன் அவ்வாறு ஆணாகவும், பெண்ணாகவும் விளங்குகின்றான்? இவ்வாறு இறைவன் ஆணாகவும், பெண்ணாகவும் விளங்குவதைப் பற்றி நம் முன்னோர்கள் சிந்தனை செய்திருக்கிறார்களா? சிந்தனை செய்து எத்தகைய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள் என்பதைப்பற்றிச் சிறிது பார்ப்போம்.

இறைவன் ஆணாகவும், பெண்ணாகவும் விளங்குவதைப் பற்றி நம் முன்னோர்கள் மிக நுட்பமாகச் சிந்தனை செய்து தங்கள் கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இறைவனுக்கு மூன்றுவகை வடிவங்கள் உள்ளன. 1. போகவடிவம் 2. யோகவடிவம் 3. வேகவடிவம் என்பன அவை. அம்மையப்பராகக் காட்சி தரும் வடிவம் போக வடிவம். இப்போக வடிவத்தை மனதிலே எண்ணி வழிபடுகின்றவர்கள் உலக இன்பத்தை அனுபவிப்பார்கள் என்று வேத நூல்கள் கூறுகின்றன. அன்றியும் அவர்களைத் தீவினைப்பயன்கள் ஒன்றும் செய்யமாட்டா; பகைவர்களால் வரும் துன்பமும் இல்லை என்பதும் ஆன்றோர்களின் கருத்தாகும்.

எனவே, உயிர்கள் அனைத்தும் உலக இன்பங்களை அனுபவிப்பதற்கும், வினைப்பயன்களில் இருந்து நீங்குவதற்கும் இறைவன் சிவ-சக்தி சொருபமாக விளங்குகின்றான்.

அன்றியும், மற்றொரு காரணத்தையும் சொல்லுவார்கள். இறைவனுடைய ஞானம் மெய் உணர்வு எனப்படும். இவ்ஞானம் உயிர்களுக்கு அருளைச் செய்யும். அவ்வாறு அருள் செய்யும் ஞானம் சிவசக்தி வடிவம் ஆகும். இதனைப் பராசக்தி என்றும் கூறுவார்கள்.

செயலற்று உறக்க நிலையில் கிடக்கும் உயிர்களைத் தோற்றத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்காக, மேற்குறிப்பிட்ட ஞானம் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற பஞ்ச கிருத்தியங்களையும் செய்கிறது. இவ்வாறு ஐந்தொழிலைச் செய்து

உயிர்களின் போக்கு, வரவுகளைக் கட்டுப்படுத்தும் போது அந்த ஞானம் ஆதிசக்தி அல்லது திரோதான சக்தி என்னும் பெயரைப் பெறுகிறது. இத்திரோதான சக்தி தனது செயலைச் செய்யும்போது, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என மூன்று வகையாகப் பிரிந்து நின்று செயலைச் செய்யும்.

செம்பில் களிம்பு படிந்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அவ்வாறு படிவது இயற்கையாகும். ஆனால் அந்தக் களிம்பை நீக்கிவிடலாம். அது போல, உயிர்களிடத்தில் மலம் என்ற மயக்கநிலை இயல்பாகவே அமைந்துள்ளது. அம்மலத்தைப் பரிபாகம் (நீக்கம்) செய்து, அவ்வுயிர்களைச் சிவமாகவே ஆக்க வேண்டும் என்பது முதல்வனாகிய இறைவனின் விருப்பம். உயிர்கள் மீது கருணை கொண்டு இத்தகைய விருப்பம் கொள்கிறான் இறைவன்.

இறைவனுடைய இந்த விருப்பத்திற்கு இச்சாசக்தி என்று பெயர். "சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" என்பது மணிவாசகர் வாக்கு. உயிர்களுக்குச் சிவத்தன்மை அளிப்பது எப்படி? என்று அதற்கான உபாயங் கண்டறியும் இறைவனது சக்தி ஞான சக்தி எனப்படும். அப்படிக் கண்டறியும்போது, வேண்டியவற்றை மட்டுமே செய்வான்; அவ்வாறு வேண்டியவற்றை மட்டுமே செய்யும் இறைவனுடைய கொள்கை கிரியா சக்தி எனப்படும்.

எனவே, உயிர்களின், மலவாதனையைப் போக்கி, சிவமாம் தன்மை அடைவதற்காகவும் இறைவன் சக்தியோடு கூடி விளங்குகின்றான். "பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என்ற சம்பந்தரின் பொருள் பொதிந்த வாக்கைச் சிந்திக்கவேண்டும். சக்தியோடு கூடி, ஆண் பெண் வடிவத்துடன் விளங்கும் சிவபெருமானைப் போற்றினால், "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் எண்ணின் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவு இல்லை." இவ்வுலகில் நல்ல முறையில் வாழ் வாங்கு வாழலாம்; நல்லகதி கிடைப்பதற்கு ஒரு குறையும் இல்லை என்கிறார் சம்பந்தர்.

உண்மைதான்; இறைவன் நம்மை வாழ வைக்க வேண்டும் என்ற பெருநோக்கு உடையவன்; சுயநலம் இல்லாதவன்; அருளே வடிவானவன். இந்த நம்பிக்கையோடு வாழ வேண்டும். நம்பிக்கை தான் ஒருவனை வாழ வைக்கிறது.

தமிழ் மொழியில் செய்யுள் வகைகளும், செய்யுள் இனங்களும் உண்டு. அவை பல வகையில் அமைந்துள்ளன. குறிப்பிட்ட ஒன்றிரண்டு இனங்களே உண்டு என்ற குறைபாடு இல்லை. சான்றோர்கள் தம் எண்ணங்களைப் பல வடிவங்களைக்கொண்ட சொல் ஓவியங்களாகப் பாடி இருக்கிறார்கள்.

ஆறு, ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் தமிழ் மொழிக்கு விசேட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஏனென்றால், அதற்கு முந்திய ஒன்றிரண்டு நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் களப்பிரர் என்ற இனத்தாரின் ஆட்சி நடைபெற்று வந்தது. அவர்கள் காலத்தில் தமிழ்நாடு எல்லா வகையிலும் தாழ்ச்சிஅடைந்திருந்தது. அக்காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் "தமிழகத்தின் இருண்ட காலம்" என்கிறார்கள். திருக்கோவில்களில் வழிபாட்டு முறைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. தமிழ் மொழி ஆதரிப்பார் இல்லாமல் தாழ்வு அடையக் கூடிய காலமாக இருந்தது.

இக்காலத்தில் தான், கடவுள் அருளால் வந்து தோன்றியவர்கள் தேவார ஆசிரியர்கள். தேவார ஆசிரியர்கள் தமிழுக்குச் சிறப்பிடம் கொடுத்தார்கள். மக்களுக்குப் பழக்கமான ஒரு மொழியில் பக்தி மார்க்கத்தைப் பெருக்கி வளர்த்தார்கள். மக்களுக்குத் தெரிந்த சொற்களைக் கையாண்டு பாடினார்கள்; மக்கள் எளிமையில் கைக்கொள்ளத்தக்க நல்ல பழக்கங்களைத் தங்கள் பாடல்களால் விளக்கினார்கள். மக்களின் உள்ளத்தைக் கவரும் இசைத் தமிழைக் கருவியாகக் கொண்டு பக்தி நெறியை வளர்த்தார்கள். புதிய நோக்கிலும், புதிய கோணத்திலும் அவர்களுடைய சமுதாயப் பார்வை அமைந்திருந்தது. இதற்கு ஏற்றவாறு தேவாரப் பாடல்களைப் புனைந்தார்கள்.

அவ்வாறு அமைக்கப்பட்ட பாடல் திருஇருக்குக் குறள். வேதத்தில் சாகை என்ற பெரும் பிரிவு உண்டு. இந்தப் பெரும் பிரிவுகளுக்குள் இருக்கும் உட் பிரிவு 'இருக்கு' மந்திரம் எனப்படும். சுருக்கமான சொற்களைக்

கொண்டு நிறைந்த பொருளை விளக்குவது 'இருக்கு' ஆகும். அந்த இருக்குபோல, சுருக்கமான சொற்களைக் கொண்டு, நிறைந்த பொருளை விளக்குவது திரு இருக்குக் குறள் ஆகும்.

"கல்லா நெஞ்சின், நில்லான் ஈசன்; சொல்லாதாரோடு, அல்லோம் நாமே" என்று பாடுகிறார் சம்பந்தர். கல்லா நெஞ்சில்-இடைவிடாமல் தியானிக்காத உள்ளத்தில் ஈசன் நிலைபெற்றிருக்கமாட்டான்; அரனுரின் திருநாமத்தை அஞ்செழுத்தை ஒரு தரமேனும் கூருதவர்களுடன் நாங்கள் சேரமாட்டோம்.

ஒருவர் வைத்துள்ள தொடர்பை வைத்தே அவருக்கு உயர்வோ தாழ்வோ வந்து சேர்கிறது. தாழ்வு வந்து சேர யாரும் விரும்பமாட்டார்கள். உயர்வு வந்துசேரவே விரும்புவார்கள். நாம் உயர்ந்த பொருளுடன்தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும். உயர்ந்தபொருள் எது? உலகத்தில் கடவுளைத் தவிர உயர்ந்தது எதுவும் இல்லை. உயர்ந்த பொருளாகிய கடவுளோடு தொடர்புகொள்ளும்போது நாமும் உயர்ந்து இறைநிலையை அடைகிறோம்.

எவ்வாறு இந்நிலை கைகூடுகிறது? சிவபெருமானுடைய சட்சு தீட்சையினுலேயும், மானஸ தீட்சையினுலேயும் ஆன்மாக்கள் என்று சொல்லப்படுகின்ற உயிர்களிடத்திலே அமைந்துகிடக்கும் மும்மலங்கள் வலிமை நீங்குகின்றன. அவ்வாறு நீங்கும்போது, சிவனைப் போல, எண்குணங்களும் ஆன்மாக்களிடத்து வந்து சேருகின்றன. அப்பர் பெருமான், "எண்குணத்துளோமே" - எட்டுக் குணங்களை உடையவர்களாயிருக்கிறோம் என்கிறார்.

இந்நிலையைப் பெரியோர்கள் ஓர் உவமானத்தாலும் விளக்கியுள்ளார்கள். "அப்பினிடை உப்பாயணைவது போலும்"—அப்பு என்றால் தண்ணீர். ஒரு படி தண்ணீரில் ஒரு படி உப்பைக் கலக்கும்போது இரண்டுபடி ஆகாது. ஒரு படியே ஆகும். அதுபோல, ஆன்மாவும் அரனும் கூடிய காலத்தில் இரண்டு நிலை அற்று ஒரே நிலை அடைகிறது. அதுவன்றியும், உப்பு சொரூபம் மாறி தண்ணீரின் சொரூபத்தை அடைகிறது. அதுபோல, ஆன்மா தன் சொரூபத்தை இழந்து, சிவமாகவே ஆகிறது. இறைவன் புகழையும் பெருமையையும் கூறித் துதிப்பவர்கள் இறைமயமாகவே ஆகிவிடலாம் என்பது ஆன்றோர்கள் கூறியதிலிருந்து புலனுகிறது. ஆகவே சம்பந்தர், இறைவன் புகழையும், பெயரையும் சொல்லித் துதிக்காதவர்களோடு சேரமாட்டோம் பேசமாட்டோம் என்கிறார். "நின்றும்இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை, என்றும் சிவன்தாள் இணை" என்ற ஆன்றோர் மொழியும், இங்கே கருதத்தக்கது.

திருஞானசம்பந்தப் பெருமானுக்குப் பெற்றோர் திருமணம் செய்விக்க விழைகின்றனர். திருப்பெருமண நல்லூரில் நம்பியாண்டார் நம்பிகளின் திருமகளை மணம் பேசுகின்றனர். திருமணம்புரிய இசைந்த ஞானசம்பந்தர், நல்லூர்ப் பெருமணத்துக்கு வருகின்றார். மண்ணவரும், விண்ணவரும், யாவரும் திருமணக் கோலம் காண அவ்வூருக்கு வந்து சேர்கின்றனர். மணக்கோலத்திலிருந்த ஞானசம்பந்தருக்கு, தம் குழவிப்பருவத்தில் காட்சி கொடுத்ததும் எம்பெருமான்; இப்போதும் அத்திருவருள் காட்சி தமக்குக் கிடைக்கக்கூடும் என்ற உணர்வு ஏற்படுகிறது. தமது பிறவிப்பாசம் தீர்வதோடு, தம் திருமணத்தைக் காண வந்த அனைவரும் பிறவிப்பாசம் நீங்கி வீடுபேறு அடைதல் வேண்டும் என உணர்கின்றார். அப்போது, திருநல்லூர்ப் பெருமணக் கோவிலில் எழுகின்றது இந்த நமச்சிவாயத் திருப்பதிகம்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

— உள்ளத்திலே பேரன்புகொண்டு, மனம் நெக்குருகி, கண்களில் இருந்து கண்ணீர் நிறைந்து வழிய, இடையருது சொல்லிக் கொண்டிருப்பவர்களை நல்ல நெறியாகிய வீடு பேற்றை அனுபவிக்கும்படிச் செய்வது நமச்சிவாய என்ற பஞ்சாட்சர மந்திரம் ஆகும். நான்கு வேதங்களும் உணர்த்துகின்ற உண்மைப் பொருளாக விளங்குவது நமச்சிவாய மந்திரம் ஆகும். நாதனுகிய சிவபெருமானின் திருநாமம் நமச்சிவாய மந்திரம் ஆகும்.

இடம்-திருப்பெருமணநல்லூர்த் தலம் ஆகும். நேரம்—திருஞானசம்பந்தப் பெருமான் திருமணம்புரியும் நேரம் ஆகும். இந்த நேரத்தில், நமச்சிவாயத் திருப்பதிகத்தை ஏன் பாடினுர்?

நமச்சிவாய என்ற பஞ்சாட்சரம் ஓதுவது பற்றித் தத்துவ விளக்கம் கூறுவார்கள். வேப்பம் பழத்தைத் தின்ற புழு, கரும்பைத் தின்னுகின்ற சமயத்தில், பழக்க தோஷத்தினல், முன் தின்ற வேப்பம் பழத்தை நோக்கி நிற்கும். அது போல, பக்குவம் அடைந்த ஆன்மாக்களுக்குச் சிவஞானம் உண்டான சமயத்திலும் கூட ஏற்கெனவே அமைந்துள்ள மல வாசனையால், தன்னுடைய பழைய சிற்றுணர்வையே நோக்கி நிற்கும். ஆதலால் அவ்வாசனையை நீக்குவதற்கு நமச்சிவாய என்ற பஞ்சாட்சரத்தை அவ்வான்மா சிந்தித்து ஓதும். பதியாகிய இறைவனை ஞானக்கண்ணல் நாடிக் கண்ட பிறகு, அவ்விடத்தில் முக்தி பஞ்சாட்சரமாகிய பிரணவத்தைப் பொருள் விளங்கும்படி ஆன்மாவானது ஓதும். ஐந்து எழுத்து ஓதுகின்ற முறையால், உயிர் சிவ பெருமானுக்கு உடைமைப் பொருள் ஆவதை உணருகிறது. அவ்வாறு உணர்ந்து, அஞ்செழுத்தினல் அமைந்த இறைவன் திருமேனியில் கொல்லாமை, பொறி அடக்கம், பொறுமை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் எட்டு மலர்களைத் தூவி வழிபடுகிறது. அஞ்செழுத்து ஓதி, குண்டலினி ஸ்தானமாகிய நாபி (தொப்புள்) யிலிருந்து ஞானக்கினியை எழுப்பி, புருவ நடுவில் நிறுத்தி நினைத்து, இறைவன் விளங்கித் தோன்றுவதை உணருகிறது. அச்சமயத்தில் அவ்வுயிரும் இறைவனுக்கு அடிமையாக விளங்குகிறது என்று விளக்கம் கூறுவார்கள்.

இங்கே, இத்தத்துவ விளக்கத்தோடு, சம்பந்தர் பஞ்சாட்சரப் பதிகம் பாடிய சந்தர்ப்பத்தையும் நினைத்துப் பார்ப்போம். சம்பந்தர் ஏற்கெனவே இறைவன் திருவருள் காட்சி பெற்றவர்; சிவஞானம் கைவரப்பெற்றவர். உலக வாசனையாகிய திருமணம் செய்வித்தல் என்ற வாசனை அவரை இழுக்கிறது. ஆனல் அவ்வாசனையில் அழுந்தும் எண்ணம் அவருக்கு இல்லை. அவ்வாசனையை ஒழிக்க அவர் எண்ணுகின்ருர். எனவே, முக்தி பஞ்சாட்சரத்தை ஓதுகிருர். அவ்வாறு ஓதுகின்ற பொழுது அவர் சிவபெருமானுக்கு உடைமைப் பொருள் ஆகிவிடுகிருர். பதிகம் பாடுகிருர்; பாடியதுமே எல்லாரும் முக்திநிலை எய்துகின்றனர்; பரமானந்தப் பெருஞ்ஜோதியில் திருமணத்திற்கு வந்திருந்தார் அனைவரும் கலக்கின்றனர். இறுதியில் சம்பந்தப் பெருமானும் தம் துணைவியாருடன் திருவருள் ஜோதியில் கலக்கின்ருர்.

சம்பந்தரின் ஆன்மா இறைவனேடு ஐக்கியமாகிறது.

"கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவார் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.''

கொலைத் தொழிலைச் செய்யும் கொடிய மனம் உள்ளவர்களாக இருந்தாலும் சரி, நல்ல குணங்கள், பல நல்லொழுக்கங்கள் ஆகியவை இல்லாதவர்களாக இருந்தாலும் சரி, திரு ஐந்தெழுத்தாகிய பஞ்சாட்சரத்தை உள்ளன்போடு, இடையருது ஓதுகின்றவர்கள், எல்லாத் தீங்குகளிலிருந்தும் நீங்கி, விடுவார்கள் என்று சான்ருேர்கள் கூறுவார்கள்'' என் கிருர் சம்பந்தர்.

[நன்மையும், தீமையும் கலந்ததுதான் உலகம். மனித மனத்தில் நலம், கேடு இரண்டும் நிறைந்துள்ளன.] கொலைத் தொழிலாகிய பாவச் செயலை மேற்கொண்டவர்களும் உலகில் வாழ்கிருர்கள்; தீய பண்பு உடையவர்களும் வாழ்கிருர்கள். ஓர் ஆத்மாவாக உலகில் வந்து பிறந்த இத்தகையவர்களுக்குக் கடைத்தேறும் வழியே இல்லையா? கடைத்தேறும் வழி இல்லாமல் போனல், இத்தகைய ஆத்மாக்கள் துன்பச் சூழலில் கிடந்து எப்போதும் உழல வேண்டியிருக்கும்.

இறைவன் கருணைப் பெருக்கு உடையவன். தீயோரையும் கடைத்தேற்றும் பேரருளாளன். தீயவர்களும் நல்லவர்களாக மாற வழி வகுத்துள்ளான். அத்தகைய வழிகளை ஞானிகள் மூலமாக உலக மக்களுக்கு உணர்த்தியிருக்கிருன். இடைவிடாது, உள்ளன்போடு பஞ்சாட்சரமந்திரத்தை ஓதுபவர்கள் யாராக இருந்தாலும் சரி; எல்லாத் தீமைகளில் இருந்தும் விடுபடுவார்கள் என்று நம் முன்னேர்கள் அனுபவத்தில் உணர்ந்து கூறி இருக்கிருர்கள். அதையே சம்பந்தப் பெருமான் இங்கே கூறுகிருர். 'சிவ சிவ என்கிலர் தீவினையாளர்; சிவ சிவ என்றிடத் தீவினைமாளும்' என்பது ஆப்தவாக்கியம்.

ஔவியம் பேசேல்

(சுவாமி துருவானந்தர்)

கதிர்வேல் நிரம்பக் கற்ற பண்டிதர். பரம் பரைச் சொத்தாக ஒரு வீடும் கொஞ்சம் நில மும் வைத்து அனுபவித்து வந்தார். கபட மறியாத மனிதர். மனைவியோ அவருக்கு நேர் மாறானவள். தமிழ் ஆசிரியருக்குண்டான தகுதி யனைத்துமிருந்ததால் அவ்வூர் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினர்.

அவருடைய புலமையை அறிந்த சிலர் அவரி டம் பாடம் கேட்டுவந்தனர். பாடம் கேட்ட வர்களில் சிலர் நல்ல அந்தஸ்தில் இருந்தால் தன்னிடம் பயிற்சி பெற்றதால்தான் அத்த கைய உயர்ந்த அந்தஸ்து அவர்களுக்கு வந்தது என்று எல்லாரிடமும் பெருமையாகச் சொல் லிக் கொள்வார். பாடங்கேட்டவர்களுள் மெய் யப்பனும் ஒருவன். சிறுவயது முதலே தாய் தந்தையை இழந்து நிராதரவாயிருந்த மெய் யப்பனை அவனது பாட்டனர் வளர்த்து வந்தார். பையன் வளர்ந்து விடவே கதிர் வேலுவிடம் தன் பேரனைக் கவனித்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு வணிகத்தின் பொருட்டு மலேயா சென்றார். அவனுடைய செலவுக்காக மாதம் தவறாது பணம் அனுப்பி யும் வந்தார். சிறுவன் மெய்யப்பன் போஷ கராக இருந்த கதிர்வேலுவிடம் மிக்க மரியாதையாக நடந்துகொள்வான். ஆனல் அவருடைய மனைவியோடு அனுசரித்துப் போவது அவனுக்குப் பெரும்பாடாக இருந் தது. கதிர்வேலுவுக்கு முத்து என்ற ஒரு மகன் இருந்தான். பெயருக்குத் தகுந்தபடி முத்தாக இல்லை. தாயினுடைய சிறந்த வாரி சாக வளர்ந்திருந்தான். வாழ்வின் பிற்பகுதி யில் கதிர்வேல் கண்ணியமானவராகத் திகழ்ந் தாலும், வாலிபனயிருந்த பொழுதெல்லாம் மனம் போனபோக்கில் போனவர். தீயநெறி யில் வீழ்ந்து மாண்டுவிடாமல் அவரைத் திருத்தி மனிதராக வாழச் செய்தவர் அவரு டைய ஆசிரியர். அந்த நன்றியை நினைக்குந் தோறும் கதிர்வேலுவின் அந்தராத்மா சாந்தி யடையும்.

''மேலைத் தவத்தளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்.'' இது சான்றோர் கூற்று. பொருள் ஒன்று வாங்க விரும்புபவர்கள் அதற் குரிய விலைகொடுத்தாக வேண்டும். அருள் செல்வம், பொருள் செல்வம், குழந்தைச் செல்வம் இப்படியாக மனிதனுக்கு உதவக் கூடியது செல்வமாக மதிக்கப்படுகிறது. தனக்கு நல்ல புத்திரன், புத்திரி அமைய வேண்டும் என்று விரும்புகிறவர்கள் அதற் குரிய வாழ்க்கை முறையை அனுஷ்டித்தாக வேண்டும். உழைக்காத சோம்பேறி ஒருக் காலும் பொருளீட்ட முடியாது. முறையாகக் கல்வி பயிலாத எந்த மாணவனும் நிறைய மதிப்பெண் பெறமுடியாது. உழைப்பிற்கேற்ப ஊதியம் கிடைக்கும்.

வீட்டுக்கும், நாட்டுக்கும் பெருமை தேடித் தரக்கூடிய பிள்ளைகள்வேண்டும் என்று எந்தக் கணவனும் மனைவியும் எண்ணிப்பார்ப்பதில்லை. அப்படி விரும்புகிறவர்கள் முதலில் தங்களைக் காம எண்ணத்திலிருந்து விடுபட்டவர்களாக ஆக்கிக்கொள்ளவேண்டும். சுயநலம் போய் பிறர் நலம் பேணும் பண்பை வளர்த்துவர வேண்டும். இறைவழிபாட்டில் தீவிரமாக ஆழ்ந்து போனல்தான் இத்தகைய நல்ல எண் ணங்கள் வளர்ந்துவரும். சத்தியத்திலிருந்தும், தர்மத்திலிருந்தும் அவர்கள் அணுவளவும் பிசகலாகாது. புத்தகங்களில் காணுகிற நீதி களை அவர்கள் தங்கள் வாழ்வில் கடைப்பிடித் தாகவேண்டும். இதுவே முதல் நிபந்தனை. இதைமட்டும் வயது வந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் விடாது கடைப்பிடித்து வருவார் களானல் அவர்கள் தம்பதிகளாகி அவர் களுக்குப் பிறக்கும் புத்திரன் அல்லது புத்திரி பண்பில் தலைத்தரமாகத்தான் இருக்கும். பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் என்பது வெறும் விளைபொருளுக்குமட்டும் கூறிப்போன அறவுரையன்று. மனிதரின் பிறப்புக்கும் இது பொருந்தும். ''தாய் தந்தை நல்லவர்களாக இருந்து குணக்கேடன் அல்லவா குடும்பத்தில் தோன்றியுள்ளான் என்று தாற்காலிக நிலையை எண்ணி அங்கலாய்க்கும் பெரியோர்களும் உண்டு, 'விதை ஒன்று போட சுரை ஒன்று வருமா' என்ற பழமொழியில் பொருள் மிக

உண்டு. அப் பெற்றோர்களின் முந்தைய வாழ்க்கையை எண்ணிப் பார்த்தால் ஓரளவு சமாதானம் அடையலாம். கதிர்வேலுவுக்குப் பிறந்த முத்துவும் அவனுடைய இயல்பின் வடிவமாக அமைந்தான் என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

சில ஆண்டுகளுக்குப் பின் மெய்யப்பனின் பாட்டனர் அவனை மலேயா வரும்படி எழுதியிருந்தார். பண்டிதரின் ஆசியோடு பாட்டனரைப் பார்க்கப் போனன் மெய்யப்பன். அங்கு சில மாதங்கள் இருந்துவிட்டுத் தனக்குரிய கொஞ்சபணத்தை அவரிடமிருந்து வாங்கிவந்து வியாபாரத்தை நடத்துவதில் முனைந்தான். அவன் ஆரம்பித்த கொஞ்ச நாளில் வியாபாரம் அபிவிருத்தி அடைந்தது. அதிருஷ்டதேவதை அவன் பக்கம் இருக்கிருள் என்றெல்லாம் பாமரர் பேசியதை எண்ணி மெய்யப்பன் நகைத்தான். தனக்குள் எண்ணினன். "ஒருவனுடைய எண்ணத்திற்கேற்ற படிதான் அவனுக்கு வாழ்க்கை வந்தமைகின்றது. தன்னம்பிக்கையோடு செயலை ஆரம்பிக்கிறவனுக்குத் தோல்வி என்பது உண்டா? தனது முயற்சியிலும், உழைப்பிலும், நம்பிக்கை வைக்கிருன் அறிஞன். கிரஹங்களின் சேர்க்கையிலும் ஜாதகத்திலும் நம்பிக்கை வைக்கிருன் பாமரன். அவனவனின் தலைவிதியை நிர்ணயிப்பவன் அவனவனே. மனிதன் நினைத்தால் மகோன்னத நிலைக்குச் செல்ல முடியும். ஆனல் அவ்வாறு நினைப்பதில்லை. தன்னைத் திருத்தியமைத்தால் தனது வாழ்வு பெருவாழ்வாக அமையும் என்ற உண்மையை உணராது மரத்தடியில் பட்சி சாஸ்திரம் பார்ப்பவனிடம் பத்துப் பைசா கொடுத்து அந்தப் பறவை எடுத்துக்கொடுக்கிற சீட்டில்தான் தன் வாழ்வு முழுதும் அடங்கியிருக்கிறது. அதில் எப்படி எழுதப்பட்டுள்ளதோ அப்படித்தான் தன் வாழ்வு மாறியமையும் என்று நம்பும் பாமரர் இருக்கும் வரையில் நாட்டுக்கும் வீட்டுக்கும் முன்னேற்றமெங்கே?" தீவிரமான சிந்தனையில் மூழ்கியிருந்த மெய்யப்பனின் இதயம் இப்படியெல்லாம் பேசிக்கொண்டிருந்தது.

மரம் பழுத்தால் வட்டமிடும் பறவைகளைக் காண முடியும். பணம் பெருகப்பெருகத் தங்களை உறவினர் என்று சொல்லிக்கொண்டு அவனேடு உறவாட வந்தவர்கள் ஏராளம். உலகம் அறிந்த மனிதன் அவன். முகஸ்துதிகளுக்கும், போலிப் புகழ்ச்சிகளுக்கும் வசப்படாது தனது வியாபாரத்தில் கண்ணும் கருத்துமாயிருந்து வந்தான். ஆனல் பழைய தொடர்பான பண்டிதர் கதிர்வேலுவின் உறவை மட்டும் அவனல் துண்டித்து விடமுடியவில்லை. உரியகாலத்தில் மணம் செய்துகொண்டான். சில ஆண்டுகளில் மகன் ஒருவன் பிறந்தான்.

பண்டிதரின் உடலுக்கு நலிவு ஏற்பட்டது. நடமாட்டம் குறைய ஆரம்பித்தது. அவ்வப்போது அவரைப் பார்த்துப் பொருளுதவியும் பண்ணிவந்தான் மெய்யப்பன். ஆனல் அவனிடம் பொருளுதவிபெற பண்டிதரின் மனம் விரும்பவில்லை. காரணம் 'ஏற்பது இகழ்ச்சி' என்ற பொன்னுரையின் பொருளை உணர்ந்ததுதான்.

கீழ்நிலையிலிருந்த ஒருவன் தன் உழைப்பின் மூலம் மேல் நிலைக்கு வந்தால் அந்த முயற்சியைக் கண்டு பாராட்டுவது பண்பட்டவரின் பாங்கு. ஒருவன் அடைந்த ஆக்கம், பெருமையைக் கண்டு யார் சகிக்காது வயிறு எரிகிருர்களோ அவர்கள் பொருமைக்காரர்களாவார்கள். மெய்யப்பனின் உயர்வை எண்ணி எல்லாரும் பெருமை அடைந்தார்கள். ஆனல் பண்டிதரின் மனைவிமட்டும் பொருமையுடையவளாக இருந்தாள். படுத்தபடுக்கையாகக் கிடந்த கதிர்வேலன் மெய்யப்பனின் உயர்வை எண்ணி பெருமையாகப் பேசுவது தாய்க்கும் மகனுக்கும் பிடிக்கவில்லை.

"தன்னுடைய மகன் வேலைவெட்டி இல்லாது வீட்டிலே முடங்கிக் கிடக்கிருன். அனதை போன்று இருந்தவன் இன்று அரண்மனை வாழ்வு வாழுகிருன். இந்த மெய்யப்பனை நாம் எப்படியெல்லாம் கவனித்தோம். இப்பொழுது நம்மை ஒரு பொருளாக எண்ணுகிருனு?" என ஏங்கினள் பண்டிதரின் மனைவி. வெறுப்படைந்த உள்ளத்தில் ஏற்படுகிற எண்ணம் யாரைக் குறித்து எழுந்ததோ அவர் உள்ளத்திலும் ஒருவித வெறுப்பைத் தோற்றுவிக்கிறது.

நாள் செல்ல செல்ல மெய்யப்பன் பண்டிதர் வீட்டுக்கு வருவதைக் குறைத்துக்கொண்டான்.

ஆனல் உதவி மட்டும் தடையில்லாது நடை பெற்று வந்தது.

மனிதனின் அமைப்பில் முக்கரணங்கள் முக்கியமான பகுதி. மனே, வாக்கு, காயத்தால் செய்யும் கர்மம் மனநிலேயை முன்னிட்டு புண்ணிய கர்மம், அல்லது பாபகர்மம் ஆகிறது. வெந்து புண்ணன அவள் உள்ளத்தில் ஏற்பட்ட வெறுப்பு செயலாக வடிவெடுக்கும் தருணம் நெருங்கியது. வெறுப்பினல் ஒருவன் விவேகத்தை இழக்கிருன். மெய்யப்பனின் சிறு குழந்தை தெருவில் விளேயாடிக் கொண்டிருந்தது. அக்குழந்தையைப் பார்த்தமுத்து வெறுப்படைந்தான். இத்தனே நாள் சேர்ந்திருந்த வெறுப்பு அக்குழந்தையைக் கொன்றுவிட எண்ணியது. விஷம் கலந்த பாலேக்கொண்டு வந்து குழந்தையை அழைத்தான். குழந்தை அவனருகே வந்து கொண்டிருந்தது. அந்தக் குழந்தையிடத்தில் விளேயாடுவது போன்று பாசாங்கு செய்து கொண்டிருந்தான். என்றைக்கும் வராத மெய்யப்பனின் குழந்தை இன்று தன் வீட்டில் தன் மகனேடு விளேயாடுவதைப் பார்த்த பண்டிதரின் மனேவியின் உள்ளம் பொருமையால் எரிந்தது. தன் மகன் நிலேயையும், மெய்யப்பனின் வளமான நிலேயையும் சீர்தூக்கிப் பார்த்து வாயால் ஏதேதோ புலம்பிய வண்ணம் சென்று கொண்டிருந்தாள். அவனுடைய தாய்க்குத் தெரியாது விஷம் கலந்த பாலே அக்குழந்தைக்குக்கொடுத்தான் முத்து. பண்பட்ட பெற்ருேரின் பராமரிப்பில்,கட்டுப்பாடான பயிற்சிகள்பெற்று வளரும் குழந்தைகள் யார் எது கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். பெற்ருேர் அனுமதி அளித்தால்தான் அவர்கள் பிறரிடமிருந்து பொருள்களே வாங்குவார்கள். மெய்யப்பனின் குழந்தையும் முத்து வற்புறுத்திக் கொடுத்த பாலேச் சாப்பிட மறுத்தது.இந்த ஏழை வீட்டில் சாப்பிட்டால் உன் அப்பன் குடியா முழுகி விடும். விருப்பம் இருந்தால் சாப்பிடு. இல்லேயென்ருல்வீட்டுக்கு ஓடு. அடே, எதற்காகக் குடிக்கும்படி வற்புறுத்துகிருய்? தாய்தந்தையர்கள் நம் வீட்டில் எதுவும் சாப்பிடக் கூடாது என்றுசொல்லியிருப்பார்கள். அந்தக் குழந்தை இங்கு வருவதே தவறு. முதலில் அக்குழந்தையை நம் வீட்டைவிட்டு துரத்து என்று அனல் தெரித்ததுபோன்று எரிந்து கொட்டினுள் வீட்டுத் தலேவி. வேறு எதுவும் செய்ய முடியாத முத்து அந்தப் பாலே எடுத்துக் கவனமாக ஜன்னல் ஓரத்தில் மூடிவிட்டு அக்குழந்தையை வெளியே இழுத்துச் சென்ருன். தன் மகன் தனியே எடுத்து வைத்திருந்த பாலே அந்தக் குழந்தையின் பிடிவாதத்தை விமர்சனம் பண்ணிக் கொண்டே குடித்துவிட்டாள். குடித்த பிறகு தலே சுழல ஆரம்பித்தது, கண் பூத்தது. கூப்பாடு போட்டு அலற ஆரம்பித்தாள். விரைவாக ஓடிவந்த மகன் முத்து தாய் வாந்தி எடுத்துக்கொண்டு உருண்டு புரளுவதைக் கண்டு 'கோ'வெனக் கதறினன். உண்மையை அறிந்துவிட்டான்.வீடுமுழுதும் கூட்டம் கூடிவிட்டது. குழந்தையைத் தேடிக்கொண்டு வந்த மெய்யப்பனின் மனேவி விஷயத்தைப் புரிந்து கணவனுக்குத் தெரிவித்தாள். விருப்பு வெறுப்பற்ற மெய்யப்பன் வந்து பார்த்தான். பண்டிதரின் மனேவி பிணக்கோலமாகக் கிடந்தாள். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்றபடி தாயின் சவத்தைப் பார்த்த முத்து "நான் குழந்தைக்குக் கொடுக்க இருந்ததை நீ எடுத்துக்குடித்து மரணத்தை வரவழைத்துக் கொண்டாயே"என்று உண்மையை அறியாது உளறிவிட்டான். அக்கம் பக்கத்தவர் மெய்யப்பன் உள்பட அனேவருக்கும் விஷயம் தெளிவாயிற்று. முத்து கைது செய்யப்பட்டான். பொருமை என்னும் நோயை வளர்த்து வந்த அவனுடைய தாய் அந்த நோயாலேயே மரணத்துக்கு ஆளானுள். மரணத்தோடு போராடிக் கொண்டு படுக்கையிலேயே கிடந்த பண்டிதர் கதிர்வேலுக்கு எதிர்பாராத இந்நிகழ்ச்சியால் ஆவிபிரிந்தது. கையில் விலங்கு பூட்டப்பட்ட முத்து சிறைக்குப் போனன். பிணமாக இருந்த இருவரைத் தூக்கிச் செல்ல உற்ருர் உறவினர்கள் கூடிவிட்டனர். 'ஔவியம் பேசேல்' என்ற ஆப்த வாக்கியத்தின்படி நடவாது பொருமைக்கு இடம் கொடுத்ததால் தாயும், மகனும் அடைந்த நிலேயை எண்ணி மெய்யப்பனும், ஊராரும் கண்ணீர்விட்டனர். இவர்களுடைய வாழ்வு பொருமைக் குணம் படைத்தவர்களுக்கு முன் மாதிரியாகட்டும்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி : (139) மனம், ஜீவாத்மன் ஆகிய இரண்டுக்கும் விளக்கம் என்ன ? ஜீவன் சரீரத்தோடு கூடியிருப்பதற்குக் காரணம் என்ன ?

ஆலம் விதையினுள் எது இருந்ததோ அதுவே ஆலவிருக்ஷமாகத் தோன்றி வருகிறது. ஆலவிருக்ஷம் நம் கண்ணுக்குத் தெரிகின்ற ஸ்தூலப்பொருள். விதையினுள் இருக்கும் ஆலவிருக்ஷம் நம் கண்ணுக்குத் தெரியாத சூக்ஷ்ம சக்தி. விதை உள்ளளவும் ஆலவிருக்ஷம் ஸ்தூலமாகத் தோற்றத்திற்கு வரமுடியும்; சூக்ஷ்மமாக விதையினுள் ஒடுங்கியும் கிடக்கும். விதையை நசுக்கி அழித்து விட்டால் அதன் பிறகு ஆலமரத்துக்குத் தோற்றமும் இல்லை; ஒடுக்கமுமில்லை. ஜீவனுடைய வினை ஆலம் விதையைப் போன்றது. வினை ஸ்தூலமாக வடிவெடுக்கும் பொழுது பூதவுடல் கண்ணுக்குத் தெரிகிறது. வினை சூக்ஷ்மமாக இருக்கும் பொழுது அது மனம் என்னும் பெயர் பெறுகிறது. வினையின் ஸ்தூல அமைப்பை உடல் என்றும், வினையின் சூக்ஷ்ம அமைப்பை மனம் என்றும் பகரலாம். வினையை நாசம் செய்கிறபொழுது சரீரமும் இல்லை; மனமும் இல்லை. உடலுக்குப் பூதாகாசம் இருப்பிடமாக இருக்கிறது. காற்று இல்லாது உடல் நிலைத்திருக்காது. வெப்பம் இல்லாது உடல் ஜீவித்திருக்காது. நீரில்லாதும் உணவு இல்லாதும் உடல் வாழ்ந்திருக்க முடியாது. பஞ்ச பூதங்களாகிய ஆகாசம், வாயு, அக்கினி, அப்பு, பிருதுவி ஆகிய ஐந்தின் ஸ்தூல சேர்க்கையே சரீரமாகிறது. பஞ்சபூதங்களின் சூக்ஷ்ம அம்சம் அந்தக்கரணமாக இருக்கிறது. ஆகாசத்தின் சூக்ஷ்ம அம்சம் உள்ளமாக இருக்கிறது. வாயுவின் சூக்ஷ்ம அம்சம் மனமாக வேலை செய்கிறது. மனம் வாயுவைப்போல் சதா அலையும் தன்மையுடையது. புத்தி அக்கினியின் சூக்ஷ்ம அம்சமாக இருக்கிறது. அக்னி புறப்பொருளை விளக்கிக் காட்டுவதுபோன்று புத்தி நல்லது எது கெட்டது எது என்பதை விளக்கிக் காட்டுகிறது. சித்தம் அப்புவின் சூக்ஷ்ம அம்சமாக விருக்கிறது. அஹங்காரம் பிருதுவியின் சூக்ஷ்ம அம்சமாகவிருக்கிறது. பஞ்ச பூதங்களின் சூக்ஷ்மமே மனதாக வேலை செய்கிறது. ஸ்தூலம் இடத்தில் அடைபடக் கூடியது. சூட்க்ஷ்மம் இடத்தில் அடைபடாதது. ஸ்தூலத்துக்கு வடிவம் உண்டு. சூக்ஷ்மத்துக்கு வடிவம் இல்லை. ஆகையால் ஸ்தூலமான சரீரத்தைப் பார்க்க முடியும். சூக்ஷ்மமான மனதைப் பார்க்க முடியாது. மனது உணர்வு மயமாகவிருக்கிறது.

ஆத்மா என்பது அனைத்துக்கும் ஆதாரமான நித்தியவஸ்து. சூரியன்பூமியைவிடப்பன்மடங்கு பெரியது. ஆனல் நம் கண்கொண்டு பார்க்கும் பொழுது மிகச் சிறியதாகத் தென்படுகிறது. நம் கண்ணல் காணப்படுகின்ற சூரியன் உண்மை சூரியன் என்ருலும் அதன் முழு பிரகாசத்தையும், முழுதோற்றத்தையும் நம் கண்களால் காணமுடியாது. கண்ணடிக்குள் சூரியனுடைய பிம்பத்தைக் காண்கின்ருேம். கண்ணடிக்குள் சூரியன் அடங்கியிருப்பதுபோன்று தென்படுகிறது. ஆனல் அது கண்ணடிக்குள் அடங்கிவிடுவதில்லை. மனதுக்கும், சரீரத்துக்கும் கட்டுப்பட்ட நிலையில் இருக்கும் ஆத்மன் ஜீவாத்மன் எனப்படுகிருன். உண்மையில் ஆத்மன் சரீரத்திலும் மனதிலும் கட்டுப்பட்டதன்று. சரீர உணர்வையும், மனதையும் கடந்து அப்பால் இருப்பது எதுவோ அதுவே ஆத்மாவாகிறது. சரீரத்திலும் மனதிலும் கட்டுபட்ட நிலையில் இருக்கிற வரையிலும் நாம் ஜீவாத்மாக்கள் என்று அழைக்கப்படுகிருேம். சரீரம் மனது என்னும் உபாதிகளைக் கடந்து அப்பால் சென்று விட்டால் நாம் பரமாத்வாகின்ருேம். கடல் நாமரூபம் எடுக்கும்பொழுது அலை எனப்படுகிறது. நாம ரூபத்தைக் கடந்த நிலையில் கடல் கடலாகவே இருக்கிறது. பரமாத்மா நாமரூபம் எடுக்கும்பொழுது ஜீவாத்மா எனப்படுகிறது. நாம ரூபத்தைக் கடந்த நிலையில் பரமாத்மா பரமாத்மாவாகவே இருக்கிறது.

வினைக்கு வசப்பட்டு அக்ஞானத்தில் இருக்கின்ற வரையிலும் ஜீவன் சரீரத்தோடு கூடி இருக்கின்ருன். அக்ஞானத்தை அகற்றி வினையிலிருந்து விடுபடுகின்ற ஜீவன் சரீரத்தினின்றும் விடுபடுகிருன்.

தீவினை அச்சம்

(சுவாமி ஸதானந்தர்)

தன் தேவைகளை எல்லாம் பெற்றோரிட மிருந்து பெற்று வாழ்க்கையை இன்பமாகக் குழந்தைகள், மாணக்கர்கள், வாலிபர்கள் நடாத்தி வருகிறார்கள். உலகைப் பற்றிய அனுபவம், ஞானம் அவர்களிடம் இன்னும் வளரவில்லை. பொறுப்பும், தானே சம்பாதிக்க வேண்டிய நிலையும் இல்லை. அவர்கள் உலகம் இன்பமயம், சொர்க்கம் என்று கருதுகிறார் கள். இது ஒரு கொள்கை. முதியோர்கள் வாழ்க்கையில் நிறைந்த அனுபவங்கள் அடைந் துள்ளார்கள். ஏமாற்றம், தோல்வி, நோய், துன்பங்கள், ஏதோ சிறு இன்பம், ஏதோ சில வெற்றிகள் இவைகளை யெல்லாம் அடைந் துள்ளார்கள். அவர்களது அனுபவத்தின் சாராம்சமாக, உலகைப் பற்றிய அவர்களது மனப்பான்மை ஒன்று உண்டு. அது உலகம் துன்பம் நிறைந்தது, ஏமாற்றம் நிறைந்தது என்பது. இது இரண்டாவது கொள்கை. அப்படியானால் இவ்வுலகம் உண்மையில் இன்ப மானதா, துன்பம் நிறைந்ததுதானா என்ற கேள்வி எழுகிறது. அதற்கு ஸ்ரீ ராமகிருஷ் ணர் உபமானம் ஒன்று சொல்லியிருக்கிறார். பூனையின் பல் துன்பமானது என்று எலி சொல் லும். அதைப்போன்று சுகமானது வேறு எது இருக்க முடியும் என்று பூனைக்குட்டி சொல் லும். இவ்வுலகம் துன்பம் ஒன்றுமட்டுமே நிறைந்ததும் அன்று, இன்பம் ஒன்றுமட்டுமே நிறைந்ததும் அன்று. இரண்டின் கலப்பானது. ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போல இன்பதுன்பம் இருக்கின்றன. ஒன்றைப் பிரிந்து மற்றொன்று இல்லை. இவை இரட்டைக் குழந்தைகள். வேதாந்தத்தில் இவை துவந்து வங்கள், இருமைகள் எனப்படுகின்றன.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

என்பது குறள். எதிலிருந்தெல்லாம் அவன் இன்பத்தை எதிர்பார்க்கவில்லையோ, எதி லிருந்து விலகியிருக்கிறானோ அதிலிருந்து அவனுக்குத் துன்பம் இல்லை. துன்பத்தைத் தவிர்க்க வேண்டுமானால் இன்பத்தையும் தவிர்க்க, துறக்க வேண்டும். இன்பத்தை அனுபவித்தால், அதற்கு விலையாக துன்பத் தையும் அனுபவித்தாக வேண்டும். இதைவிட வேறு வழியில்லை.

புலன்கள் மூலம் இன்பம் அனுபவிக்கிறோம். அளவுடன் இருக்கும்போது அவைகளில் பெரும் துன்பம் இல்லை. வெறிபிடித்த பாங் கில் இன்பங்களை அனுபவிக்கும்போது அது தீராத நோயாக வடிவெடுக்கிறது. தினை யளவு இன்பம் அனுபவிக்கப் பனையளவு துன்பம் அதற்கு ஈடாக அனுபவிக்க வேண் டும். வாழ்க்கை துன்பம் நிறைந்தது. ஆசை யிலிருந்து அத்துன்பங்கள் வருகின்றன. ஆசையை ஒழித்துவிட்டு நேர்மையான நடுவழி யில் வாழ்ந்தால் நிர்வாணம் அடையலாம். அதாவது துன்பத்திலிருந்து நாம் நிரந்தரமாக விடுதலையடையலாம். இது புத்தரது போதனை. ''காமம், குரோதம், லோபம் ஆகிய மூவித வாயில்களை உடையது நரகம். இவை ஜீவனைக் கெடுக்கும் தன்மையன. ஆகையால் இம் மூன்றையும் துறத்தல் வேண்டும்.'' (கீதை 16-21) வாழ்க்கையில் ஒரு பக்கம் இன்ப நாட்டம், மறு பக்கம் வாழ்க்கையைத் துன்ப துயரங்கள் வாட்டுகின்றன. இன்ப நாட்டத் தில் ஏற்படுகிற போட்டிகளே காமம், குரோதம், லோபம் எனப்படுகின்றன. உலகில் தெய்வ சம்பத்தும் அசுர சம்பத்தும் சேர்ந்தே படைக்கப்பட்டிருக்கின்றன. தெய்வ குணங் கள் வாய்ந்தவர்கள் தேவர்கள் என்றும், அசுர குணங்களையுடையவர்கள் அசுரர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். உயிர் வாழ்க்கையைப் பாற்கடல் என்று புராணம் உருவகப்படுத்து கிறது. அந்தப் பாற்கடலைத் தேவர்களும் அசு ரர்களும் கடைந்த வண்ணம் இருக்கிறார்கள். அதில் இன்பமும், துன்பமும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இவ்வுலக நிகழ்ச் சியைப் புராணம் அங்ஙனம் பகர்கிறது.

மனிதரில் விலங்குபோன்றவன் இருக்கிறான். அவன் மிகுந்த சுயநலம் வாய்ந்தவன். மற்ற வர்களைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. புலி மான் ஒன்றை அடித்துச் சாப்பிடு வதுபோன்று அவன் யாருக்கும் எத்தகைய

துன்பத்தையும் விளைவித்துத் தன் ஆசையைப் பூர்த்திசெய்துகொள்வான். அப்படிப்பட்டவர்களால் சமுதாயத்தில் அமைதி கெடும்; தீமை நிலவும்; ஒழுக்கம், நீதி, நேர்மை தவறும். இன்று பொருளாதாரஏற்றத்தாழ்வுகளைப்பெரிதாகப் பேசி, நல்ல போக்கிலும், கெட்ட போக்கிலும் அவற்றைப் போக்க முயலுவதை விட, முதலில் மக்களை ஒழுக்கத்தில் மேலேகொண்டு வர முயன்றிருந்தால் பல திட்டங்கள் உருப்படியாகச் செயல்பட, நிறை வேற அது வழி கோலி இருக்கும். உலகில் எல்லாவற்றிலும் ஏற்றத்தாழ்வு இருக்கிறது; துன்பங்கள், தீமைகள் இருக்கின்றன. தீயவர்கள், சுயநலக்காரர்கள் இருக்கிறார்கள். இதைத் தனிமனிதன், அரசியல், சான்றோர் வெல்ல முயன்று வந்திருக்கிறார்கள். தனிமனிதன் தீமையை வெல்ல பலம் வாய்ந்தவனாக இருக்கவேண்டும். அவன் பலம் வாய்ந்தவனாக ஆகத் தீமையை அவன் எளிதில் வெல்லமுடியும். தீமையே அவனைக் கண்டு பயப்படும் அளவுக்கு அவன் பலம் வாய்ந்தவன் ஆகவேண்டும். அரசியல், நீதித்துறை, காவல் துறை இவைகள் மூலம் தீயவர்களுக்குப் பயத்தை ஊட்டி அவர்களை அடக்கிவைத்திருக்கிறார்கள். இது சரியாக, நீதியாக, நேர்மையாக நிகழும் வரையில் அவ்வரசியல் சமூகத்தை ஆளும் வலிமை, பேறு, வாய்ப்பு உள்ளதாக இருக்கும். அது தவறும் விஷயத்தில் அத் தீவினையே அவர்களை மாய்த்துவிடும். சான்றோர்கள் மனிதனது அகக்கண்ணை, உள்ளுணர்வைத் தொட்டு ஆளையே மாற்றியமைக்க முயலுகிறார்கள். அந்த மாற்றமே தலையாய, உத்தமமான மாற்றம் ஆகும். 'அறஞ் செய விரும்பு' என்று அறத்தில் விருப்பத்தை வளர்க்கிறார்கள். 'பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்' 'மொழிவது மறுக்கின் அழிவது கருமம்' 'தீயாரைக் காண்பதும் தீதே' என்று தீமையினிடத்துப் பயத்தையும், வெறுப்பையும் வளர்க்கிறார்கள். மானிடரில் பல்கோடிவிதமானவர்கள் இருக்கிறார்கள். உலகில் ஏற்படக்கூடிய தீமையை அடியோடு துடைத்துவிட முடியாது. அதற்கு வேறு வழி என்ன? போலீஸ் காவலில் அது கட்டுப்பட்டுவிடாது. மனிதனையே தீவினைக்கு அஞ்சும்படி, வெறுக்கும்படி செய்துவிட்டால் அது நல்ல ஏற்பாடு அல்லவா? இந்த முயற்சியே நீதி நூல்கள் யாவும் ஆகும். நரகம், நரக வேதனை, மறுமையில் துன்பம் என்றெல்லாம் புராணம் விளக்குவதும் இதற்குத்தான். இன்ன தப்பு செய்தால் இன்ன தண்டனை என்று வர்ணித்துள்ளார்கள். அதனைப் படிக்கவே பயமாய் இருக்கும். எவ்வளவு இன்பம் தருவதானாலும் இவ்வளவு தீமை, வேதனை விளைவிக்கக்கூடிய தீச்செயலைப் பின் யார்தான் செய்வார்கள்? நீதி போதனையில் இது ஒருமுறை.

தீவினையச்சம் என்பது திருக்குறளில் 21வது அதிகாரம். அதில் உள்ள 10 குறள்களின் பொழிப்புரை வருமாறு: 1) பிறர்க்குத் தீங்கு விளைவிக்க அசுர இயல்புடையவன் அஞ்சமாட்டான். நல்லவனே அஞ்சுவான். 2) தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும். 3) தம்மை வருத்துபவருக்கும் பிரதி தீங்குசெய்யாமல் இருப்பதைச் சான்றோர் அறிவினுள் எல்லாம் தலையாய அறிவு என்பார்கள். 4) பிறருக்குக் கேட்டைத் தரும் தீய செயல்களை ஒருவன் மறந்தும் எண்ணக் கூடாது. எண்ணினால் எண்ணியவனுக்குக் கேடு விளையுமாறு அறம் எண்ணும். 5) யான் ஏழை என்று நினைத்து தீய செயல்களைச் செய்யக் கூடாது. செய்தால் மேலும் வறியவன் ஆகி வருந்துவான். 6) துன்பம் செய்யும் தீவினைகள் தன்னை வருத்துதலை விரும்பாதவன் தான் பிறர்க்குத் தீங்கு செய்யாமல் இருக்கவேண்டும். (முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். தன்வினை தன்னைச்சுடும்) 7) எவ்வளவு கொடிய பகை உடையவரும் ஒரு வகையில் தப்பி வாழலாம். ஆனால் தீயவை செய்ததால் வரும் தீவினைப் பயனிலிருந்து தப்ப முடியாது. அது வருத்தியே தீரும். (பாபத்தையும் பாதரசத்தையும் ஜீரணம் செய்ய முடியாது) 8) ஒருவனது நிழலை எப்படித் தவிர்க்க முடியாதோ அப்படித் தீய செயல்களைச் செய்தவர் அதன் பயனாகிய கேட்டினின்று தப்பவே முடியாது. 9) ஒருவன் தன் நலத்தில் நாட்டமுடையவனாயின் அதற்கு ஒரே வழி, எத்தகைய தீய செயலும் செய்யாதிருத்தல் வேண்டும். 10) ஒருவன் யாருக்கும் எவ்விதத் தீங்கும் செய்யாதிருப்பானாயின் அவனைக் கேடு இல்லாதவன்,

தீவினைப் பயன் அற்றவன் என்று அறிந்து கொள்க.

தீவினை, தீவினை என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருடுதல், பொய் பேசுதல், கள் குடித்தல், பிறன்மனை விழைதல், நன்றி மறத்தல், துரோகம், கோபம், சூது, லோபம், லஞ்சம், கலப்படம் போன்றவை தீவினைகள் எனலாம். எண்ணத்திலும் தீவினை, செயலில் தீவினை இரண்டுமே தகாது. தனக்குத்தானே தீங்கு செய்துகொள்ளலாம், தன் குடும்பத்தார், ஊரார், உலகுக்குக் கெடுதல் செய்பவனாக இருக்கலாம். வர்ணாச்ரமதர்மத்தில் மேலே போனவர்கள் தீங்கு செய்தால் அதன் தீய பயன் சமூகம் முழுவதையும் பல தலைமுறைகளுக்கு சென்று தாக்கும். Divide and rule என்று ஆங்கில அரசாட்சி செய்து வைத்த பாதகம் இன்னும் எத்தனை தலைமுறைக்கு இந்தியா சிரமப்பட வேண்டி வருமோ? புறமதத் துவேஷத்தை வளர்த்தது இன்னும் தீங்கு விளைவித்துக்கொண்டே இருக்கிறது. அரசியல்வாதிகள் கிளப்பிவிட்ட காதுக்கு இனிய சுலோகங்கள் இன்னும் சமூகத்தைப் பீடித்துக் கொண்டிருக்கின்றன. சிருஷ்டியில் தீமையும் ஒரு பகுதி, அம்ஸம். பசி, தாகம், தூக்கம், அறியாமை, மரணம் போன்று தீமையும் அத்யாவசியம். அது உயிர்களுக்குப் பாடம் புகட்டுகிறது; பலமடையச் செய்கிறது. நிலைமையைச் சமாளிக்கும் புத்தியைத் தருகிறது. நன்மை மனிதனைப் பக்குவப்படுத்துவதைவிடத் தீமை மனிதனை அதிகம் பக்குவப்படுத்தி இருக்கிறது. சிருஷ்டியில் ராமன்—ராவணன், யுதிஷ்டிரன்—துர்யோதனன், தேவர்—அசுரர் ஆகிய யாவரும் இருக்கின்றனர். இதில் யார் இல்லாவிட்டாலும் உலக வாழ்வு குறைபாடு உடையதாக இருக்கும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜடிலன் குடிலன் இருவரும் இல்லாமல் நாடகமே இல்லை என்பார்.

தீமையைப் பற்றிய மற்றொரு உண்மை உண்டு. கடவுள் நன்றுடையான், தீயது இலான். இயற்கைத் தன்னைத் தானே தூய்மைப்படுத்திக் கொண்டு இருக்கிறது. பஞ்சபூதங்களையும் மாசுபடுத்த முடியாது. அவை தாமே தூய்மைப்படுத்திக்கொண்டிருக்கின்றன. போர் மூண்டால் எவ்வளவு உயிர்ச்சேதம், பொருட்சேதம் உண்டாகிறது? அதையெல்லாம் நஷ்டம் என்றோ வீண் என்றோ கருதுவதில்லை. தனி மனிதனுக்குச் சிறு சொத்துப் போனது நஷ்டமாக இருக்கலாம். ஆனால் தேசம் பூராவையும் தொகுத்துப் பார்க்குமிடத்து அது நஷ்டமல்ல, சேதமல்ல. ஒரு லக்ஷியத்தை, மானத்தைக் காத்த உயிர் கொடுத்த தியாகச் செயல் அது. அதேபோல் இயற்கை முழுவதையும் தொகுத்து நாம் சீர் தூக்கினால், நஷ்டம், சேதம், மலம், தீமை என்று எதையுமே சொல்ல முடியாது. மனது பண்பாட்டில் மிக மேலே போகப்போகத் தீமையை எதிலுமே காண்பதில்லை. தீதே அவர்கள் கண்ணில் படாது. அது மிக உயர்ந்த நிலை. அதுவே நமது லக்ஷியம். யுதிஷ்டிரனால் குருவின் கட்டளைப்படி ஹஸ்தினபுரத்தில் ஒரு கெட்ட மனிதனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அது அவனது குண மேம்பாடு. ஸ்ரீ சாரதா தேவியாராலும் பிறரிடம் உள்ள குறைகளைக் காணமுடியாது. அவர் அம்பிகையிடம் அங்ஙனம் பிரார்த்தித்துக் கொண்டார். அவரது போதனையும் அத்தகையதே. 'குழந்தாய்! நீ மன சாந்தி அடைய விரும்பினால் நீ யாரிடமும் குறைகாணாதே. யாரையும் வேற்றாராகக் கருதாதே' இந்த ஒரு குணத்தினாலே அவர் தூய அன்னையார் ஆனார்; கருணமயி, கருணாம்பிகை ஆனார். தாயாரால் எங்ஙனம் தன் குழந்தையிடம் குறை காணமுடியும்! அவர்கள் எதற்காக அச்சப்படவேண்டும்? ஆசையற்றவனுக்கு அச்சமேது? அவனது அன்பே பக்தியே பூரணமானது. ஆங்கு வியாபாரம், பிரதி பலன் எதிர்பார்த்தல் இல்லை. ஆங்கு திரிகரணங்களாலும் உலகுக்கு நன்மையே வழங்கப்படுகிறது. அவர்கள் முன்னிலையில் தீய, மூர்க்கமான உயிர்களும் தம் தம் தீய இயல்புகளை மறந்து நிற்கின்றன.

வியவகாரிகசத்தில், நமது போராட்ட நிலையில், நமது நித்திய வாழ்வில் சதா சர்வ காலமும் தீமையோடு முட்டிக்கொண்டே இருக்கவேண்டியிருக்கிறது. இப்பிரபஞ்சத்தில் விரோதி இல்லாத உயிர் இல்லை. எல்லாஉயிரும் தம் தம் நிலையில் போராட வேண்டியிருக்கிறது. இப்போது எழுகிறது ஒரு குரல்: அச்சமில்லை, அச்சமில்லை, அச்ச

மில்லை; உச்சிமீது வான் இடிந்து விழினும் அச்சமென்பது இல்லையே. அச்சம் தவிர். பார்த்தா இழிவான இவ்வுள்ளத் தளர்வை உதறித் தள்ளி விட்டு எழுந்திராய். ஆண்மை யோடு வாழ்வாயாக. இச்செய்தியை வெளி யிடுகிறார் குரு க்ஷேத்திர கிருஷ்ணன். விவே கானந்த சுவாமிகளின் போதனை முழுவதும் ஒரு வரியில் சொல்லவேண்டுமானால் Message of strength என்பார்கள். பலம் வாய்ந்தவனாக ஆவாய் என்பதே அவரது செய்தியாகும். இத் தகையபலவானானல் தீமையேசெய்யமுடியாது. அவனுக்கும் யாராலும் தீமை செய்துவிட முடி யாது. நன்னெறி சமூகத்தில், உலகில் நிலை நிற்பதற்கு இது ஒரு வழி. பலஹீனர்களே பெரும் பாவங்களைச் செய்கிறார்கள். பலஹீ னமே பாபம் எனப்படுகிறது. பலமே புண்ணி யம், நல்வினை ஆகிறது. பலத்தின் முன் எல்லாத் தீமைகளும் அகன்றுவிடும்.

கடவுள் அபயகரம் தாங்கியவராக இருக் கிறார். யாமிருக்க பயம் ஏன்? வேலுண்டு பயமில்லை என்ற வாசகங்களைப் பார்க்கிறோம். பக்தி மார்க்கம் தீமையை வெல்ல அதன் போக்கில் வழிகளை வகுக்கின்றது. கடவுள் நினைவைப் பெரிதாக வளர்த்துவிட்டால் பிறகு வேறு சிந்தனைக்கு இடமில்லாது போய்விடு கிறது. எல்லார்க்கும் அவன் பிதா. அவனன்றி ஓர் அணுவும் அசையாது. எல்லாம் நன் மைக்கே. நன்றே செய்வாய், பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகம்! பக்தன் தீமை செய் தவருக்கும் நலன் செய்துவிடுகிறான். பக்த னது மனப்பான்மை சிறந்தது. எல்லாத் தீமை களையும் கடந்த நிலையில்தான் பக்தியே உரு வெடுக்கிறது. உயர்ந்த லக்ஷியத்தை மனதில் பதித்துவிட்டால், அதன் பொருட்டு முயலத் தூண்டிவிட்டால் அதைவிடச் சிறந்த மார்க்கம் என்ன இருக்கிறது! காலில் குத்தியிருக்கிற முள்ளை வேறு ஒரு முள்ளைக்கொண்டு அகற்ற வேண்டும். பிறகு அதையும் எறிந்து விடலாம். நல்வினையைக் கொண்டு தீவினையை அகற்ற வேண்டும். பிறகு நல்வினையையும் துறந்துவிட வேண்டும். இருள்சேர் இருவினையும் என்று பகரப்படுகிறது. அதாவது பாபம் புண்ணியம் இரண்டுமே வினைப்பயனை உண்டாக்குகின் றன. வினைப்பயனை அனுபவித்து முடிக்க வேண்டியதாகிறது. அதனால் பிறப்பு இறப்பு நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகை யால் இருள்சேர் இருவினை எனப்படுகிறது. அகங்காரமற்றவனாய், பற்றற்றவனாய், கர்த் ருத்வமற்றவனாய், இறைவன் ஆட்டுவித்த பிர காரம் ஆடுபவனாய் இருக்கிற பக்தனை எவ் வினையும் பந்தப்படுத்தாது. அவன் சரீரம் பிராரப்தம் முடியுமட்டும் ஏதோ வினையாற்றி ஓய்கிறது. அவனிடமிருந்து எவ்விதத் தீவினை யும் உண்டாவதில்லை. அவன் சமூகத்துக்கு அருளை வழங்குபவனாய், மனச் சாந்தியை வழங்குபவனாய் பெரிய வரப்பிரசாதமாய் இருப்பான். ஆரம்ப நிலையில் தீவினையச்சம் உடையவனாய் இருப்பவனுக்கு நல்வினையில் ஈடுபாடு வருகிறது. நல்வினையில் வளர்ச்சி யடைந்த பிறகு அவனால் தீவினை செய்யவே முடியாது. தீமையையே அவனால் காணமுடி யாத உயர்நிலைக்குப் போகிறான். எல்லாம் இறைவன் சொரூபமாகி விடுகிறது. மானுட வாழ்வின் உயர்ந்த லக்ஷியம் இதுவாகும்.

செய்திகள்

நிகழ்பவை

பிப்ரவரி மாதம் 16ஆம் தேதி புதன்கிழமை மகாசிவராத்திரி அன்று குருகுல மாணவர்கள் உபவாசமிருந்து இருபத்து நான்கு மணி நேரம் அகண்ட நாமபஜனை செய்வார்கள்.

பிப்ரவரி மாதம் 20ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை யன்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் திதிபூஜை. அன்று குருகுல மாணவர்கள் இருபத்து நான்கு மணி நேரம் அகண்ட நாமபஜனையும், பகல் 11 மணி முதல் 12 மணி வரை ஐக்கிய வணக்க மும் செய்வார்கள்.

பிப்ரவரி மாதம் 27ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை யன்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் ஜயந்திவிழா தபோவனத்தில் சிறப் பாகக் கொண்டாடப்படும். அன்று காலை 6 மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திருவுரு வப் படத்தைத் திருப்பராய்த்துறை சிவால யத்திற்கு நாமபஜனையுடன் குருகுல மாணவர் கள் ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். அன்று காலை 9 மணிக்குக் குருகுல மாணவர் களின் பெற்றோர் கூட்டம் ஸ்ரீ விவேகானந்த வித்யாவன உயர்நிலைப்பள்ளியில் நடைபெறும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

திருவாசகம்-மூன்ரும் பதிப்பு பிரசார விலை	ரூ. 14-00
ஸ்ரீமத் பகவத்கீதை-பதினைன்ரும் பதிப்பு பிரசார விலை	... 12-00
ஞானயோக விளக்கம்	... 8-00
ராஜயோக விளக்கம்	... 8-00
கர்மயோக விளக்கம்	... 7-00
பக்தியோக விளக்கம்	... 6-00
பரமஹம்ஸரின் பெருமை	... 4-50
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	... 4-00
விவேகானந்த உபநிஷதம்	... 4-00
கடவுளின் வடிவங்கள்	... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II	... 3-50
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்சரீ ஆரும் பதிப்பு-பிரசார விலை	... 2-75
தினசரி தியானம்-பதிமூன்ரும் பதிப்பு (பிளாஸ்டிக் உறையுடன்) பிரசாரவிலை	... 2-75
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம்	... 2-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	... 2-00
ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம்	... 2-00
கண்ணன் என்னும் கடவுள்	... 2-00
தாயுமானவர் இயற்றிய	
சின்மயானந்த குரு (விரிவுரை)	... 2-00
கருணைகரக்கடவுள் ஷை	... 2-00
மௌனகுரு வணக்கம் ஷை	... 1-50
பரசிவ வணக்கம் ஷை	... 0-50
சந்நியாசி	... 1-25
பஜனைப் பாடல்கள்	... 1-25
குழந்தைகளின் களிக்கூடம்	... 1-00
இராவணத் தத்துவம்	... 1-00
சகோதரி நிவேதிதை	... 1-00
ஹரிச்சந்திரன் (நாடகம்)	... 1-00
காயத்ரீ	... 1-00
வாலிமோக்ஷம் (நாடகம்)	... 1-00
அறம் வளர்த்த நம்பி	... 0-95
நோய்க்கு இடம் கொடேல்	... 0-80
நன்மக்களைப் பெறுதல்	... 0-80
தானவீரன் கர்ணன் (நாடகம்)	... 0-80
பாண்டவ கௌரவ பெருமை (நாடகம்)	... 0-80
பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்)	... 0-75
இறை வணக்கம்	... 0-75
*ஆத்ம சக்தி	ரூ. 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிருர்களா?	...0-75
*மனிதனது நிஜசொரூபம்	... 0-70
*சக்தி தத்துவம்	... 0-70
*சிவ தத்துவம்	... 0-70
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் (நாடகம்)	... 0-65
ப்ரஹ்லாதன் (நாடகம்)	... 0-65
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	... 0-60
இந்து மதமும் கிறிஸ்துவ மதமும்	... 0-60
*ஆலய வழிபாடு	... 0-60
ஸ்ரீ ராமகிருஷ்ணஷ்டோத்தர சத நாமாவளி:	... 0-50
சைவன் யார்?	... 0-50
*சூரிய நாராயணன்	... 0-50
*முருகக் கடவுள்	... 0-50
*விஷ்ணு தத்துவம்	... 0-50
மார்க்கண்டேயன் (நாடகம்)	... 0-40
தபோபலன் (நாடகம்)	... 0-40
*கணபதி	... 0-40
வர்ணச்ரம தர்மம்	... 0-30
அருள் விருந்து 1 முதல் 13 வரை ஒவ்வொன்றும்	... 0-30
பரசுராமர் கர்வ பங்கம் (நாடகம்)	... 0-15
The Bhagavad Gita (8th Imp.)	... 15-00
The Indian National Education	... 8-00
Sri Lalithambika Sahasranama Stotram	...8-00
Ramakrishna Lives Vedanta	... 5-00
Facets of Brahman or The Hindu Gods	... 5-00
Daily Divine Digest (with plastic-cover)	... 4-50
Mahabharata (with plastic cover)	... 4-50
Ramayana (do)	... 4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover)	... 3-00
The Bhagavad Gita (Small Size) (With plastic cover)	... 3-00
Sri Vishnu Sahasranama Stotram	... 2-50
Holy Bible—In the Light of Vedanta	... 1-50
*Introducing the Gita	... 1-50
*Key to Higher Life	... 0-75
*The Teacher	... 0-60
*The Student	... 0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபாற் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 3-00ம் மஞ்ஜரீக்கு ரூ. 2-40ம் தினசரி தியானத்திற்கு ரூ. 2-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை–639 115, திருச்சி Dt.


DHARMA CHAKRAM　　Regd. No. M. 6022

ஸ்ரீ ராமகிருஷ்ணர்

உபதேச மஞ்ஜரீ

தொகுத்தவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் பக்தர்களோடு உரையாடிய சம்பாஷணைகளினின்று பொறுக்கி எடுத்த 1426 உபதேசங்களைக் கொண்டது இப்புத்தகம் பகவத் கீதையைப் பினபற்றி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் பகுதியில் ஜீவாத்ம தத்துவமும் கர்மயோகமும் ராஜயோகமும் விளக்கப் பெறுகின்றன. இரண்டாவது பகுதியில் ஈசுவரன் அல்லது சகுணப் பிரம்ம தத்துவமும் பக்தி யோகமும் விளக்கப்பெறுகின்றன. மூன்றாவது பகுதியில் நிர்க்குணப் பிரமம தத்துவமும் ஞானயோகமும் விளக்கப் பெறுகின்றன. அதிகம் பொருள் வசதி இல்லாதவர்களும் இதை வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற நோக்குடன் ரூ. 5-00 விலையுள்ள இப்புத்தகம் ரூ 2-75க்குத் தரப்பெறுகிறது.

கிரௌன் சைஸ் பக்கம் 368　★　பிரசார விலை ரூ. 2-75

தபால் செலவு ரூ. 1-60

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115　　திருச்சி ஜில்லா

Edited by SWAMI NITHYANANDA,
Printed&Published by Swami Yogananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.